
கோகுலம்


GOKULAM

பிப்ரவரி '90 விலை ரூ. 3/-





GL/13C/203 TAM



கோகுலம்

1990 பிப்ரவரி மாத இதழ்
இதழ் 1

கோகுலம் வாசகர்கள் அத்தனைப் பேருமே கோகுலம் சிறுவர் சங்க அங்கத்தினர்கள்தாம்!

அன்புத் தம்பி, தங்கைகளே!

உங்களுக்கும் புத்தாண்டு புத்துணர்ச்சியும் புதுப்பொலிவும் பொழிந்திருக்கும் என்று நம்புகிறேன். எனக்கு நீங்கள் அத்தனையும் வழங்கியிருக்கிறீர்கள். அடேயப்பா, புத்தாண்டுக்குப் பொங்கலிட்டுப் படைத்த வாழ்த்துக்கள் எத்தனை எத்தனை! அத்தனைக்கும் தனித் தனியே பதிலும், பாராட்டும், நன்றியும் தெரிவித்துப் பதில் எழுதுவ தானால், அடுத்த கோகுல வேலையைக் கவனிக்க முடியாமல் போயிருக் கும். அதனால் வாழ்த்து நல்கிய அத்தனை பேருக்கும் பதில் வாழ்த்தும் நன்றியும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோகுலம் தனது ஏழாண்டுப் பிராயத்தை முடித்துக் கொண்டு இந்த இதழிலிருந்து எட்டாவது ஆண்டில் எட்டி அடி வைக்கிறது. குழந் தைகளிடம் பக்தி, பண்பாடு, படிப்பறிவு வளர வேண்டும் என்று அப்ப ழுக்கில்லாத ஆசையும் ஆர்வமும் கொண்டு ஆரம்பித்த நோக்கில் அடி நான் தொட்டு இன்றுவரை — ஏன், என்றுமே காலத்துக்கேற்ற மாற்றங் களை — புதுமைகளைப் புகுத்தித் தொண்டாற்றி வருகிறது கோகுலம்.

அதனால்தான் வளர்ந்து வரும் கோகுலத்துக்கு ஒரே ஒரு சிறுவர் சங்கம் என்று வைத்து, நீங்கள் அங்கத்தினராக வேண்டும் என்ற அமைப் பிலும் மாற்றம் செய்திருக்கிறோம். கோகுலம் வாசகர்கள் அத்தனை பேருமே கோகுலம் சிறுவர் சங்க அங்கத்தினர்கள்தாம்! வாசகர்களுக்கு அதிகப் பங்குதரும் ஒரே சிறுவர் பத்திரிகை கோகுலம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. உங்கள் தரமான எழுத்துக்கள் கோகுலத்தில் நிச்சயம் இடம்பெறும்.

உங்கள் ஊருக்குள் கோகுலம் வாசகர்கள் ஒன்று கூடி, 'கோகுலம் சிறுவர் சங்கம்' உங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அந்தச் சங்கத் தின் மூலம் எத்தனையோ விதமான சமூக சேவைகளைச் செய்யலாம்; மேடைப் பேச்சுப் பழகலாம்; கையெழுத்துப் பத்திரிகை நடத்தலாம். அப்படி ஆர்வமுள்ள கோகுலம் வாசகர்கள் குறைந்தபட்சம் இருபது அங்கத்தினர் கொண்ட சங்கம் பற்றி எழுதுங்கள். அந்தச் சங்கம் பற்றிக் குறிப்பிட்டு எழுதுகிறோம்; உங்கள் நடவடிக்கைகள் குறித்து விமர்சிக்கி றோம்.

அன்பு அண்ணன்,

தேசபந்து.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
— பாரதியார்.

என் உயிர்த்



டி. கோபகுமார்: கிரிக்கெட் விளையாடிக் கிட்டிருந்தோம். நான் பேட்டிங் செய்தேன். பந்து வீசிய நண்பன் என்னை எல். பி. டபிள்யு ஆக்கிவிட்டான். நான் அவுட்டில் லேன்னு சண்டை போட்டேன். அவனோ, விடாப்பிடியாக வாதாடி எனக்கு 'அவுட்' வாங்கிக் கொடுத்திட்டான். எனக்கோ செமை கோவம். ஸ்கூல் விட்ட உடனே, பௌல் பண்ணின பையன் மேலே பாய்ஞ்சு அவனைக் கீழே பிடிச்சுத் தள்ளிட்டேன். அவனுக்கு முட்டியிலே பெரிய காயம். அப்புறம்தான் எனக்குப் பயம் வந்தது. ரத்தம் ஒழுக, காலை விந்தி விந்தி நடந்தான் அவன். கீழே கிடந்த பேப்பரால ரத்தத்தைத் துடைச்சுக்கிட்டான். அவனோட அம்மா அவனை வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போக வந்தாங்க. 'சரிதான், இன்னிக்கு நாம வசமா மாட்டிக்கிட்டோம்; அவன், அம்மாகிட்ட, நான் கீழே பிடிச்சுத் தள்ளினதைச் சொல்வான்; அவங்க எங்க கிளாஸ் டீச்சர் கிட்ட ரிப்போர்ட் பண்ணுவாங்க; என் கை முட்டி ஒடியப் போகுது'ன்னு நினைச்சுப் பயந்தேன்.

எதிர்பார்த்தது மாதிரியே, 'கால்ல என்னடா காயம்?'னு அவனோட அம்மா பதறினாங்க.

நான் கொஞ்சம் தள்ளி நின்னுக்கிட்டு அவன் என்ன சொல்லப் போறாங்கிறதைக் கவனிச்சேன். மனசிலே படபடன்னு பயம். 'படியிலே எறங்கும்போது தடுக்கி விழுந்துட்டேம்மா!'ன்னு அவன் சொன்னான்.

எனக்கோ அதிர்ச்சியாக இருந்தது.

'என்ன அவசரம், மெதுவாத்தான் வந்தால் என்ன?'ன்னு அவனை அவன் அம்மா இட்டி ரிக்ஷாவிலே ஏத்திக்கிட்டு வீட்டுக்குப் புறப்பட்டாங்க.

போகும்போது அவன் என்னைப் பார்த்து நட்பாகச் சிரிச்சான். எனக்கு ரொம்ப வெட்கமாப் போச்சு. என்னை அன்னிக்குக் காட்டிக் கொடுக்காத அவனே என்னுயிர்த் தோழன். அதிலிருந்து நானும் யாருடனும் அனாவசியமாகச் சண்டைக்குப் போறதில்லை; பழி வாங்கறதில்லைன்னு தீர்மானிச்சுட்டேன்.



ஆர். ஹரிப்ரியா: எனக்கு ஜுரமாக இருந்தது. காய்ச்சல் அதிகமா இருந்தாலும் ஸ்கூலுக்குப் போனேன். அன்னிக்கு எனக்கு மிட்-டர்ம் டெஸ்ட் இருந்ததால எப்பாடு பட்டாவது டெஸ்ட் எழுதிடலாம்னு நினைச்சேன். ஆனால், ஸ்கூலுக்குப் போனப்புறம் டெஸ்ட் எழுத முடியாதபடி காய்ச்சல் அதிகமாயிடுச்சு. டீச்சர் கிட்ட பர்மிஷன் கேட்டுக்கிட்டு ரெஸ்ட் ரூமிலே போய்ப் படுத்துக்கிட்டேன்.

அப்போ என்கூட ஒரு தோழி வந்தாள். எனக்கு பிரெட் வாங்கிக் கொடுத்து மாத்திரை, வெந்நீர் கொடுத்து, என்னை ரொம்பவும் அன்பாய்க் கவனிச்சுக்கிட்டாள். 'நீ டெஸ்ட் எழுதப் போ,'ன்னு அவகிட்ட நான் எவ்வளவோ சொன்னேன்.

தோழன் தோழி

படங்கள்: பேட்டி:
பிரபுசங்கர்

பரவாயில்லை. உன்னைப் பார்த்துக்கிறதுதான் எனக்கு முக்கியம்'னு சொல்லி என் கூடவே இருந்தாள். அதோட, சாயங்காலம் என்னைப் பத்திரமா வீட்டுக்கு அழைச்சுக்கிட்டுப் போய் விட்டா. அந்த மாதிரி உதவிய என் தோழி, என்னுயிர்த் தோழியில்லாமல் வேறே யார்?•

எஸ். ஆனந்த்: என் ஃபிரெண்டுக்கு பர்த்டே. அவன் வீட்டிலே பார்ட்டி. எங்க எல்லோரையும் பார்ட்டிக்குக் கூப்பிட்டிருந்தான். போயிருந்தோம். பாட்டு, டான்ஸ்னு ஒரே ஜாலி. எல்லோருக்கும் கேக், பிஸ்கட், சாக்லேட் எல்லாம் கொடுத்தான் என் ஃபிரெண்டு. கடைசியிலே ஐஸ்கிரீம். என் ஃபிரெண்டுகளுக்கெல்லாம் கொடுத்துக்கிட்டே வந்தவன், நான் கைநீட்டியும் எனக்குத் தராம போயிட்டான்.

சரி, என்னைக் கவனிக்கலே போலிருக்கு: ரெண்டாவது ரவுண்டு வரும் போது தருவான்னு நினைச்சேன். அதோட, நானா வலியப் போய், 'எனக்கு ஐஸ்கிரீம் குடுடா'ன்னு கேட்க ரொம்ப வெக்கமா இருந்தது. பார்ட்டியெல்லாம் முடிஞ்சு எல்லாரும் போனப்புறம், ''ஏண்டா இப்படிப் பண்ணினே?''ன்னு அவன்கிட்ட நேராகவே கோவமாக் கேட்டேன்.



''ஆனந்த், கோவிச்சுக்காதே. ரெண்டு நாளா நான் உன்னைக் கவனிச்சுக்கிட்டுத்தான் வர்றேன். நீ நிறையத் தும்மினே; உனக்குக் கடுமையான ஜலதோஷம். அதனாலதான் உனக்கு நான் ஐஸ்கிரீம் தரலை. தப்பா நினைச்சுக்காதே. இன்னொரு நாள் உனக்குத் தனியா ஐஸ்கிரீம் தர்றேன், சரியா?''ன்னு ஆறுதலாய்ச் சொன்ன போது நான் அசந்துட்டேன்.

என் உடல் நலத்திலே அக்கறை கொண்ட அவன்தானே என் உயிர்த் தோழன்!


வி. ஸ்ரீவித்யா: என் தோழிகளுடன் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தேன். ஏதோ பேச்சுவாக்கில் எங்களுக்குள் திடீரென்று சண்டை மூண்டது. என்னைத் தனியே விட்டுவிட்டு அவர்கள் முன்னால் போய் விட்டார்கள். தனியே விடப்பட்ட நான் - சாயங்காலம் மறையவே பயந்துட்டேன். இருட்டிடப் போறதேன்னு பயந்துக்கிட்டு வேகமா நடை போட்டேன்.

அப்போ ஒரு நாய் என்னைப் பார்த்து 'உர்ர்'ன்னது — அவ்வளவுதான்; ஒரே உதறல் எனக்கு. பயத்துடன் அலறி அடிச்சுக்கிட்டு ஓடினேன். நாய் துரத்திச்சு.

அப்போ என்னை விட்டுட்டு முன்னால போன தோழிகள்ள ஒருத்தி தன்னோட வீட்டு வாசல்ல நின்னுக்கிட்டிருந்தா. நான் ஓடி வந்ததையும், என்னை ஒரு நாய் துரத்தினதையும் பார்த்த அவள், தன்னோட அண்ணன்கிட்ட சொன்னாள். அவன் அந்த நாயை விரட்டி அடிச்சான். என் கூடச் சண்டை போட்டுக்கிட்டு ஓடிப் போனாலும்,



எஸ். ஆனந்த்



கே. கார்த்திகேயன்

எனக்கு ஆபத்துன்னு தெரிஞ்சதும், என்னைக் காப்பாத்த முன் வந்தாளே, அவள் தான் என் உயிர்த் தோழி.

கே. கார்த்திகேயன்: ஹாக்கி மாட்ச் நடந்து கொண்டிருந்தது. வகுப்புகளுக்கு இடையே யான மாட்ச் அது. எதிர் அணி பையன் ஒருத்தன் எங்க அணி பையன் கால்ல ஹாக்கி ஸ்டிக்கால் அடிச்சுட்டான். எங்க ளுக்கு ஒரே கோவம்.

எதிர் அணியைச் சும்மா விடக் கூடா துன்னு அவங்கள்ல ஒரு பையன் கால்ல ஸ்டிக்கைக் கொடுத்து இழுத்துக் கீழே தள்ளிட் டேன். இதை ரெப்ரியா இருந்த டீச்சர் பார்த் துட்டார். என்கிட்ட வந்து, 'இப்படியெல் லாம் முரட்டுத்தனமா விளையாடினால் உனக்கு நான் கடுமையான பனிஷ்மெண்ட் தருவேன்'னு திட்டினாரு. எனக்கு வெட்க மாப் போயிடுச்சு.

அப்போ, என்னால கால் இழுபட்ட பையன் அவர்கிட்ட வந்து, 'அவன் வேணும் னுட்டுச் செய்யலே சார்; தற்செயலா ஸ்டிக் என் கால்ல பட்டுட்டது. அவ்வளவுதான்,' அப்படின்னு சொல்லி என்னைக் காப்பாத் தினான். அவனுக்கு மனசுக்குள்ளே நன்றி சொன்னேன். அதேசமயம், 'விளையாட்டில் பகைமையை வளர்த்துக்கக் கூடாது'ன்னும் தீர்மானம் பண்ணினேன். எனக்கு இந்த மனமாற்றத்தை ஏற்படுத்திய அந்த நண்பன் தான் என் உயிர்த் தோழன்.



டி. பிந்து

டி. பிந்து: பள்ளிக்கூடம் விட்டாச்சு. மணி அடிச்ச சப்தம் ஓயறதுக்குள்ளே எல்லாப் பசங்களும் ஆரவாரத்தோட வீட்டுக்குப் பறந்தாங்க. என் தோழியும் அன்னிக்கு ரொம்ப அவசரமா வீட்டுக்குக் கிளம்பிட் டிருந்தா. அன்னிக்கு அவங்க அப்பா அவளைச் சினிமாவுக்குக் கூட்டிகிட்டுப் போறதாகச் சொல்லியிருந்தாராம். புறப் படறபோது, பைக்குள் என் புத்தகங்களை யெல்லாம் சரிபார்த்து வெச்சிக்கிட்டிருந்த நான், என் பென்ஸில் பாக்ஸ் காணாமப் போயிட்டது தெரிஞ்சு திடுகிட்டேன். எங்கே போயிருக்கும், யார்கிட்ட கொடுத்தேன்னு யோசிச்சுக்கிட்டே டெஸ்க், கீழே எல்லா இடத்திலேயும் பரக்கப் பரக்கத் தேடினேன். கிடைக்கவேயில்லை.

இதைப் பார்த்த என் தோழி, எனக்காகத் தானும் தேடிப் பார்த்தாள். 'நீ வீட்டுக் குப் போ; உங்க அப்பா உனக்காகக் காத் திட்டிருப்பார்,'ன்னு நான் அவளை அனுப் பப் பார்த்தேன்.

அவளோ, 'பரவாயில்லை; உனக்குத் தேடிக்கொடுத்தப்புறம்போய்க்கறேன்,'ன்னு சொல்லி, எங்கிட்டேயிருந்து யார் பென்ஸில், பேனா, ரப்பரை இரவல் வாங்குவாங்கன்னு விசாரிச்சான்.

திடீரென்று எனக்கு ஞாபகம் வந்தது. பின் பெஞ்சிலேருந்து ஒரு பெண் பென்ஸில் இரவல் கேட்டபோது, 'எடுத்துக்க'ன்னு என் பாக்ஸையே தூக்கிக் கொடுத்திருக் கிறேன். 'யார் அவள்?' அப்படின்னு தோழி கேட்டாள்- சொன்னேன்.

'அவள் பஸ்ஸிலேதான் வீட்டுக்குப் போகிறாள்; ஸ்டாப்பிலே வெயிட் பண்ணி கிட்டிருப்பா, வா, போய்க் கேட்டுப் பார்க் கலாம்,'ன்னு சொல்லி எனக்கு முன்னால ஓடினா.

நானும் போய்ச் சேர்ந்த போது அந்தப் பெண் என்னுடைய பென்சில் பாக்ஸை என்னிடம் கொடுத்துவிட்டு, 'ரொம்ப ஸாரிடி,' என்றாள்.

நான் என் தோழிக்கு நன்றி சொல்லிட்டு, 'சீக்கிரம் போ, சினிமாவுக்கு லேட்டாயிடும், என்றேன்.

நான்கு மணிக்குத் துவங்கும் சினிமாவுக்கு அவளால் அன்னிக்குப் போக முடியலே. அன்னிக்கு அவ அப்பா அவளை ரொம்பக் கோபிச்சுக்கிட்டாராம். 'டிக்கெட் பணம் வேஸ்ட்,'ன்னு கத்தினாராம். 'என்னால தானே உனக்கு இவ்வளவு வசவு!' என்று அவளிடம் நான் வருத்தப்பட்டபோது, 'அதனால என்னடி; சினிமாவை இன் னொருநாள் பார்த்துக்கிட்டாப் போச்சு. உங்கிட்டேயிருந்து பாக்ஸ் வாங்கிட்டுப் போன பெண் அதை எங்கேயாவது தொலைச் சிட்டாள்னா, மறுபடி எவ்வளவு காசு கொடுத்து வாங்கணும்?' என்று அவள் பதில் சொன்ன போது, நான் ரொம்ப மகிழ்ந்து போனேன்.

அவளே என் உயிர்த் தோழி.


உங்கள் நம்பகமான ஃபாரெக்ஸ்
இப்போது, சுவையிலே சிகரம்!
உங்கள் குழந்தைக்கு நான்கு மாதம் ஆகும்போது அவனுக்கு புதிய சுவைமிக்க ஃபாரெக்ஸ் துவக்குங்கள். 3 முதல் 4 தேக்கரண்டி வெது வெதுப்பான நீரில் ஒரு தேக்கரண்டி ஃபாரெக்ஸ் கலந்து கொடுங்கள். ஃபாரெக்ஸ் சுவை மிக்கது. முன்னைவிட அதிக ஊட்டச்சத்து மிக்கது.
Delicious
Farex®
CEREAL WITH MILK
• சுவை மிக்கது
• ஊட்டச்சத்து மிக்கது
ஃபாரெக்ஸ்® - சுவையுடன் வளரும் வழி.
GX/66/203 TML

எல்லோரும் இன்புற்

உலகத்திலே மக்கள் பல வகைகளிலும் பலப்பல கருத்துடையவர்களாகவே இருக்கின்றார்கள். ஒருவர் விரும்புகின்ற உணவை மற்றொருவர் விரும்புவதில்லை. ஒருவர் விரும்புகின்ற பொருளை மற்றொருவர் விரும்புவதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நூலில் அளவு கடந்த விருப்பம். இப்படியாக ஒருவர் மனம் போல் மற்றொருவர் இருப்பதில்லை. கணவனுக்கும் மனைவிக்கும்கூடக் கருத்து வேற்றுமைகளுண்டு.

ஆனால் ஒரே ஒரு வகையில் மட்டும் எந்நாட்டவருக்கும், எக்குலத்தவருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. அனைவருக்கும் அந்த ஒன்றில் மட்டும் ஒற்றுமைப்பட்ட எண்ணமுண்டு. அது எது?

துன்பமின்றி இன்பமாக இருக்க வேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. பறவைகளும் விலங்குகளும் இப்படியே எண்ணுகின்றன. ஆனால், துன்பத்தைத் தொலைத்தவர்களும், இன்பத்தையடைந்தவர்களும் எங்குங் காண்பது அரிதாகவே இருக்கின்றது. அதற்குக் காரணம் துன்பத்தை நீக்கவும், இன்பத்தையாக்கவும் வழிவகையின்னதென்று திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளாததே.

நாம் வயலில் என்ன விதை விதைக்கின்றோமோ, அதுவே விளைந்து வந்து நாம் உண்ணக் கூடியதாக அமைகின்றது. அது போல், மனதாலும், வாக்காலும், காயத்தாலும் பிற உயிர்களுக்கு நன்மை செய்வோமாயின், நாமும் துன்பமின்றி இன்பமாக வாழ முடியும். அங்ஙனமின்றிப் பிற உயிர்கட்கு மனவாக்குக் காயங்களால், துன்பமே செய்வோமாயின் அவை அத்தனையும் நமக்கே வந்து சேரும்.

> ''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
> பிற்பகல் தாமே வரும்.
> நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம்
> நோய்செய்யார் நோயின்மை வேண்டுபவர்,''

என்பார் திருவள்ளுவர்.

நோயென்பதற்குத்துன்பமென்பது பொருள். ஆகவே நாம் பிற உயிர்கட்குத் துன்பம் செய்வோமாயின், நமக்கே துன்பத்தைச் செய்து கொண்டவர்களாக ஆகின்றோம். எனவே துன்பமின்றி வாழ விரும்புவோமாயின், நாம் பிற உயிர்கட்கு நிச்சயமாகத் துன்பஞ் செய்யக் கூடாது. இனி உயிர்களுக்குத் துன்



இருக்க...



பஞ் செய்யாமல் இருப்பதோடு அமைந்து விடக் கூடாது. இன்பமும் செய்ய வேண்டும். பிற உயிர்கட்கு இன்பஞ் செய்வோமாயின், அது நமக்கே இன்பமாக அமையும்.

"மன்னுயிர் ஓம்பி அருளால் வார்க்கு
இல் என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை."

என்கின்றார் திருவள்ளுவனார். ஆகவே எக்காலத்தும், தன்னுயிர் போல் மன்னுயிரை எண்ணி, அவைகளுக்கு வரும் இடையூற்றை நீக்கி நன்மை புரிய வேண்டும்.

நம்முடன் பழகும் பசு, எருது, எருமை, ஆடு, கோழி முதலிய உயிர்கள் நமக்குப் பல வகையிலும் உதவி புரிகின்றன. எருது உழுவதற்கும், பசு பாலும், சாணமும் கொடுத்தும் பயன்படுகின்றன. ஆடுகள் கம்பளத்திற்கு ரோமமும், வயலுக்கு எருவும் தருகின்றது. கோழி மணிக்கூண்டில் அலாரம் வைத்தது போல் வைகறையில் நம்மைத் துயில் உணர்த்துகின்றது. இங்ஙனமாக இந்தப் பிராணிகள் நமக்கு உதவி புரிகின்ற போது, அவைகளுக்கு நாம் செய்கின்ற உதவி என்ன என்பதைச் சிந்திக்கின்றோமா? உபகாரம் செய்யவில்லையானாலும், அபகாரமாவது செய்யாமலிருக்கின்றோமா?

கழுத்தில் புண் உள்ள மாட்டை, வண்டியில் கட்டி ஓட்டுவதும், ஓட்டுகின்ற மாட்டை மேலும் வேகமாக ஓட வேண்டுமென்று இரும்பு முள்ளால் குத்துவதும், அளவுக்கு மேற்பட்ட சுமையை வண்டியில் இட்டு எருதுகளை இழுக்குமாறு இம்சிப்பதும், மாடுகளுக்குப் போதுமான புல் முதலிய உணவுகளைத் தராமல் பட்டினி போடுவதும், எல்லையின்றி அவைகளுக்குத் தொல்லை கொடுத்து வேலை வாங்குவதும், கோழிகளைத் தலைகீழாகக் கொண்டு போவதும் கொடுமையினும் கொடுமை. இவைகளை நினைத்தால் கல்லும் கரையுமே! சிலர் மனம், கல்லினும் வலியதாக இக் கொடுமைகளை எவ்வாறு செய்யத் துணிகின்றதோ?

உயிர்களுக்கு நாம் செய்யும் துன்பம் செய்த அளவே நம்மை வந்து சாருமென்று எண்ணக் கூடாது. நாம் செய்யும் துன்பம் பன்மடங்காக அதிகரித்து வந்து சாரும். இச்சை போல் திரியும் பசுங்கிளியைப் பன்னிரண்டு நாள் கூட்டில் அடைத்த பாவத்தினால், மறுபிறப்பில் பன்னிரண்டாண்டு சிறைச்சாலையிலிருந்து கோபன்னா (ராமதாஸர்) வேதனைக் கடலில் வீழ்ந்து துன்புற்றனர். இங்ஙனம் கருணையின்றிப் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்தவர்கள் பலர், ஒன்றுக்குப் பன்மடங்காகத் துன்புற்றவர்கள்.

அப்பா நான் வேண்டுதல்கேட்
டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான்
அன்புசெயல் வேண்டும்
— இராமலிங்கர்.

திருமுருக கிருபானந்த வாரியார்

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழிமிமலையில் தங்கியிருந்தார்கள். அப்போது வான் மழை சுருங்கி எங்கும் உணவுப் பொருள் அருகிப் பஞ்சம் பெருகியது. அதனைக் கண்ட இரு தவ சீலர்களும் இறைவனிடம் படிக்காசு பெற்று, பெரிய அளவில் உணவு தயாரித்து, பறை சாற்றி வறியார்க்கு முப்போதும் தப்பாது உணவு அளித்தார்கள்.

திருமருகல் என்ற திருத்தலத்துக்கு ஞானப் பாலுண்ட ஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளினார். விடியற் காலை திருக்கோயிலுக்குச் செல்லுகின்றார். அங்கு ஓர் இளம் பெண் அழுது கொண்டிருந்தாள். தாவிப் படரக் கொழுகொம்பில்லாத தனிக் கொடி போல் அம்மடவரல் 'ஓ' என்று வாய் விட்டுக் கதறிப் பதறிக் கண்ணீர் வடித்து, துடித்து, துள்ளி அழுவதைக் கண்டார் ஞானசம்பந்தர்.

அவர், அறிவுடன் தொடர்பு கொண்டவர். ஞானம் என்றால் அறிவு. சம்பந்தம் — தொடர்பு கொள்வது.

அறிவின் பயன் எது? பிற உயிர் படும் துன்பத்தைக் கண்டு கருணை செய்வதுதான் அறிவினால் ஆகும் பயன்.

''அறிவின னாகுவ துண்டோ
பிறிதின் நோய்
தன்னோய்போல் போற்றாக் கடை''

என்கின்றார் திருவள்ளுவர்.



''மனுஷனும் குரங்கும் பேசிக்க முடியுமா?''

''ஏன் முடியாது? இப்ப நானும் நீங்களும் பேசிக்கலை?''

— நீடாமங்கலம் ஜே. பி.


ஆதரவு இன்றித் தன்னந்தனியாக ஒரு பெண்மணி அழுவதைக் கண்ட திருஞானசம்பந்தர், 'நாட்டில் நாலாயிரம் நிகழ்ச்சிகள். நாம் வழிபாடு செய்யத் திருக்கோயிலுக்குப் போகின்றோம். யார் எதற்காக எங்கு அழுதால் நமக்கென்ன? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் துன்பம். ஊழ் காரணமாக உயிர்கள் துன்புறுகின்றன,'' என்று கருதிக் கோயிலுக்குள் சென்றாரா?

இல்லை; இல்லை.

துன்பக் கடலில் விழுந்து துடிக்கின்ற அவள்பால், அப்பெருமானுக்குக் கருணை வெள்ளம் பொங்கி எழுந்தது. அவளுடைய துன்பத்தைக் களைந்த பின்னர் ஆலய வழிபாடு செய்யலாம் என்று அவர் கருதினார்.

அழுகின்ற அப்பெண்மணியை நோக்கி, ''அம்மா அழாதே; உனக்கு உற்ற இடர் யாது?'' என்று தாய் போல் பரிந்து கேட்டருளினார். அவள் திருஞானசம்பந்தரைத் தொழுது அழுது கொண்டே கூறுகின்றாள்:

''ஐயனே! வைப்பூரில் வாழ்கின்ற தாமன் என்ற வணிகர் தலைவனுடைய மகள் யான். என் தந்தைக்கு ஏழு புதல்விகள். இவர் என் அத்தை மகன், தாய் தந்தையர் இன்றி எங்கள் வீட்டில் வளர்ந்து வந்தார். என் பிதா ஒவ்வொரு பெண்ணாக உனக்குத் தருவேன் தருவேன் என்று கூறி, சொன்ன சொல்லைக் காற்றில் பறக்க விட்டு, தனவந்தர்கட்குக் கல்யாணம் பண்ணித் தந்தார். முடிவில் என்னையும் அவ்வாறே இவருக்குத் தருவதாக வாக்களித்து வேறொரு தனவந்தருக்குத் தருவதாகத் தீர்மானித்தார். வாக்களித்த மாத்திரத்திலேயே யான் என் அத்தை மகனுக்கு மனைவியாகி விட்டேன்; பிறகு மற்றவரை மணப்பது பெண்ணறமாகாது. ஆதலால் வாடி வருந்தியுள்ள என் அத்தை மகனும் நானும் உற்றாரையும் பெற்றாரையும் துறந்து, அயலூர் சென்று மணம் புரிந்து கொள்வோம் என்று கருதிப் புறப்பட்டு வழி நடந்து வந்தோம். இரவு இந்த மடத்துத் திண்ணையில் படுத்தோம். அரவம் தீண்டி இதோ என் எதிர்காலக் கணவனார்



இறந்து விட்டார் பெருமானே! அரவம் தீண்டியும் யான் தீண்டாது அழுகின்றேன். விதிப்படிப் பாணிக் கிரகணம் ஆகாமையால், இவரை யான் தீண்டி அழவும் இயலாதவளாகக் கலங்கி நிற்கின்றேன். தாய் தந்தை, உடன் பிறந்தார் முதலிய அனைவரையும் துறந்து, இவரை நம்பி வந்தேன். இவர் என்னை நட்டாற்றில் விட்டு நடந்து விட்டார். இனி எனக்கு வாழ்வு ஏது? என் முன் வினை மூண்டது போலும்,'' என்று கூறி முறையிட்டாள்.

திருஞானசம்பந்தர் அப் பெண் மணியின் துயரைக் கேட்டுப் பெரிதும் கருணை கொண்டார். 'அம்மா, அழாதே! திருக்கோயிலில் கருணைக் கடலாயுள்ள எம்பெருமான் உன் துயரைக் களைவார். வருந்தற்க,' என்று ஆறுதல் கூறியருளினார்.

அவளை அழைத்துக் கொண்டு திருக்கோயிலுக்குள் சென்றார். ''இறைவனே! ஆலம் உண்ட நீல கண்டப் பெருமானே! நஞ்சராவணிந்த நம்பனே! பாம்பணையில் துயின்ற பரந்தாமனும் திிவிலக்கு வரையும் வேதனும் போற்றும் வித்தகனே! இவள் உன்னை நாத்தழும்பேற ஏத்தி ஏத்தித் தோத்திரம் புரிகின்றாள். இவள் துயரைக் களைவாய்,'' என்று சுவாமியிடம் முறையிட்டார்.

''சடையா யெனுமால் சரண் நீயெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையார் தகுமோ
இவள் உன் மெலிவே''

என்ற தேவாரப் பாடலைப் பாடியருளினார்.

அந்த அமுதப் பாடல் பாடியவுடன், இறைவன் கருணையால், மாண்ட செட்டிக் குமாரன் உயிர் பெற்று எழுந்தான். அப்போது, அல்லல்பட்டழுத அம்மங்கை, ஆனந்த வெள்ளத்துள் திளைத்தாள். இருவருக்கும் அங்ஙனமே திருமணம் செய்வித்தார் திருஞானசம்பந்தர்.

இறைவனுடைய கருணையை நாடிய ஞானசம்பந்தர், தானும் கருணையுடையவராகத் திகழ்ந்தார்.

குசேல முனிவர் வறுமையாகிய சிறுமையில் முழுகினவர். அப்படி வறுமைப் பிணி மூடியும், அவருடைய மனம் சதா கண்ணபிரானையே நாடியது. மனைவியின் வேண்டுகோளின் படியே கண்ணனைக் காணப் புறப்பட்டார். அவர் வாழும் அவந்திக்கும் துவாரகைக்கும் நெடுந்தூரம். குடையும் பாதரட்சையும் அவருக்கு ஏது? கடும் வெயில், அக்கினிப் பிழம்பாக ஆதித்தன் காய்கின்றான். மண் சுடுகிறது. குசேலர் இந்த வெயிலில் தான் நடக்கின்றார். அவர் செல்லும் சாலையில் இருபுறங்களிலும் நல்ல நிழல் தரும் மரங்கள் குளிர்ந்த நிழ

லைத் தந்து கொண்டிருக்கின்றன. குசேல முனவர், அந்த நிழலில் ஒதுங்கிச் சென்றால் வெயிலின் கொடுமையிராது. ஆனால், அவர் நிழலில் ஒதுங்காமல் நடுச்சாலையில் செல்கின்றார். கால் சுடுகின்றது. தலை சுடுகின்றது. இரு கரங்களையும் விரித்து, தலைக்கு மேல் மறைத்துக் கொண்டு, 'கண்ணா! கண்ணா! தாங்க முடியாத வெப்பமாக இருக்கின்றதே, என் செய்வேன்? இன்னும் எத்தனை தூரம் இருக்கின்றதோ.'' என்று கூறிக் கொண்டே நடக்கின்றார். அவர் ஏன் நிழலில் ஒதுங்கவில்லை? காரணம் தெரிகின்றதா? ஈக்கள், எறும்புகள், புழுக்கள் முதலிய சிற்றுயிர்கள் கொடிய வெயிலைத் தாங்க மாட்டாது — நிழலில் ஒதுங்கியிருக்குமே? நாம் நிழலில் நடந்தால் அச்சிற்றுயிர்கள் இறந்து விடும்,'' என்று கருதினார். கருணை காரணமாகவே, நிழலில் ஒதுங்காமல் வெயிலில் நடந்து துன்புற்றார். இத்தகைய கருணை அவர்பால் இருந்ததனால், கண்ணபிரானுடைய கருணை அவர்பால் சுரந்தது.

சீத நீழற்செலின் சிற்றுயிர்த் தொகை
போதச் சாம்புமென் றெண்ணிய
புந்தியான்
ஆதவன் தவழ் ஆறு நடந்திடை
காதல் அங்கை விரித்துக் கவித்தரோ.

— குசேலோபாக்கியானம்

நம் தமிழகத்தில் பிறவுயிர்க்குப் பெரிதும் இரங்கிய திருவாளர்கள் பலர் வாழ்ந்தார்கள். ஓரறிவுடைய முல்லைக் கொடி தனியே வாடி நிற்பதைக் கண்ட பாரி மன்னன், தன் தேரை நிறுத்தி அதன் மீது கொடியைச் சுற்றி அதற்கு உதவி புரிந்து நடந்து சென்றான். அவனுடைய கருணை எத்துணை விழுமியது?

ஒரு தலைவன் அயலூர் சென்றிருந்தான். தன் கருமம் முடிந்தது. அவன் இளைஞன். கருமம் முடிந்ததும் தன் வீட்டிலுள்ள தலைவியை நினைத்தான். காதல் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. தலைவியை நோக்கித் தலைவன் புறப்பட்டான். மணி



* ஒழுக்கம், பக்தி, நுண்ணறிவு, நாட்டுப் பற்று ஆகிய நற்பண்புகளை வளர்த்து அரிய தொண்டாற்றும் கோகுலம் நிறுவனத்தாருக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சேலம், கே. ஜகன்னாதன்.

* எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடும் கோகுலத்திற்கு வாசகர்கள் சார்பில் என் பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

ஊத்தங்கரை, பி. கோவிந்தசாமி.

* தன் இனிய குரலாலும் இசையாலும் அனைவரையும் அனைவரையும் மகிழ்விக்கும் வரலட்சுமி நிச்சயம் வருங்கால லட்சுமி தான். அவள் பேரும் புகழும் பெற்றுச் சாதனைகள் பல படைக்க வாழ்த்துகிறேன்.

வந்தவாசி, வி. எஸ். பொன்னம்மாள்.

* 'மனதில் உறுதி வேண்டும்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள கட்டுரையில் மூதறிஞர் ராஜாஜி தனது பகைவர்களையும் அன்பால் ஈர்த்த செயலைப் படித்து மெய்சிலிர்த்தேன்.

ஆலடிப்பூர், இரா. கந்தையா.

* உங்களின் முத்தான முன்னுரையோடு பேரளம் புகழ்மதியின் போர் நடை எழுத்துக்களில் 'நில், கவனி, புறப்படு,' கட்டுரைத் தொடர் படித்தேன். அப்பப்பா, என்ன உணர்ச்சி வேகம்! இளம் தலைமுறையினருக்குப் புதிய சொர்க்கத்தைத் திறக்கிறார் புகழ்மதி.

திருச்சி — 3, எஸ். கனகா.

* தமிழொளி ஏற்கெனவே அறிமுகமானவர் என்றாலும் அவரைப் பற்றிய கூடுதலான செய்திகளைத் தந்திருந்தது பாராட்டுக்குரியது. அந்தத் தமிழொளி பிரகாசிக்கத் தூண்டுகோலாக அமைந்த அவர்தம் தந்தைக்குத் தமிழகமே நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது.

வந்தவாசி, சா. இரா. மணி.

* 'உங்கள் புத்தாண்டுத் தீர்மானம் என்ன?' பேட்டியில் ஒவ்வொருவருடைய

கள் பூட்டிய தேரில் வருகின்றான். வழியில் இருமருங்கிலும் பூச்செடிகள். நிரம்ப மலர்கள் குலுங்குகின்றன. அம் மலரில், வண்டுகள் தம் தம் காதல் நிறைந்த பெண் வண்டுகளுடன் அமர்ந்து தேனைக் குடிக்கின்றன. இதனைக் காண்கின்றான் தலைவன். அவன் உள்ளம் கருணை மயமானது. தேரின் மணிகள் ஒலித்தால் தேன் உண்ணும் வண்டுகள் அஞ்சிய கலும். அவைகட்கு இடையூறாகும் என்று அவனுடைய திருவுள்ளம் எண்ணி உருகியது. தேரை நிறுத்தினான். தேரில் உள்ள ஒவ்வொரு மணிகளின் நாக்குகளையும் அசையா வண்ணம் சிறு சிறு கயிறுகளால் கட்டினான். இப்போது மணியின் நா அசையாது நின்றது; வண்டுகட்கு இடர் விளையாது என்று மனநிறைவு கொண்டான. தேர் ஏறித் தன் காதலியை நாடிச் சென்றான். அப்பெருமகனின் கருணையை நினைத்தால் கல்மனமும் கரையுமே!

''பூத்த பொங்கர் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணி நா வார்த்த மாண்வினைத்தேரன்
உவக்காண் தோன்றும்''

— அகநானூறு

ஆகவே இறைவனுடைய கருணையைப் பெற விழைகின்ற ஒவ்வொருவரும் பிறவுயிர்களிடம் கருணை காட்ட வேண்டும். எல்லாவுயிர்களிடத்திலும் இறைவனைப் பார்க்க வேண்டும். எல்லாவுயிர்களும் இறைவனுடைய கோயில்கள். ஆதலால் இறைவனை எல்லாவுயிர்களிலும் கண்டு அவ்வுயிர்கட்கெல்லாம் கருணை செய்தல் வேண்டும். அதுவே கடைத்தேறும் வழி.

ஆகவே, துன்பமின்றி இன்பமாக வாழ் நினைக்கும் ஒவ்வொருவரும், எந்த உயிர்கட்கும், எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்வாற்றானும், துன்பத்தை விளைவிக்காமல் இன்பமே செய்து இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை தேடுவார்களாக.

வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

தீர்மானமும் பெருமை சேர்க்கும் விதத்தில் அவர்களது நம்பிக்கையைப் பிரதிபலித்தது.

இராஜாக்கமங்கலம், சிந்தியா.

* குரு. சீனிவாசனின் நஞ்சும் அமுதாகும் கதை. நல்ல மனசுக்கு எதிர்பாராத தீமை வந்தாலும் பனிபோல் நீங்கிவிடும் என்பதையே காட்டியது.

சென்னை — 45, ஏ. ஜஹ்பர் காதர்.

* மனிதனானாலும், சிறு உயிர்களானாலும் தான் என்ற அகந்தையும் இறுமாப்பும், கர்வமும் இருக்கக் கூடாது. அவ்வாறு இருப்பின், அதன் விளைவு மிகவும் பரிதாபமானதாக இருக்கும் என்பதைப் பதினாறு பக்க வண்ணப் படக்கதையாகிய 'ஸ்ரீ கிருஷ்ண துலாபாரம்' நன்கு விளக்கியது. பாராட்டுக்கள் பல.

புன்செய்புளியம்பட்டி, பி. எல். கிரிஜா.

* இப்படியும் புத்தாண்டு கட்டுரையைப் படித்ததன் மூலம் சிங்கப்பூரில் வாழும் மக்கள் புத்தாண்டு விழா கொண்டாடும் முறையும், புத்தாண்டு விழா வெகு சிறப்பாகக் கொண்டாடுவதின் காரணத்தையும் அறிந்து கொண்டேன்.

செஞ்சி, தாஷேக் உசேன்.

* '3 நாய்களும் ஒரு தீப்பெட்டியும்' கதையும். கரோவின் கைவண்ணத்தில் படமும் சூப்பரோ சூப்பர்!

கச்சனம், அ. கனகசபை.

* கிராம மக்களுக்குச் சொல்லித் தரும் டாக்டர் கணேசன் அவர்களின் மருத்துவக் கட்டுரை மிக மிகப் பயன் தருவது.

முத்துராமலிங்கபுரம், ரா. பொன்ராசன்.

* பிருந்தாவனக் கதை அரங்கத்தில் (78—ஆம் பக்கத்தில்) ஒரு சிறுவன் பெயரில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாக வந்துள்ள 'கோடரிக் கூழ்' (ருஷ்ய நாட்டுக் கதை) ரா. கிருஷ்ணையா மொழி பெயர்த்துள்ள 'நவரத்தினமாலை' என்னும் நூலிலிருந்து அப்படியே பிரதி எடுத்து அனுப்பியுள்ளான் என்று தெரிகிறது.

மம்சாபுரம், ஏ. கிருஷ்ணமூர்த்தி.

(தம்பி தங்கைகளே, இனியாவது இது போன்ற பாவத்தைச் செய்யாதீர்கள்.
— தேசபந்து.)



புதுடில்லியில் டிசம்பர் 89 இல் ஜனாதிபதி முன்னிலையில் உறுதிமொழி எடுக்கும் காட்சி

புதிய பிரதமர்

முன்பு ஒரு சமயம், 'பாரதப் பிரதமர்கள்' பற்றிச் சொன்னேனே, நினைவிருக்கிறதா? அந்த வரிசையில் இப்போது, புதிய பிரதமரைப் பற்றிச் சொல்லப் போகிறேன்.

ராஜீவ் காந்தி பாரதப் பிரதமராக இருந்தார். கடந்த 1989 நவம்பரில், நமது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடந்தது. அதில் அவருக்கு மீண்டும் அரசு அமைக்கும் அளவுக்குப் பெரும்பான்மை இடம் கிடைக்கவில்லை. எனவே, அவர் பிரதமர் பதவியை ராஜினாமா செய்து விட்டார். அப்படிச் செய்ய வேண்டியது சட்டம்.

அவரது கட்சிக்கு மட்டுமல்ல. வேறு எந்தக் கட்சிக்குமே, தனித்து அரசு அமைக்கும் அளவுக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த, பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவைப் பெறக்கூடிய ஒருவர்தான் பிரதமராக முடியும். அதன்படி, வி. பி. சிங் புதிய பிரதமராகப் பொறுப் பேற்றுள்ளார். அப்படிப் பெரும் பாலானவர்களின் ஆதரவு இருக்கும் வரையில், அவர் இருக்கலாம்.

வி. பி. சிங்கின் முழுப் பெயர் விசுவநாத் பிரதாப் சிங். பிறப்பு 1931 ஜூன் 25. தற்போது 58 வயதாகிறது. அவர் ஓர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்.

உத்திரப் பிரதேசத்தில் 'தையா' என்று ஒரு சிற்றரசு இருந்தது. ஏன் 'இருந்தது' என்கிறேன் தெரியுமா? அது இப்போது இல்லை. இந்திய

ஜானகி மணாளன்

விசுவநாதப் பிரதாப் சிங்



இதுதான் கூட்டணி முன்னணி என். டி. ராமராவ், கலைஞர், மு. கருணாநிதி, வி.பி. சிங், பி. கே. முகாந்தா, எஸ். ஆர். பொம்மை — இன்னும் சிலர்.

யூனியனுடன் இணைந்து விட்டது. முன்பு அதில் ஒரு சிற்றரசர் இருந்தார். அவருக்கு இரண்டு மனைவிகள். மூத்த ராணிக்கு இரண்டு மகன்கள். இளையவருக்கு மூன்று மகன்கள். மூத்த ராணியின் இரண்டாவது மகன்தான் வி. பி. சிங்.

'மண்டா' என்று ஒரு நகரம் இருந்தது. அது ஒரு ஜமீன் நகரம். ஜமீன் என்றால் என்ன தெரியுமா? இந்தியில் 'ஜமீன்' என்பது நிலத்தைக் குறிக்கும். மன்னரிடமிருந்து மானியமாகப் பெறப்பட்ட நிலம் அடங்கிய பகுதி ஜமீன் எனப்படும். அதன் சொந்தக்காரருக்கு ஜமீன்தார் என்று பெயர். மண்டாவின் ஜமீன்தார் ராஜ் பகதூர் என்பவர்.

அவருக்குக் குழந்தைச் செல்வம் கிடையாது. ஆகவே அவர் வி. பி. சிங்கைத் தனது மகனாகத் தத்து எடுத்து வளர்த்தார். அப்போது சிங் சின்னஞ்சிறியவன். ஐந்தே வயது. அவர் வீட்டில், சிங் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார்.

அவருக்குப் பத்து வயதாயிற்று. அப்போது, ஒருநாள் திடீரென்று அவருடைய வளர்ப்புத் தந்தை — அதாவது மண்டாவின் ஜமீன்தார் ராஜ்பகதூர் — காலமாகி விட்டார். ஜமீனில் ஏராளமான சொத்துக்கள் இருந்தன. அத்தனைக்கும் ஒரே வாரிசு. பத்தே வயதான வி. பி. சிங் தான். இதை இறந்து போன ஜமீன்தாரின் உறவினர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவ்வளவையும், எங்கிருந்தோ வந்த ஒருவன், அதிலும் ஒரு சிறுவன் அடையப் போகிறானே என்று பொறாமைப் பட்டனர். எப்படியாவது அதில் ஒரு பகுதியைத் தாம் அடைந்து விட வேண்டும் என்று திட்டம் போட்டனர்.

சிறுவன் சிங்கை எதிர்த்து, 'ஜமீனின் உண்மையான வாரிசு சிங் இல்லை; நாங்கள்தான்' என்று நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

வழக்கு விசாரணை பல நாட்கள் நடந்தது. சிலர், சிறுவன் சிங்கைக் கொலை செய்யவும் கூடச் சதி செய்தனர். சிங்கின் உயிருக்கு எந்த நிமிடமும் ஆபத்து வரலாம் என்ற

அபாயம். என்றாலும் அதற்காக, ஓடியாடி விளையாட வேண்டிய சிறுவன், வீட்டுக்குள் ஒளிந்து கொண்டு இருக்க முடியுமா? பள்ளிக்கூடம் போக வேண்டாமா? அல்லது படித்துப் பட்டம் பெற வேண்டாமா?

எனவே, சிறுவன் வி. பி. சிங் பள்ளி செல்லும்போது, கூடவே துப்பாக்கி ஏந்திய வீரர்கள் காவலுக்குச் செல்வார்கள். டேராடூனில் கர்னல் பிரவுன் பள்ளியில் துவக்கப் படிப்பை முடித்த பிறகு, அவர் அலகாபாத் திரும்பி ஓர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்தார். பின்னர் காசியில் உள்ள உதய் பிரதாப் கல்லூரியில் சேர்ந்து படித்தார்.

அந்த நகரில் ஒரு பெரிய அரண்மனை. 'ஐஸ் ஹவுஸ்' என்று பெயர். சிங் அதில்தான் தங்கினார். கல்லூரிக்குச் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் கப்பல் போன்ற பெரிய 'சவர்லே' கார் ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது. அதில் அவர் எங்கு பயணம் செய்தாலும் சரி. கூடவே அவருடன் சில ஆயுதம் தாங்கிய காவல்காரரும் செல்வார்கள். அது மட்டுமல்ல; சிங் கல்லூரியில் தனது வகுப்பறையில் அமர்ந்து படிக்கும் போது, அறைக்கு வெளியில் அவர்கள் துப்பாக்கியை ஏந்திக் காவல் இருப்பார்கள். அத்தனை பாதுகாப்பு.

பட்டப் படிப்புக்குப் பிறகு, எல்.எல்.பி. படித்துப் பட்டம் பெற்றார். அது சட்டப்-படிப்பு. வக்கீல் தொழிலுக்கானது. அதைப் படித்தாரே தவிர, அவருக்கு வக்கீல் தொழிலுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் இல்லை.

கல்லூரியில் படிக்கும் மாணவப் பருவத்திலேயே, அவர் பொது மக்கள் சேவையில் அதிகம் ஈடுபட்டார். பெரிய அரச குடும்பப் பிள்ளைதான்! என்றாலும், அவர் தன்னுடன் பயின்ற மாணவர்களுடன் மிகவும் நெருக்கமாகப் பழகினார். எல்லாரிடமும் சகஜமாகப் பேசுவார். பழகுவார். கூடி விளையாடுவார். எல்லாரும் அவரை, 'ராஜா சாகேப்' என்று தான் அழைப்பார்கள்.

உடனே சிங், "டேய்... என்னை அப்படியெல்லாம் அழைக்கக் கூடாது. அது எனக்குப் பிடிக்காது," எனக் கண்டிப்பார்.

ஆனால், மாணவர்கள் அதைக் கேட்க மாட்டார்கள். தொடர்ந்து அவ்வாறே அழைத்தனர்.

அவர்களின் தொல்லை அதிகமாகவே, அவராகவே, "சரி, போனால் போகிறது. இனிமேல் என்னை எல்லாரும், 'ராஜா சாகேப்' என்பதற்குப் பதிலாக 'மாஸ்டர்ஜி' என்று கூப்பிடுங்கள் போதும்," என்று கேட்டுக் கொண்டார்.

அதன் பிறகு, எல்லாரும் அவரை மாஸ்டர்ஜி என்றே கூப்பிடலாயினர். அப்படிக் கூப்பிடுவது அவருக்குப் பிடித்திருந்தது.

வினோபாபாவைப் பற்றி உங்களுக்குத் தெரியும் அல்லவா? பூதான இயக்கம் — அதாவது, தேவைக்கு மேல் அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து, கொஞ்சம் நிலத்தைத் தானமாகப் பெற்று, அவற்றை நிலமற்ற ஏழைகளுக்குத் தானமாக

• திருமதி வி. பி. சிங்





• புதிய — பழைய பிரதமர்கள்

வழங்கும் இயக்கம்— அந்த இயக்கத்தை நடத்தியவர்தான் வினோபாபாவே. அவர் கடைசி வரையில் காந்திஜி யின் வழியில் நடந்தவர்.

வி. பி. சிங்கிற்கு அந்த இயக்கம் மிகவும் பிடித்திருந்தது. எனவே, வினோபாபாவைச் சந்தித்துத் தனது ஆதரவைத் தெரிவித்துக் கொண் டார். அத்துடன் நில்லாது, தனது ஏராளமான நிலங்களையும் அவரிடம், அந்த இயக்கத்துக்குத் தானமாகக் கொடுத்து மகிழ்ந்தார்.

வி. பி. சிங்கிற்கு 1955 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. மனைவி பெயர் சீதாதேவி. அவரும் இன் னோர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் தான். மணநாள் 1955 ஜூன் 25. அதாவது, சிங்கின் பிறந்த நாளே தான்! அன்று அவருக்கு 24 வயது நிறைந்தது.

தற்போது, அந்தத் தம்பதிக்கு இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். மூத்த மகன் அஜய் சிங். கணக்கியல் படித்து, அமெரிக்கா, நியூயார்க்கில் பிரபலமான ஒரு 'சார்டட் அக் கௌண்டண்ட்' ஆகத் தொழில் நடத்தி விட்டு இந்தியா வந்துள்ளார். அடுத்த மகன் அபய் சிங். அவர் ஒரு தலைசிறந்த மருத்துவர். டில்லி, அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்தில் டாக்டராகப் பணிபுரிகி றார்.

அரசியலில் வி. பி. சிங்கின் ஆர்வம் மெல்ல மெல்ல வளர்ந்தது. உத்திரப் பிரதேசச் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, இரண்டு தடவைகள் உறுப்பினர் ஆனார். அப்போது அவர் காங்கிரஸ் கட்சி யில் இருந்தார். சட்டமன்றத்தின் கட்சிக் கொறடாவானார்.

1971 இல் நாடாளுமன்றத் தேர்த லில் போட்டியிட்டு வெற்றி பெற் றார். அப்போது நாட்டின் பிரதம ராக இருந்தவர் யார் தெரியுமா? திருமதி இந்திரா காந்தி. 74 இல் சிங் மத்திய அமைச்சர் ஆனார்.

சில காலத்துக்குப் பிறகு, மீண்டும் மாநில அரசியலுக்குத் திரும்பி, உத்திரப்பிரதேசத்தின் முதலமைச்சர் ஆனார். அப் பதவியில் மூன்றாண்டு



* பிரதமரின் வழிகாட்டி வினோபா

கள் இருந்த பிறகு, மீண்டும் மத்திய அரசியலுக்குச் சென்றார். அங்கு அவருக்கு வர்த்தக அமைச்சர் பதவி தரப்பட்டது.

இந்திரா காந்தி சுடப்பட்டு மறைந் ததும், ராஜீவ் காந்தி பிரதமர் ஆனார். அப்போது சிங்கிற்கு நிதித் துறை அமைச்சர் பதவி தரப்பட்டது. அதில் அவர் பல புரட்சிகரமான மாற்றங்களைத் துணிந்து செய்தார். கள்ள மார்க்கெட்டையும் கறுப்புப் பணத்தையும் ஒழிக்கப் பாடுபட்டார். வரி ஏய்ப்புச் செய்வோரைக் கண்டு பிடித்து, அரசின் வருவாயைப் பெருக்கப் பாடுபட்டார். இதற் கிடையில், அவர் ராணுவத் துறைக்கு மாற்றப்பட்டார். அங்கும் பல சிறந்த மாற்றங்களைச் செய்தார். அப் போது சில பிரச்சினைகளில் கருத்து வேறுபாடுகள் தோன்றின. எனவே, 1987 இல் அமைச்சர் பதவியை ராஜி னாமா செய்து விட்டு வெளியேறி னார். அத்துடன் காங்கிரஸ் கட்சி யிலிருந்தும் வெளியேறினார்.

என்றாலும் அவருடைய மனம் பொதுமக்கள் தொண்டிலிருந்து மாறி விடவில்லை. தன்னால் முடிந்த அளவுக்குத் தேசத் தொண்டில் ஈடுபட விரும்பினார். எனவே, 'ஜன மோர்ச்சா' — அதாவது, மக்கள் முன்னணி என்ற ஓர் அமைப்பை ஏற் படுத்தி, அதன் மூலம் பொதுப் பணியாற்றத் தொடங்கினார்.

அவருக்கு அச் சமயம் மீண்டும்


அரசியலில் தீவிரமாக ஈடுபடும் எண்ணமில்லை. ஆனால், எதிர்க் கட்சிகள் யாவும் அவரை அரசியலில் தீவிரம் காட்ட வற்புறுத்தின. அச்சமயம் அலகாபாத் தொகுதியில் இடைத் தேர்தல் வந்தது. அனைவரும் ஒன்று கூடி, அவரைப் போட்டியிட வைத்து ஆதரவு தெரிவித்தனர். அதில் அவர் வெற்றி பெற்று, நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார். அதன் பிறகுதான் அவரது பணிகள் சிறப்படையத் தொடங்கின.

அவர் எதிர்க் கட்சிகளை ஒன்று திரட்டும் முயற்சியில் ஈடுபட்டார். ஏழு கட்சிகள் அவருடன் ஒத்துழைக்க முன்வந்தன. அந்தக் கட்சிகள் எவையெவை தெரியுமா? ஜனதா, ஜனமோர்ச்சா, மக்கள் கட்சி, காங்கிரஸ் (எஸ்), தெலுங்கு தேசம், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அஸ்ஸாம் கண தந்திர பரிஷத் ஆகியவை. சிங், தானே அதன் அமைப்பாளராக இருந்தார். இந்த ஏழு கட்சிகளும் ஓர் ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொண்டன. அதற்குத் 'தேசிய முன்னணி' என்று பெயர். அதன் தொடக்கக் கூட்டம் நடந்தது நமது சென்னையில்தான். நாள் 1989 செப்டெம்பர் 16 ஆம் நாள்.

பிறகு, அந்த ஏழு கட்சிகளில் நான்கு ஒன்றாகவே இணைந்து விடத் தீர்மானித்தன. அவை ஜனதா, மக்கள் கட்சி, ஜனமோர்ச்சா, காங்கிரஸ் (எஸ்) ஆகியவை. அப்படி இணைந்த அந்த ஒரே கட்சிதான் இன்றைய 'ஜனதா தள்' என்பது. வி. பி. சிங். அதன் தலைமைப் பதவியை ஏற்றார்.

உடனே, 1989 நவம்பரில் நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. அதில் எந்த ஒரு கட்சிக்கும் தனிப்பட்ட பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனினும் பெருவாரியான உறுப்பினர்கள் திரு. வி. பி. சிங்கிற்கு ஆதரவு தெரிவித்தனர். எனவே அவர் பிரதமர் ஆகியுள்ளார்.

இன்றைய இந்தியாவில் ஏராளமான பிரச்சினைகள். அவற்றை அவர் தீரத்துடன் தீர்த்து விடப் பெரும் முயற்சி செய்கிறார். அப்பணியில் அவர் வெற்றி பெற வாழ்த்துவோம்!



'உலகை மாற்றும் எழுச்சி நீ கொள்!'

சின்னஞ்சிறு செல்வ மலரே, மின்னலெனப் பள்ளிக்கு விரையும் வண்ண ஆடை வடிவழகே, எண்ணரிய கனவுகளோடு இந்த உலகை மாற்ற எழுச்சியோடு காத்திருக்கும் என்னன்புச் சித்திரமே!

உன்னன்பு மடலைக் கண்டேன்.

'நீங்கள் எங்களுக்கு அளித்த எட்டு விலை உயர்ந்த நகைகளை நிச்சயம் நாங்கள் அணிந்து கொள்வோம். அந்த நகைகளின் சிறப்புகளை ஒவ்வொன்றாக எங்களுக்கு விளக்குங்கள்,' என உன் கடிதத்தில் அன்புக் கட்டளையிட்டிருந்தாய்.

'எட்டு' என்ற எண்ணே நம் வாழ்வோடு ஒன்றிணைந்து விட்ட ஒரு பெருமிதமான எண். எல்லாத் துறைகளிலும் 'எட்டு' என்பது புனிதமான ஒன்று.

சிறுவர்களாகிய நீங்கள் ஏந்த வேண்டிய எட்டுக் கட்டளைகளும் மற்ற 'எட்டு'கள் போன்று புனிதமான ஒன்றுதான்.

அஷ்டலட்சுமிகள் போல இந்த எட்டுக் கட்டளைகளையும் — எட்டுத் தெய்வீக உருவங்களையும் — சிறுவர்கள் தங்கள் நெஞ்சங்களிலே பதிய வைத்துக் கொண்டு வழிபாடு செய்ய வேண்டும்.

எட்டுத் திசைகளையும் தாங்குகின்ற 'அஷ்டதிக் கஜங்கள்' போல இளஞ்சிறுவர்களைத் தாங்குகின்ற இந்த எட்டு யானைகளும் வலிமையானவை.

எட்டுத் தொகை நூல்கள் தமிழுக்கு இனிமை சேர்ப்பது போல இந்த எட்டுத் தொகை நூல்கள் இளஞ்சிறார்க்கு இனிமையானவை.

'எண் குணத்தான்' என இறைவனின் புனிதத்தை எடுத்துக் காட்டுவது போல இந்த எட்டுக் குணங்களும் சிறுவருக்குப் புனிதமானவை!

முதல் கட்டளையான 'உலகை மாற்றும் எழுச்சி நீ கொள்' என்பதை உரிய முறையில் நீ கடைப்பிடித்தால் பாதி வெற்றி உன் வீதி வரை வந்து விட்டதென்று சொல்லி விடலாம். 'இந்த உலகை நம்மால் நிச்சயம் மாற்ற முடியும்,' என்ற எழுச்சி உன் இதயத்தில் கங்கைப் பிரவாகம் போல பொங்கிப் பெருக்கெடுக்க வேண்டும். 'மாந்தர் தம் உள்ளத் தனையது உயர்வு,' என்ற குறளை மறந்து விட முடியுமா?

விவேகானந்தரின் வீர உரைகளைச் சற்றே படி.

"நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமை படைத்தவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகிறாய். நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்கக்கூடியவன்; எல்லாம் வல்லவன் நீ!" இந்த விவேகானந்தரின் வீர முழக்கங்களை விடியல் கண் விழித்ததும் மூன்று முறை உனக்குள் உரக்கச் சொல்லி உள்வாங்கிக் கொள்.

'சமுத்திரத்தை நம்மால் தாண்ட முடியுமா?' எனச் சந்தேகப்பட்ட அனுமன் போல இந்த எட்டுக் கட்டளைகளை நம்மால் கடைப்பிடிக்க முடியுமா என உனக்குச் சந்தேகம் எழுகிறது. ஜாம்பவானின் வீர உரை கேட்டவுடன் அனுமன்

பேரளம் புகழ்மதி

பறக்கத் தயாரானது போல நீயும் விவேகானந்தரின் வீர உரையை மனத்தில் பதித்தவுடன் உன் பயமும் சந்தேகமும் அக்கன்று போகும்.

முதல் கட்டளையை நீ உறுதியோடு உன் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டால் போதும்; மீதி ஏழு கட்டளைகள் பற்றி நீ எந்தச் சிரமமும் பட வேண்டாம்; ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போட வேண்டாம்; தானாக அக் கட்டளைகள் நிறைவேறும்.

உலகை உன்னால் மாற்ற முடியும் என்ற எழுச்சி எப்பொழுது உனக்கு உளப்பூர்வமாக எழுகிறதோ அந்த விநாடியே மீதி ஏழு கட்டளைகளையும் வெல்லக் கூடிய ஆற்றல் உனக்கு மிக மிக இயல்பாக, எளிதாக அமைந்து விடும். உலகத்தின் தலைமைதாங்கும் சக்தியாக எதிர்



காலத்தில் நீ உருவாக இதுதான் எளிதான சூட்சுமம்.

இராமகிருஷ்ண பரமஹம்ஸர் தன் ஐந்தாவது வயதில் ஒரு நாடகத்தில் சிவ வேடம் தரித்து நடித்த பொழுது, தானே சிவன் என்ற அளவிற்கு மெய் மறந்து அந்த உணர்விலேயே லயித்துப் போய் விட்டாராம். ஓ... அப்பொழுது அவருடைய முகத்தில் காந்திமயமாய்த் திகழ்ந்த தேஜஸைப் பார்த்து நாடகம் பார்த்த கூட்டமே பரவசப்பட்டுப் பக்திமயமாகி விட்டதாம்.

'வினைத் திட்பம் என்பது மனத் திட்பம்,' 'தோன்றிற் புகழொடு தோன்றுக,' என்பன போன்ற குறள்களின் வேர்ப்பகுதி எதனை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது? உலகை மாற்றும் எழுச்சி உன் இதயத்தில் ஊற்றெடுப்பதையே தன் உயிர்த் துடிப்பாக அக் குறள்கள் கொண்டுள்ளன.

'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை'

— என்ற குறளுக்கேற்ப ஒவ்வொரு சிறுவனும் தன் மனத்தில் ஊக்கத்தை — எழுச்சியை — ஊன்றிக் கொண்டு விட்டால், உலகை மாற்றுவது ஒரு பெரிய விஷயமா என்ன?

ஒவ்வொரு பாடத்திலும் 90 சதவிகித மதிப்பெண்கள் பெற்றே காட்டுவோம் என்ற எழுச்சியோடு ஒவ்வொரு மாணவனும் பாடங்களைப் படிக்கத் தொடங்கி விட்டால், எங்கே போய் விடும் அந்தத் தொண்ணூறு மார்க்? கதறிக் கொண்டு நம் காலடியில் வந்து விழாதா? நம் முகவரியைக் கேட்டுக் கொண்டு சீர் வரிசையோடு வந்து சேரும் நாட்டிலுள்ள வெற்றிச் சின்னங்கள்!

பலவிதமான சோதனையான கட்டங்களும் வேதனையான கட்டங்களும் நம் மன உறுதியைச் சிதைத்து, நம் செயல்பாட்டைச் சீர்குலைக்கக் கச்சை கட்டிக் கொண்டு வரும். கவலைப்படாதே; கண்ணெடுத்தும் பாராதே!

கடமையிலேயே உன் கருத்தைச் செலுத்து! கார்கால மேகங்களின் இருளுக்குப் பயந்து கதிரவன் மீது நம்பிக்கை இழந்து விடாதே! முன்னேறு, முன்னேறு, துணிந்து முன்னேறு! துன்பம் தொலையும் விரைவில் என்ற திடமான எழுச்சியோடு, தூய முத்தே, நீ முன்னேறு! எந்தச் சூழ்நிலைக்கும் நீ மனம் குலையாதே; எழுச்சி ஒன்றே உன்னைக் காக்கும்!

ரிச்சர்ட் ஆர்க் ரைட் என்பவர் புதுமையான நூல் நூற்கும் இயந்திரம் கண்டுபிடிப்பதற்காகத் தான் சேர்த்து வைத்த பணத்தையெல்லாம் செல

வழித்து ஏராளமான 'மாடல்'களைச் செய்து வைத்திருந்தார். இவர் சரியான பைத்தியம் என்று கருதி இவர் மனைவி இந்த மாடல்களையெல்லாம் ஒன்று விடாமல் உடைத்தெறிந்து விட்டார். ஆர்க்ரைட் மனமுடைந்து போய் விடவில்லை. வேறு ஊருக்குப் போய் ஓர் அற்புதமான இயந்திரத்தைச் செய்தார். ஆனால் வேலை வாய்ப்புப் பறிபோய் விடுமோ என்று ஆத்திரப்பட்ட தொழிலாளர் கும்பல் அதை உடைத்தெறிந்தது. ஆனால் உலகை மாற்றும் எழுச்சி ஆர்க்ரைட்டின் உள்ளத்தில் அழிந்து போய் விடவில்லை. அவர் வெற்றி பெற அந்த எழுச்சியே உதவியது!

கோப்பர்னிகஸ் தம் ஆராய்ச்சியினை முப்பதாண்டுகள் தொடர்ச்சியாகச் செய்தார்; ஆடம்ஸ்மித் 'வெல்த் ஆப் நேஷன்' என்ற நூலைப் பதினேழு ஆண்டுகள் எழுதினார்; டார்வின் தன் நூலைப் பதினேழு ஆண்டு உழைப்பில் எழுதினார். மார்க்ஸ் 'மூலதனம்' என்ற தன் புகழ் பெற்ற நூலை எழுதி முடிக்கப் பதினேழு ஆண்டுகள் ஆயிற்று. எழுச்சி ஒன்றே அவர்களை இயக்கியது இத்தனை ஆண்டுகள்!

மேரிக்யூரி ரேடியத்தைக் கண்டு பிடிப்பதற்குள் அவர் பட்டபாடு காவியமாய் எழுதுவதற்குரியது. தனக்குப் படிப்பதற்கு யாரும் உதவாமல் போன நிலையிலும் தானே கூலி வேலை செய்து அதில் வரும் வருவாயினால் கல்லூரி பயின்று தன் கணவரோடு நாள் முழுக்கச் சோதனைச் சாலையில் பாடுபட்டு, தன் கணவரையும் பின்னர் இழந்து, மனத்தை உறுதியாக்கி உழைத்து ரேடியத்தைத் தனியாகப் பிரித்துக் காட்டினார். எழுச்சி மட்டும் அவரிடம் இல்லையென்றால் எதுவும் இல்லை அவருக்கு.

எடிசன் கடுமையாகப் பாடுபட்டு ரயிலில் பத்திரிகை விற்று இரசாயன ஆராய்ச்சிக் கூடம் நிறுவினார். ஆனால் எதிர்பாராதவிதமாக, பாஸ்பரஸ் குச்சியினால் ஆராய்ச்சிக் கூடமே தீப்பிடித்துப் போய் விட்டது. ஆனால் எடிசன் மனம் கலங்காமல் புதிய கண்டுபிடிப்புகளுக்குத் தன்னை



உட்படுத்தினார். எழுச்சியே அவருக்கு ஒரே நண்பன்!


ராபர்ட் புரூஸ் பதினேழு முறை ஆங்கிலேயருடன் போரிட்டுத் தோற்றார். மனம் ஒடிந்து போய் மலைக் குகையில் ஒளிந்த பொழுது அங்கு ஒரு சிலந்தி வலை பின்னுவதைப் பார்த்தார். பலமுறை வலை அறுந்தும் கூட விடாப்பிடியாக அப் பூச்சி முயன்று இறுதியில் வலையைப் பின்னி முடித்தது. அதைக் கண்ட புரூஸ் ஆங்கிலேயரை நிச்சயம் என்னால் வெல்ல முடியும் என்ற எழுச்சியினை மனத்தில் விதைத்து மீண்டும் ஆங்கிலேயரிடம் போரிட்டு வென்ற சரித்திரம் உனக்குத் தெரிந்ததுதானே?

கார்லைலின் 'பிரெஞ்சுப் புரட்சி' என்ற அற்புதமான நூலைப் பிரசுரகர்த்தர் அலட்சியமாகக் குப்பைக் கூடை அருகே போட்டு வைக்க, எவரோ எடுத்து நெருப்புப் பற்ற வைக்க அதனைப் பயன்படுத்தி விட்டார்கள். அதிர்ந்து போன கார்லைல் மனம் உடைந்து போகாமல், மீண்டும் எழுதி இதனைப் பிரசுரித்துக் காட்டுகிறேன் என்ற எழுச்சியோடு செயல்பட்டுச் செய்தும் முடித்தார்.

எனவே சோதனைகள் பலப் பல வரக்கூடும் என்றாலும் சோர்வடையக் கூடாது. எப்பொழுதும் நெஞ்சில் ஒரே ஒரு தாரக மந்திர்ம்தான் ஒலிக்க வேண்டும். அம் மந்திரம் 'உலகை மாற்ற என்னால் முடியும்,' என்ற எழுச்சி வேதமேயாகும். இந்த வேதமே உலகை விடிய வைத்து வெளிச்சத்தை ஊட்டும்.

இப்பொழுது எண்ணிப் பார். ரமேஷ் என்கிற மாணவன் உன் வகுப்பில் முதல் மதிப்பெண் வாங்குகிறானாமே, அவனை உன்னால் வெல்ல முடியாதா என்ன? அவன் 95 சதவீத மதிப்பெண்ணாம்; அதனாலென்ன, இதோ, நீதான் 97 சதவீதம் எடுக்கப் போகிறாயே!

உலகையே மாற்றும் எழுச்சி உன் இதயத்தில் ஊறத் தொடங்கி விட்டது. முதலில் பள்ளியில் — வகுப்பில் — உன் பவனி தொடங்குகிறது. அடடே..,. உன்னால் முடியா



தது உண்டா என்ன?

உலகின் எந்த மூலை முடுக்கிலும் எந்த ஒரு மாணவனும் மக்கானவனே அல்ல. வழக்கமாக 40 மதிப்பெண் பெறுபவன் கூட என்னாலும் அதிக மதிப்பெண் பெற முடியும் என்ற உத்வேகத்தையும் எழுச்சியையும் கொள்வானேயானால் நிச்சயம் அவன் 90 மதிப்பெண்கள் பெறுவான்.

'ஐயோ, பாடப் புத்தகம் இவ்வளவு பெரிதாக இருக்கிறதே; நம்மால் இதனைப் படித்து விட முடியுமா? நிச்சயம் முடியாது.' என்று எண்ணினால், அவ்வளவுத்தான் நீ தீர்ந்தாய்!

'இவ்வளவு பெரிய பாட்டை என்னால் எப்படி ஒப்பிக்க முடியும்?' என நீ கலங்குவதை நிறுத்து. கொஞ்சம் கொஞ்சமாக இரண்டு இரண்டு வரிகளாக மெல்லப் படித்து மனத்தில் நிறுத்து. அது எப்படி வராமல் போகும், பார்க்கலாம்.

அடடே, மறுநாள் காலையில் ஆசிரியரே வியக்கும் வகையில் ஒப்புவித்து விட்டாயே! அவருடைய 'சபாஷ்' என்ற பாராட்டே உனக்கு அடுத்த பாடலை ஒப்புவிக்க எழுச்சி தந்து விடுமே!

கணிதமேதை ராமனுஜன், ஜெகதீச சந்திரபோஸ், லிங்கன், வால்டேர், தாகூர் போன்றோர் தொடக்க காலத்தில் தோல்வியைச் சந்திக்கும் பொழுது துவண்டு போய் விடவில்லை; 'நிச்சயம் என்னால் இந்த உலகை மாற்ற முடியும்' என்ற எழுச்சியோடு அவர்கள் செயல்பட்டார்கள்.

பேச்சுப் போட்டியிலே கலந்து கொள்வதாக நீ பெயர் கொடுத்து

> பிச்சை போட்டவர்: என்னப்பா! உனக்கு இரண்டு ரூபாய் பிச்சை போட்டால், பத்து காசைத் திருப் பித் தர்றே...?
>
> பிச்சைக்காரன்: என்னிடம் ஒரு ரூபா யும். அதற்கு மேலும் பிச்சை போட்டால். ஐந்து பர்சென்ட் டிஸ்கவுண்டு உண்டு ஸார்!
>
> — எஸ். குருமூர்த்தி.

விட்டாய்; மறுநாள் போட்டிக் களத் தில் நடுக்கத்தால் வாய் தடுமாறி குழறி வேர்க்க விறுவிறுக்க மேடையை விட்டு இறங்கி விட்டாயா? அதனா லென்ன, சோர்ந்து விடாதே! இனி பேச்சுப்போட்டிக்கே போவதில்லை,' என்று மட்டும் அவசர முடிவெடுத்து விடாதே!

டெமாஸ்தனிஸ் என்ற மிகச் சிறந்த பேச்சாளன் சிறு வயதில் திக்கித் திக்கிப் பேசுபவன்; அவனைச் சுற்றியிருந்தவர்கள் எவ்வளவோ கேலி செய்தனர். அதனை அவன் பொறுத்தபடி எதிர்காலத்தில் நான் மிகச் சிறந்த பேச்சாளனாக ஆகிக் காட்டுகிறேன் என்ற எழுச்சியோடு கடுமையாக உழைத்தான். நாள் முழுக்க வாயில் கூழாங்கற்களை அடக்கிக் கொண்டு ஆள் அரவமற்ற இடங்களில், வெட்ட வெளிப் பகுதி களில் பேசிப் பழகினான். விளைவு? தலைசிறந்த பேச்சாளன் ஆகி விட் டான். எனவே எழுச்சியை என்றும் கை விடாதே!

'முடியாது என்ற சொல்லே என் அகராதியில் கிடையாது,' என்ற நெப்போலியன், வரலாற்றுச் சாதனை படைக்கவில்லையா? 'சென் றேன்; கண்டேன்; வென்றேன்,' என்ற சீசரின் மன உறுதியை, எழுச் சியை நம்மால் மறந்து விட முடியுமா?

'எதுவும் நம்மால் முடியும்' என்று எழுச்சியோடு செயல்பட்டால் உல கையே நீ மாற்றி விடலாம். சைக் கிளே விடத் தெரியாத காந்தியடிகள் ஒரு மாலைக் கூட்டத்திற்குப் போக நேரமாகி விட்ட பொழுது மன எழுச்சியினால், தானே சைக்கிளை ஓட்டி மற்றோரைப் பிரமிக்க வைத்து விடவில்லையா?

'அட, மண்ணில் தெரியுது வானம், அது நம் வசப்படலாகாதோ?' என்ற பாரதியின் 'எழுச்சி அவரை உலக மகா கவியாக்கியது. உலகை மாற்றும் எழுச்சியை உன்னிடம் ஊட்டுவதற் காக அவர், 'போர்த் தொழில் பழகு,' 'முனை முகத்து நில்,' 'கோல் கை கொண்டு வாழ்;' என்ற வகையில் புதிய ஆத்திச்சூடியினையே உனக்குப் பரிசளித்திருக்கிறாரே!

ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவராகிய உங்களைக் குழந்தைக் கவிஞர் நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறீர் என்று நம்பிக்கையோடு வாழ்த்துகிறாரே, அதற்கு என்ன காரணம்? உலகை மாற்றும் எழுச்சி உங்களிடம் உத்வேகம் கொண்டு விட்டது என்று அவர் உணர்ந்து விட்ட காரணத்தால்தான் உளமார அவர் இவ்வாறு வாழ்த்துகிறார்.

நீ உன்னை மற்றவர்களோடு ஒப் பிட்டுப் பார்த்து, நம்மால் அவனைப் போல் மதிப்பெண்கள் பெற முடியாது என மனம் சோர்ந்து முடிவு கட்டி விடாதே! ஔவையையே ஆடு மேய்க்கும் சிறுவன், 'பாட்டி, பழம் சுடுகிறதா?' எனக் கேட்டு ஔவையினை வென்று காட்டினான் அல்லவா? 'கருங்காலிக் கட்டைக்கு நாணாத கோடாரி இருங்கதலித் தண்டுக்கு நாணும்'. கருங்காலி விறகை உடைக்கும் கோடாரி வாழை மட்டையில் வழுக்கி ஓடும். பதினாறு வயது மார்க்கண்டேயன் கூட யமனை வெற்றி காண முடியும். இரும்புக்கு நிகரான ஔரங்கசீப் பையே துரும்பான சிவாஜி தூ வென்று உதறித் தள்ள ஊக்கம் தந்தது அவனுடைய இதயத்து எழுச்சிதானே; புது உலகை ஆக்க வந்த புரட்சிதானே!

உன்னதமான இலக்கியமே, உலகையே மாற்றி அமைக்கும் எழுச்சி மட்டும் உன் உள்ளத்தே தோன்றி விட்டால் ஓடோடி வந்தி டாதோ ஒளிமயமான வெற்றிச் செல் வம்! உயரிய உன் மடலுக்காகக் காத் திருக்கிறேன்!

(தொடரும்)

பிருந்தாவனக் கவியரங்கம்

இயற்கையின் எழில் ஓவியம்



பச்சைப் பட்டாடைத் தோற்றம் — இதைப்
பார்ப்பவர் மனத்தை மாற்றும்;
படர்ந்து நிற்கும் கொடிகள் — பக்கம்
பாய்ந்து செல்லும் ஆறுகள்;

உயர்ந்து நிற்கும் மரங்கள் — உடன்
மடல் கொண்ட செடிகள்;
இயற்கையின் கைவண்ணம் — மனம்
இறைவனை என்றும் எண்ணும்!

வட்டமிடும் பறவைகள் கூட்டம்
வகையான விலங்குகள் ஓட்டம்;
காணா உலகம் காண்போம் — நாம்
கண்ணாலே கண்டு கற்போம்!

இயற்கை எழில் ஓவியம் — நம்
இதயம் பாடும் காவியம்;
கற்பனை விதைகள் ஊன்றும் — நா
கவிகள் பாடத் தோன்றும்!

கண்கவரும் காட்சி — அது
கவி கொஞ்சும் மாட்சி;
நெஞ்சில் நின்ற காட்சி — நாம்
நினைக்கும் போது மகிழ்ச்சி!

— ப. தேவேந்திர குமார், புரசைவாக்கம்

பிள்ளையாரப்பா



சுழிபோடக் கருவான பிள்ளையாரப்பா — வீண்
பழிஓட எமக்கருளும் பிள்ளையாரப்பா
எங்கும் எதற்கும் பிள்ளையாரப்பா — உனை
ஏங்கியே தான் பணிவோம் பிள்ளையாரப்பா

குழந்தை உருவான பிள்ளையாரப்பா — இந்தக்
குவலயம் காத்திடும் பிள்ளையாரப்பா
தலைகுட்டல் தான்போடப் பிள்ளையாரப்பா — எம்
நிலை உயர நீயருள்வாய் பிள்ளையாரப்பா

ஊரெங்கும் உன் கோயில் பிள்ளையாரப்பா —
மக்கள்
ஊழ்வினைகள் களைவாய் பிள்ளையாரப்பா
உன்பதம் எமக்கருளப் பிள்ளையாரப்பா — என்றும்
உன்னையே தொழுதிடுவோம் பிள்ளையாரப்பா

அவனியில் முதல் தெய்வம் பிள்ளையாரப்பா — நீ
அன்பினில் நினைத்தெழுவாய் பிள்ளையாரப்பா
தாய்தந்தை வலம்வந்த பிள்ளையாரப்பா — அழகு
செவ்வடிவில் நலம்தருவாய் பிள்ளையாரப்பா

— குமார், மதுராந்தகம்.

வருக! வருக! புத்தாண்டே!



வருக! வருக! புத்தாண்டே!

வருக! வருக! புத்தாண்டே!
வளங்கள் நிறைந்த புத்தாண்டாய்!
தருக! தருக! புத்தாண்டே!
தனமும் குணமும் தந்திடவா!

ஒருமைப் பாட்டில் உயர்ந்திடவா;
ஒன்றே குலமெனை உணர்த்திடவா!
பெருமை மிக்க பாரதமாய்ப்
பேறும் புகழும் பெற்றிடவா!

சத்தியம் சாந்தம் நிலைத்திடவா;
சமத்துவம் எங்கும் நிலவிடவா!
இத்தரை மாந்தர் என்றென்றும்
இன்புற்று மகிழ்ந்திட வாவாவா!

உண்மை, அன்பு, ஒழுக்கமெனை
உயரிய பண்புகள் அனைத்திலுமே
எண்ணம் உயர்ந்திட வாவாவா!
எல்லா நலனும் தாதாதா!

— அ. சுப்பையன், செட்டிகுறிச்சி.



புத்தாண்டுச் செய்தி

காலமென்னும் ஏட்டிலே
கவிதையொன்று காண்கிறோம்
கோலம் மின்னும் முதல் வரி
தொடங்குகின்ற ஜனவரி.

பன்னிரண்டு வரிகள் தான்
புதிய ஆண்டுக் கவிதையில்
முன்னும் பின்னும் வார்த்தைகள்
முந்நூற்(று) அறுபத் தைந்துதான்.

புதிய ஆண்டு பூத்ததும்
பொங்குகின்ற மகிழ்ச்சிதான்
உதயமாகும் ஆண்டுக்கு
உலகமெங்கும் வாழ்த்துக்கள்

தேதி கொண்ட காலண்டர்
தீர்ந்து போகும் பழையது
சேதி சொல்லும் காலண்டர்
சிரிக்கும் புத்தம் புதியதாய்

எந்த நாளில் விடுமுறை?
என்று எவர் பிறந்தநாள்?
அந்த நாட்கள் அறியலாம்
அரிய நண்பன் காலண்டர்.

செல்லுகின்ற ஆண்டிலே
செய்த யாவும் சிந்திப்போம்
நல்ல செய்கை தொடருவோம்
நன்கு கற்று உயருவோம்.

பிழைகளுக்கு வருந்துவோம்
புதிய ஆண்டில் திருந்துவோம்
உழைப்பை மட்டும் நம்புவோம்
உயர்வு உண்டு நிச்சயம்.

— சி. விநாயகமூர்த்தி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

புதிய ஆண்டு பிறக்கட்டும்!

புதிய ஆண்டு பிறக்கட்டும்
புதுமை எங்கும் மலரட்டும்
நதிகள் பெருகி வழியட்டும்
நாட்டில் வளமை செழிக்கட்டும்

கல்வி கலைகள் பெருகட்டும்
கடமை உரிமை சிறக்கட்டும்
சொல்லும் நலங்கள் சேரட்டும்
துன்பம் கவலை நீங்கட்டும்


உலகை மருட்டும் போர்ப்பயம்
உலகை விட்டே மறையட்டும்
உலவும் ஏற்றத் தாழ்வுகள்
உருவம் இன்றித் தொலையட்டும்

ஒருமைப் பாடு வளரட்டும்
உண்மை அமைதி ஓங்கட்டும்
சிறுமைச் செயல்கள் மறையட்டும்
சேர்ந்து மக்கள் உயரட்டும்

கடந்த கால படிப்பினை
கண்டு தேதி வாழ்விலே
நடக்க உறுதி பூணுவோம்
நன்மை நாடும் காணவே!

— கொட்டப்பட்டு, ப. சக்திவேலன்

கொடியில் காயுது துணிகள்



கொடியில காயுது துணிகள்
குளத்தில குளித்த மணிகள்;
மிடியுடன் சட்டைக் கோட்டும்
மெதுவாய் ஈரம் சொட்டும்!

அப்பாவோட வேட்டி — அதுக்கு
ஆங்கிலப் பேரு தோத்தி;
சோப்புத் தின்ன சட்டை — அது
பழிக்கும் வெள்ளை மாட்டை!

அம்மா கட்டும் புடவை — அட
ஆடுதே இத்தனை தடவை;
அக்கா போடும் தாவணி — அடடா
அவளோ பவானி!

கைலி குட்டி போட்டதா — அதுதான்
கைக் குட்டை ஆனதா?
துணிகள் எல்லாம் சுத்தம்
துவைத்த விரலின் முத்தம்!

அழுக்குப் போகத் துணியை
அடித்துத் துவைப்பது போல;
கறைகள் எல்லாம் கழுவி
காப்போம் நம்ம மனசை!

— மாணா. பாஸ்கரன், திருவாரூர்.

கானம் பாடும் தவளையார்



தத்தி, தத்தி தாவிக் கொண்டே
கானம் போடும் தவளையார்!
சுத்தி, சுத்தி கானம் பாடும்
கறுப்பு நிறத் தவளையார்!

நிலத்தின் மீதும் நீரின் மீதும்
நீளம் தாண்டும் தவளையார்!
களத்து வரப்பில் உலவும் போது
கழன் திசைக்கும் தவளையார்!

இடியும் மின்னல் காற்று மழையும்
வந்து சேரும் போதிலே...
நொடியும் காலம் கழிக்காமல் புதர்
மறைவிற் கோடும் தவளையார்!

— கே. சீனிவாசன், டி. வி. நல்லூர்.

முறுக்கு



முறுக்கப்பா முறுக்கு
முறுக்கிச்சுட்ட முறுக்கு
இருக்கப்பா விலைக்கு
ஏராளம் உனக்கு...

இறக்கம்மா இறக்கு
என்னவிலை இதுக்கு
பசிக்குதம்மா எனக்கு
பார்த்துக்கொடு முறுக்கு...

பத்துப்பைசா முறுக்கு
பச்சரிசி முறுக்கு
அஞ்சிபைசா முறுக்கு
அடுக்கடுக்காய் கணக்கு...

காசு இல்லை எனக்கு
கடனாய்க் கொடு முறுக்கு
ஆசையிருந்தா உனக்கு
அம்மாதானே எனக்கு...

— வெ. ம. கேசவன், வெள்ளம்பாக்கம்.



உலகத்திற்கு வழிகாட்டிய உத்தமர்கள்

(பாகம் — 1 — மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு — பக். 180 — ரூ. 17)

சீன மண்ணில் பூத்த சிந்தனை மலர் கன்பூசியஸ், பழைமையான கிரேக்கத்தின் பகுத்தறிவுச் சுடர் சாக்ரடீஸ், குருவைப் பின்பற்றிய கொள்கைச் சிற்பி பிளேட்டோ, புரட்சி மலர்கள் பூத்த பூந்தோட்டம் ரூஸோ ஆகிய நான்கு மேதைகளையும் பற்றிச் சொல்லுகிறது இந்த முதல் பாகம். உலகுக்கு வழி காட்டிய இந்த உத்தமர்கள் அனைவரும் தூய உள்ளம், அன்புள்ளம், பெரிய உள்ளம் தொல்லுலக மக்கள் எல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் கொண்ட தன்னலமற்ற தகைசான்ற பெரியோர். இந்தப் பேரறிஞர்கள் எந்தச் சூழ்நிலையில் எப்படி உருவானார்கள், இவர்கள் போற்றலுக்கும் தூற்றலுக்கும் ஆளான விதம் எப்படி, இந்த நல்லறிஞர்களின் சிந்தனைகள் இன்றைக்கும் நின்று நிலைத்திருப்பது ஏன், இவர்களை நம் வழிகாட்டிகளாய் ஏற்கும்படி அப்படி என்ன சாதித்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறது நான்கு தனித்தனி நூல்களை ஒன்றாய் இணைத்திருப்பதைப் போன்ற இந்தத் தொகுப்பு.

(மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண்: 1447, 4, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை — 600 017.)

நிலவைப் பூமிக்குக் கொண்டு வருவோம்

(பா. ப. குமரன் — பக். 100 — ரூ. 10 — வெளியிடுபவர்: ப. பா. குமரன், 11, பிள்ளையார் கோயில் தெரு, சென்னை — 600 003.)

குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் நடத்தப் பெறும் செல்லப்பா ரங்கம்மாள் நினைவுப் பரிசுப் போட்டியில் (1988) முதல் பரிசு பெற்ற நாவல் இது என்பது தனிச் சிறப்பு. 'எது நடந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் மனம் வேண்டும். நடந்து முடிந்த பிறகு, யாராலும் ஒன்றும் செய்ய முடியாத போது, அதைப் பற்றி மனத்தை வருத்தி வேதனைப்பட்டாலும் ஒன்றும் நடக்கப் போவதில்லை.' — இப்படிப்பட்ட யதார்த்தமான உண்மைகளை வலியுறுத்தும் நிகழ்ச்சிகளைக் கோத்து, பதினோரு அத்தியாயங்களில் நாவலை முடித்திருக்கிறார் ஆசிரியர். பெரிய எழுத்தில் நிறையப் படங்களுடன் படிக்கத் தூண்டுவதாய் இருக்கும் இந்தப் பரிசு பெற்ற நூல் தனது முதல் படைப்பு என்று ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதைக் காண ஆச்சரியமாய் இருக்கிறது.

கணிப் பொறியின் கதை

(டாக்டர் வ. தேனப்பன் — பக். 120 — ரூ. 10 — தெய்வம் பதிப்பகம், 6, வெ. ஊருணி வடக்கு, தேவகோட்டை — 623 302).

கம்ப்யூட்டர் என்ற கணிப்பொறி ஆரம்பத்தில் ஒருவித மலைப்புத் தந்த கட்டத்தைத் தாண்டியாயிற்று. இப்போது சாதாரணப் பள்ளி மாணவர்களுக்குப் பாட லெவலுக்கு இறங்கியிருக்கிறது. இருந்தாலும் புரிந்து கொள்ளுவது அத்தனை சுலபம் இல்லை என்பது பெரும்பாலோரின் கருத்தாக இருக்கிறது. ஒரு கெட்டிக்கார மாணவனும் கணிப்பொறி விஞ்ஞானி மாமாவும் உரையாடும் பாணியில் கம்ப்யூட்டர் நுணுக்கங்களை ரொம்பச் சாதாரண விஷயம் போலக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார் ஆசிரியர். 'எழுதப் படிக்கத் தெரிந்த இரண்டாம் வகுப்புப் பிள்ளைக்குக் கூடக் கம்ப்யூட்டரைப் புரிய வைக்க முடியும் என்று சாதித்துக் காட்டியுள்ளார்' என்கிறார் கணிப்பொறித் துறைத் தலைவர் ஏ. மாணிக்கம் தமது முன்னுரையில்.

மனித இயந்திரம்

(டாக்டர் வ. தேனப்பன் — பக். 96 — ரூ. 10 — தேன் வள்ளியம்மை பதிப்பகம், 6, வெள்ளையன் ஊருணி வடக்கு, தேவகோட்டை — 623 302.)

'அறிவியல் சமாசாரமா? படா போர்!' என்று ஓடுகிறவர்களை, 'நில்லு தம்பி, நில்லு,' என்று கூப்பிட்டு நிறுத்திக் கதை கதையாய்ச் சொல்கிறார் ஆசிரியர். 'அப்படியா? அப்புறம்?' என்று புருவத்தை உயர்த்திக் கேட்டுக் கொண்டே போக வேண்டியது தான். அறிவியல் விஷயங்கள் அத்துபடி. அதிலும் எலும்புக்கூடு பேசுகிறது என்று ஆரம்பித்து, பற்கள், மூளை, கண், காது, மூக்கு, வயிறு, இதயம் என்று ஒவ்வோர் உறுப்பையும் பேசவிட்டு, சமயத்தில் உங்களுக்குச் சரியாய் அரட்டை அடிக்கவும் விட்டு, உங்கள் உடலுறுப்புக்களைப் பற்றி நீங்கள் புரிந்து கொள்ள வேண்டிய சகல விஷயங்களையும் புரிய வைத்திருக்கிறார்.


தங்கையைத் தேற்றினார் சசிவர்ணம் —
ஜகதா, பயப் படாதே. இங்கே தான் விளையா டிட்டிருப் பாங்க.
ஆமாங்க..
எட்டுக்கு எட்டு ௯
ஜகதா புலம்பினாள்.
என் கண்ணே பட்டுடுச்சே.... என் ராமு! என் லட்சுமி!...
கதை: தேசபந்து
படம்: ஜெ...
ரஞ்சித் சசிவர் ணத்தைத் தனியே அழைத்து-
நோ யூஸ், மிஸ்டர் சசிவர்ணம்! இந்த எட்டுக் குழந்தைகள்- ராமு, லட்சுமி இங்கு இல்லை. அவர்களை யும் கடத்தியாச்சு!
கடவுளே! எங்களுக்கு ஏன் இந்தச் சோதனை?..
இதை உங்களால் கண்டுபிடிக்கவே முடியாதா?
முடியும்! ஆனா நீங்க அதுக்குக் கொஞ்சம் ரிஸ்க் எடுக்கணும்..


நீங்க மட்டும் குற்றவாளியைப் பிடிச்சுத் தரதா இருந்தா நான் என் சொத்து சுகமெல்லாம் இழக்கத் தயார்.
ரொம்ப நன்றி... சரி, இப்போ ஒகேனக்கல் பக்கமா எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. வரேன்...
ஒகேனக்கல்—காவேரிக் கரையில் ஒரு பரிசலோட்டியை விசாரித்தான் சந்திர்—
உங்க தொழில்ல ரொம்ப வயதானவர் யார்? ஒரு அரசாங்கப் பரிசு இருக்கு!
வயதான பரிசலோட்டி ஒருவரை அழைத்துவந்தான் ஓர் இளைஞன்—
வாங்கண்ணே! உங்களுக்கு இனாம் தர்றாராம்!
வயசு எண்பதுங்க! இன்னைக்கும் துடுப்புப் போட்டார்னா நாங்க திண்டாடிப் போவோம்!


பெரியவரே, உங்க பேரென்ன?
மண்ணு தின்னிங்க.
வாங்க பெரியவரே, உங்களோட கொஞ்சம் தனியாப் பேசணும்.
ஜமீந்தார் ஜகவீர பாண்டியனைப் பற்றி விசாரித்தபின்—
அந்தத் திம்மையா பற்றி ஏதாவது தெரியுமா?
அவன்தான் ஜெயில் லருந்து வந்தாச்சே!..
இந்தப்பக்கம் சுத்திட்டிருந்தான். இப்ப காணல.
அந்தத் திம்மையாவுக்குச் சொந்தக்காரங்கன்னு..
ரெண்டு புள்ளைங்க. ஜோரா பரிசல் தள்ளுவாங்க. அவங்களும் தென்படலை.
அவங்களைக் கடைசியா எப்ப பாத்தீங்க?
ஒரு ரெண்டு வாரம் இருக்கும்... அவங் கப்பன் திம்மையானிடம் "எட்டுக்கு எட்டு மூடிக்கிறவரை ஓயமாட்டோம்!"னு சத்தியம் பண்ணினப்போ பாத்தேன்...


எட்டுக்கு எட்டு!... பெரியவரே, அதுக்கு என்ன அர்த்தம்? உங்களுக்கு ஏதாவது தெரிந்திருந்தால் சொல்லுங்களேன்!
அந்த ஜமீந்தார் பாவி குடிசையிலே அடைச்சு எரிச்சானே திம்மையாவின் சொந்தக்காரப் புள்ளைங்களை! — அவங்க மொத்தம் எத்தனை தெரியுமா? எட்டு! அதே போல ஜமீன் வாரிசுகள் எட்டுப் பேரைச் சேர்த்து எரிக்கிற வரைக்கும் அவங்க ஓயமாட்டாங்களாம் தம்பி!
நான் வருகிறேன் பெரியவரே... உங்களை அப்புறம் பாக்கறேன்!
ஓ மை காட்!
?!
ரஞ்சித் ஓடினான் சசிவர்ணத்தைப் பார்க்க!
தொடரும்.

பிருந்தாவனக்

பகவான் ஒரு புதிர்



அர்ஜுனனும், கிருஷ்ண பரமாத்மாவும் ஒருமுறை ஒரு பணக்காரனைச் சந்திக்கச் சென்றார்கள். அவன் கர்வமும், படாடோபமும் உடையவன். அவன் அவர்களை வரவேற்கவில்லை. அவர்களுக்கு உணவு வழங்கவோ, அன்புடன் பணிவிடையோ அவன் செய்யவில்லை.

இருந்தாலும் கிருஷ்ண பரமாத்மா அவனை ஆசிர்வதித்து அவனுக்கு ஏராளமான பொன்னும் பொருளும் கிடைக்கும்படி செய்தார்.

பிறகு அவர்கள் இருவரும் ஓர் வயதான ஏழையின் வீட்டிற்குச் சென்றார்கள். அந்த ஏழையிடம் ஒரு பசு இருந்தது. அவன் அவர்கள் இருவரையும் வணங்கி, அவனிடம் உள்ள பால் அனைத்தையும் கொடுத்தான். ஆனால் கிருஷ்ண பரமாத்மாவோ, அவன் வைத்திருந்த பசுவை இறக்கச் செய்தார்!

அர்ஜுனன் திகைத்துப் போய், ''உங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உங்களை அவமானப்படுத்திய அந்தப் பணக்காரனை ஆசிர்வதித்தீர்கள். ஆனால் உங்களுக்கு அன்புடன் பணிவிடை செய்த அந்த வயதான ஏழையைச் சபித்தீர்கள். இதற்குக் காரணம் யாதோ?'' என்று வினவினான்.

அதற்குக் கிருஷ்ண பரமாத்மாவோ, ''அப்பணக்காரன் தன்னிடம் உள்ள செல்வத்தைக் கொண்டு கொடுமையான பாவங்களைச் செய்து நரகத்தை அடைவான். அந்த ஏழையோ, அப்பசுவிடம் உள்ள ஆசையை விடுத்து என்னிடம் வந்து உறைவான்,'' என்று கூறினார்.

அர்ஜுனன், ''கிருஷ்ண பகவானே! உம்முடைய கிருபைகள் யாவும் புதிரானவை. நன்மை செய்வது போல் தண்டனை தந்து, கெடுதல் செய்வது போல் நல்லது அருளும் உங்கள் கருணையைப் புரிந்து கொண்டேன்,'' என்று கூறினான்.

மூலம்: சுவாமி சிவானந்தர்.

தமிழில்: கோ. அனுராதா:

ஏழை வைத்தியர்



நாட்டு வைத்தியத்தில் தண்டபாணிக்கு இணையாக யாரும் இல்லை என்கிற பெயர் பிரபலமாகிவிட்டது.

'ஏழை வைத்தியர்' என்றே அவருக்குப் பெயர். அவருடைய அப்பாவுக்கும் அதே பெயர்தான். அதன் அர்த்தம் அவர் ஏழை என்பதல்ல. தந்தையின் கட்டளைப்படி ஒரு கொள்கை போல அவர் பணக்காரர் யாருக்குமே வைத்தியம் பார்ப்பதில்லை!

லேகியம், பஸ்பம், சூரணம் என்று பல முறைகள், இதைத் தவிர தைலச் சிகிச்சை. கொஞ்சம் கடுமையான வியாதியாக இருந்தால் பத்தியமும் கடுமையாகத்தான் இருக்கும். பலன் நூற்றுக்குத் தொண்ணூறு நிச்சயம்.

கதையரங்கம்

இந்த நிலையில்தான் பல செல்வந்தர்கள் தீராத வியாதி காரணமாக அவரைத் தேடிக் கொண்டு வந்தார்கள்.

தண்டபாணிக்கும் பண ஆசை தொற்றிக் கொண்டு விட்டது.

ஏழைகளுக்கு வைத்தியம் பார்ப்பதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டே வந்து பிறகு நிறுத்தியே விட்டார்.

அவர் பணக்கார வைத்தியரான ஒரே வருடத்தில் அவர் புகழ் கெடத் தொடங்கி விட்டது.

லேகியம், பஸ்பம், சூரணம் எல்லாம் பாட்டில் பாட்டிலாகத் தங்கிப் போய்விட்டன.

நூற்றில் தொண்ணூறு வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தி வந்த அவருடைய வைத்தியம் இன்று பத்துப் பேரைக் கூடக் காப்பாற்ற இயலாத பரிதாப நிலைக்கு வந்து விட்டது!

தண்டபாணி காரணம் புரியாமல் தவித்தார்!

அப்பொழுதுதான் ஒரு நாள் — அவருடைய அப்பாவின் வைத்தியக் குறிப்புக்கள் எழுதி வைத்திருந்த டைரி ஒன்று தற்செயலாகக் கண்ணில்பட, எடுத்துப் புரட்டினார்.

அதில் ஒரு பக்கத்தில் அவருடைய அப்பா அவருக்காகப் புத்திமதி ஒன்றையும் குறித்து வைத்திருப்பது தெரிந்தது.

'ஏழைகளுக்குச் செய்யும் வைத்தியம் தான் உனக்குப் புண்ணியத்தோடு புகழையும் தரும். காரணம், நாட்டு வைத்தியத்தில் பத்தியம்தான் முக்கியம். ஏழைகள் ஏற்கெனவே பத்திய உணவு சாப்பிட்டு வருபவர்கள். எனவே இயற்கையாகவே அதைச் செயல்படுத்தி விடுவார்கள். பணக்காரர்கள் விஷயம் அப்படி அல்ல. அவர்களுக்குப் பத்தியம் ஒரு கொடுமை. ஆகவே அவர்கள் அதைக் கடைப்பிடிப்பதும் கஷ்டம். கடைசியில் உன் பெயர்தான் கெடும்!'

தண்டபாணி மீண்டும் 'ஏழை வைத்தியர்' ஆனார்!

— கமலா நடராஜன், ஆடுதுறை.

தெரு போர்டைப் பாராதே!

புதிதாக வந்திருந்த ஆசிரியர் ஆங்கிலப் பாடம் அன்று நடத்தினார்.

சில வார்த்தைகளுக்கு ஸ்பெல்லிங் கேட்ட போது பெரும்பாலான மாணவர்களுக்குச் சரியான ஸ்பெல்லிங் தெரியவில்லை.

"நீங்கள் ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றால், ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள கடைப் பெயர்கள், விளம்பரங்கள், நோட்டீஸ்கள் இவற்றை உன்னிப்பாகக் கவனித்து, ஸ்பெல்லிங் கற்றுக் கொள்வதோடு அவற்றின் பொருள்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்," என்று மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்.

அன்று ஆசிரியர் கலர் என்ற வார்த்தைக்கு ஸ்பெல்லிங் சொல்லும்படி ஒரு மாணவனைக் கேட்டார். அவன், **'COLOR,'** என்றான். ஆசிரியர் தவறு என்றார். மாணவர்கள் அதுதான் சரி என்று கூறினார்கள். பிறகு டீ என்ற வார்த்தைக்கு ஸ்பெல்லிங் கேட்டபோது ஒரு மாணவன் **'TEE'** என்றான். அதே போல சென்டர் என்ற வார்த்தைக்கு **'SENTER'** என்றார். ஆசிரியர் தவறு என்று கூறினாலும், மாணவர்கள் சரியானது என்றனர்.

"நீங்கள் தவறாகச் சொல்கிறீர்கள். ஆனால் எல்லோருமே சரியானதுதான் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று ஆசிரியர் கேட்டார்.



"நீங்கள் சொன்னபடியே நாங்கள் கடைத் தெருவில் ஒரு போர்டைக் கூட விடுவதில்லை. படித்துப் படித்து அதிலுள்ள எல்லா வார்த்தைகளையும் பாடம் செய்து விட்டோம். பொது இடத்தில், எல்லோரும் படிக்கும் இடத்தில் தவறான ஸ்பெல்லிங்கை எழுதி வைத்திருப்பார்களா, சார்? நாங்கள் சொன்னவை எல்லாமே கடைகளில் எழுதப்பட்டுள்ள வார்த்தைகள் தான். அதுவும் நீங்கள் சொன்னது போல் பார்த்துத்தான் தெரிந்து கொண்டோம்" என்றனர்.

அன்று மாலை கடைத் தெருவுக்குச் சென்று பார்வையை விளம்பரப் பலகை

களின் மேல் ஓட விட்டார், ஆசிரியர். **COLOR, TEE, SENTER, SERVICE CENTER** — இப்படித்தான் இருந்தன.

வியாபாரத்திற்காக எழுதிய விளம்பரத்தில் ஸ்டைல் என்று சொல்லிப் புதுமை என்று, இப்படித் தவறான ஸ்பெல்லிங்குகளைக் கடைக்காரர்கள் எழுதி வைத்து விடுகிறார்கள். அதைப் படிக்கும் மாணவர்களின் மனத்தில் பசுமரத்தாணிபோல் அந்த ஸ்பெல்லிங்தான் நிலைத்து நின்று விடுகிறது. ஆசிரியர் தவறு என்று சொன்னாலும் அவர்கள் ஆசிரியரையே சந்தேகமாகப் பார்க்கிறார்கள்.

கடைக்காரர்களைச் சரியான ஸ்பெல்லிங் எழுதும்படி சொல்ல ஆசிரியரால் முடியுமா?

மாணவர்களிடம் நிலைமையை விளக்கி, இனிமேல் விளம்பரங்களைப் படிக்காதீர்கள் என்று சொல்லிவிட்டார்.

— க. இராமலிங்கம்.

நரியை வென்ற முயல்



ஒரு காட்டில் மூன்று முயல்கள் ஒற்றுமையாய் வசித்து வந்தன. தினம் உணவு சேகரிக்க வெளியே செல்லும் போது, மாமிச பட்சணிகளான மிருகங்களுக்குத் தெரியாமல் செல்வது வழக்கம்.

அந்த மூன்று முயல்களுக்குள் இளைய முயல் மிகவும் புத்திசாலியாக இருந்தது. சோதனை வந்தால் புத்தி சாதுரியத்தினால் அதைச் சுட்டிக்காட்டி ஆபத்தை எடுத்துக் கூறும். பெரிய முயல்கள் இளைய முயலுடன் தப்பித்துவிடும்.

ஒரு நாள் வழக்கம்போல, மூன்றும் உணவு தேடக் காட்டில் அலைந்து கொண்டிருந்தன. அப்போது மிகப் பசியோடு எதிரில் வந்த ஒரு குள்ள நரி முயல்களைக் கண்டதும் எப்படியாவது அவற்றை வளைத்துப் பிடித்துத் தன் பசியைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டது. எனவே, நரி, தன் சூழ்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியது. "முயல்களே, எனக்குக் கண் தெரியாது. தயவு பண்ணி என்னை என் குகையில் விட்டு விடுவீர்களானால், என் வாழ்நாள் முழுதும் உங்களை மறக்கவே மாட்டேன்," என்றது நரி.

இதைக் கேட்டவுடன் முதல் இரண்டு முயல்களும் இரக்கத்துடன் உதவி செய்ய முன் வந்தன.

இளைய முயல் தடுத்து நிறுத்தி, "அண்ணன் முயல்களே, நரிக்குத்தான் கண் தெரியவில்லை என்கிறதே, பின் எவ்வாறு முயல்களே என்று கூவி அழைத்து நம்மை அடையாளம் கண்டு கொண்டது?" என்றது.

தம்மைப் பிடிக்க நரி செய்த சூழ்ச்சியைப் புரிந்து கொண்டு குட்டி முயலுடன் பெரிய முயல்கள் இரண்டும் தப்பிச் சென்றன. நரி ஏமாந்து போயிற்று.

இளைய முயலின் புத்திசாலித்தனத்தை அவ்விரண்டு முயல்களும் பாராட்டின.

— பெ. சக்திவேல், சம்பேரி.



"எங்க அம்மா இன்னிக்கு 'பேப்பர் தோசை' சுட்டாங்க..."

"நீ எத்தனை சாப்பிட்டே...?"

"அரை குயர்..."


வந்தவர்: நான் முட்டை வியாபாரம் செய்யலாம்னு இருக்கேன். 'லோன்' கொடுங்க ஸார்!

வங்கி அதிகாரி: முன் அனுபவம் ஏதாவது இருக்கா?

வந்தவர்: ஓ... பள்ளிக்கூடத்திலே படிக்கும்போது பரீட்சையிலே, எல்லாப் பாடத்திலும் 'முட்டை' வாங்கியிருக்கேங்க...!

— ஜி. ராஜசேகர்.




சிரி சிரி ழ வாய்
நீங்க எதுவு சாப்பிட்டீங்களான்னு நான் தெரிஞ்சுக்கலாமா?
ஏன் அப்படிக் கேட்கறீங்க?
கீழே இலையைக் கூடக் காணோமே! அதனாலதான்!
யோகானந்த் சத்யா
அதோ போறாரே, அவர் குடும்பம் ஒரு காடு மாதிரி!
எப்படிச் சொல்றீங்க?
அவரோட அப்பா பெரிய நிதி'மான்'; அண்ணன் கணக்குல 'புலி'; தம்பி வீரத்துல ஆண் 'சிங்கம்'; அம்மா உருவத்தில 'யானை'; இதை வச்சித்தான் சொல்கிறேன்!
யோகானந்த் சத்யா
ஏன்டா மீட்டிங் ஹால்லே போர்டா கொண்டு வந்து வச்சிருக்காங்க?
போர்டு மீட்டிங்கா இருக்கும்!
ரஞ்ஜனி
என்னை எல்லோரும் "நீ குரங்கு மாதிரி இருக்கிறேன்னு" கேலி பண்றாங்க! நான் அப்படியா இருக்கேன்?
அவங்க எல்லோரும் பொய் சொல்றாங்க. குரங்கு தான் உன்னை மாதிரி இருக்கு.
யோகானந்த் சத்யா
நோயாளிக்குப் பின்னாடி எதுக்கு அம்பயர் நிக்கறார்?
அவுட்டானா கையைத் தூக்கறதுக்காம்!
சிங்காரம்
சை_
அப்பா, நம்ம வீட்டு மேலே வெடிகுண்டு விழுந்து வெடிச்சா என்ன ஆகும்?
அம்மா செய்து வச்சிருக்கிற மைசூர் பாகைத் தவிர மத்ததெல்லாம் தூள் தூளா ஆயிடும்!
நடராஜன்

கட்டைவிரல் டாம்



உலகத்திலேயே நிறைய மந்திர தந்திரம் தெரிந்த மெர்லின் என்பவன் கிங் ஆர்தர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து வந்தான்.

மெர்லின் விருப்பமான உருவத்தை எடுக்கும் சக்தி படைத்தவன். ஒரு நாள் அவன் பிச்சைக்கார வடிவம் எடுத்து ஒரு கிராமத்தின் வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்கு மிகப் பசியாகவும் களைப்பாகவும் இருந்தது. கொஞ்சம் களைப்பாறி, அப்புறம் பசியாற ஏதாவது கேட்க நினைத்து ஓர் ஏழை விவசாயியின் வீட்டருகில் நின்றான்.

விவசாயியும் அவனது நல்ல மனம் படைத்த மனைவியும் மந்திரவாதியை அன்போடு வரவேற்று உபசரித்தனர். ஒரு பெரிய குவளை நிறையப் பாலும், ரொட்டியும் கொடுத்தனர்.

மெர்லினுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. பசியோடிருந்த தனக்கு உணவு கொடுத்த தம்பதிகளுக்கு ஏதாவது பரிசு தர வேண்டுமென்று நினைத்தான். அவர்கள் இருவரின் முகமும் வாட்டமுற்றிருப்பதைப் பார்த்து, ''நண்பர்களே! நீங்கள் ஏன் வருத்தமாக இருக்கிறீர்கள்? உங்களுக்கு என்ன குறை? சொல்லுங்கள்,'' என்று விசாரித்தான்.

விவசாயியின் மனைவி கண்களில் நீர் வடிய, ''எங்களுக்குக் குழந்தை இல்லை. எனக்கு மட்டும் ஒரு மகன் இருந்தால், இந்த உலகத்திலேயே சந்தோஷப்பட்ட ஜீவனாக நான்தான் இருப்பேன். ஒரே ஒரு குழந்தை. அவன் ஒன்றும் பெரிய அழகனாகக் கூட இருக்க வேண்டாம். என் கணவரின் கட்டை விரல் அளவு இருந்தால் கூடப் போதும். திருப்தியோடு அவனைச் சீராட்டுவேன்,'' என்றாள்.

மெர்லினுக்கு இந்த வார்த்தைகளைக் கேட்டதும், ஆச்சரியமாகப் போய் விட்டது. ஒரு குழந்தை — அதுவும் கட்டை விரல் அளவுக் குழந்தை — ஓர் ஏழைப் பெண்ணின் கண்ணீரைத் துடைக்கக் கூடியது என்றால், நாம் ஏன் கொடுக்கக் கூடாது என்று தோன்றியது அவனுக்கு. க்ட்டைவிரல் அளவு பையனை அந்தப் பெண்ணிற்கு அளிக்க வேண்டுமென்று வன தேவதைகளை வேண்டினான்.

வன தேவதைகளின் ராணியும் உடனே ஓர் அழகான கட்டை விரலளவு பையனை — அந்த விவசாயியின் கட்டை விரலளவுக்கும் பெரியதாய் இல்லை — விவசாயியின் குடும்பத்துக்குக் கொடுத்தான்.

வனதேவதைகள் எல்லாம் சூழ்ந்து வாழ்த்துப் பாடினர். ராணி உத்தரவிட்டது போல் தேவதைகளும் குழந்தைக்கு அலங்காரம் செய்து மகிழ்ந்தனர். எப்படிப்பட்ட அலங்காரம்.

ஆலிலையில் தொப்பியது தலையிலே
அலங்காரச் சட்டை சிலந்தி வலையிலே
பாந்தமான கோட்டு ரோஜாப் பூவிலே

மூலம்: ஜோசப் ஜேக்கப்ஸ்.



பறவை இறகு வைத்தந்தப் பாண்ட்டிலே
ஆப்பிள் பழத் தோலினிலே காலுறையாம்
அம்மாவின் கண் முடியிலே மேலுறையாம்
காலுக்கிரு ஷூவதுவும் எலித் தோலாம்
சதசதப்பாய் எலி முடியும் அதன்
மேலாம்
என்ன வேடிக்கையான அலங்காரம்!

டாம் அவன் தாய் கேட்டுக் கொண்டபடியே அவன் தந்தையின் கட்டை விரல் அளவே இருந்தான். கொஞ்சமும் உயரவில்லை.

ஆள்தான் வளரவில்லையே தவிர, வயதாக ஆக அவன் குறும்புத்தனம் வளர்ந்தது. நிறையத் தந்திரங்கள் கற்று வைத்திருந்தான். அவன் நண்பர்களோடு சேர்ந்து கோலி விளையாடும்போது அவர்களுக்குத் தெரியாமல் மெதுவாக அவர்கள் பேண்ட் பாக்கெட்டினுள் நுழைந்து விடுவான். கோலிகளை வேண்டிய அளவு நிரப்பிக் கொண்டு நழுவி விடுவான்.

ஒரு நாள் இப்படித் திருட்டு வேலை செய்து கொண்டிருந்தபோது அவன் நண்பன் ஒருவன் பார்த்து விட்டான். உடனே அவன் டாமைக் கையும் களவுமாகப் பிடித்து, ஒரு பெரிய நூலை எடுத்து டாமைச் சுற்றி நன்றாகக் கட்டி விட்டான்.

டாம் தப்பி ஓட முடியாமல் அப்படியே நின்றான். அவனைப் பிடித்த எதிரி நன்றாக நாலு உதையும் கொடுத்தான். உதை வாங்கிக் கட்டிக் கொண்ட டாம் இனிமேல் திருடாமல் நல்லவனாக நடப்பதாகச் சத்தியம் செய்து கொடுத்து விட்டு வீடு வந்து சேர்ந்தான்.

வீட்டில் அவன் அம்மா வெல்லப் பணியாரம் செய்து கொண்டிருந்தாள். வெல்ல மாவைப் பார்த்த டாம் ஆவலோடு எடுத்து வாயில் நக்கிப் பார்த்து, இதை எப்படிச் செய்கிறார்கள் என்று ஆசையோடு எட்டிப் பார்த்தவன் அந்த மாவிலேயே தவறி விழுந்து மூழ்கி விட்டான். கட்டை விரலளவுதானே இருக்கிறான் பாவம், அப்படியே மாவோடு மாவாகக் கலந்து விட்டான்.

மாவை எடுத்துப் பணியாரம் சுட அவன் அம்மா வந்தாள். மாவுக்குள் டாம் இருந்தான். அவள் கவனிக்கவில்லை. டாமாலோ கத்த முடியவில்லை. வாயெல்லாம் பணியாரமாவு ஒட்டிக் கொண்டு அப்படியே இறுக்கி விட்டது. கொஞ்சம் கொஞ்சமாக மாவை எடுத்து உருட்டி அவன் அம்மா எண்ணெய்ச் சட்டியில் போட ஆரம்பித்தாள்.

டாம் அப்படியே மாவில் குதித்துக் கொண்டிருக்கவே, அது ஏதோ வேண்டாத வஸ்து என்று நினைத்து அவன் அம்மா அப்படியே தூக்கி ஜன்னலுக்கு வெளியே எறிந்து விட்டாள். தெருவில் விழுந்த டாமைக் குப்பைக் காகிதம் பொறுக்கும் ஆள் எடுத்துத் தன் கோணிப் பையில் போட்டுக் கொண்டான். கொஞ்ச நேரத்தில் மேலேயிருந்த பாகெல்லாம் காய்ந்து விழுந்தது. டாம் உணர்வு பெற்றவனாய், "ஐயோ அம்மா! அப்பா! காப்பாத்து!" என்று கத்தினான்.

குப்பைக்காரன் அந்தக் குரலைக் கேட்டுப் பயந்து டாமைத் தூக்கிக் கீழே போட்டு விட்டான்.

டாம் வெல்லக் கலவை வேஷத்தோடு வீடு வந்து சேர்ந்தான். அவன் அம்மாவிடம் நடந்த விவரத்தைச் சொன்னான். அவர்களும், "அடடா! உன்னை வெல்லப் பாகில் கவனிக்கவில்லையேடா கண்ணா," என்று சொல்லி நிறையத் தண்ணீர் விட்டு அவனைக் கழுவினாள். அவனை அன்போடு அணைத்து முத்தம் கொடுத்துப் படுக்கையில் போட்டுத் தூங்க வைத்தாள்.

தமிழில்: எஸ். சித்ரா



அடுத்த நாள் மாட்டுக் கொட்கையில் பால் கறக்கச் சென்ற அம்மா டாமையும் தன்னுடன் அழைத்துப் போனாள். அப்பொழுது புயல் காற்று பலமாக வீசியது. புல் கட்டுக்குள் வைத்திருந்த இடத்துக்கு அருகே டாமை நிறுத்தினாள். அவன் பறந்து விடாமல் இருக்க நூலை வைத்துக் கட்டினான்.

புல் கட்டோடு இருந்த டாமை மாடு ஏதோ இலைதான் என்று நினைத்து நாவால் வளைத்து எடுத்து வாயினுள் போட்டுக் கொண்டது. டாம் திணறினான். அதன் பற்களுக்கு நடுவே சிக்கித் தானும் அரைபட்டுப் போய் விடுவோமோ என்று பயந்து டாம், ''அம்மா! அம்மா!'' என்று கத்தினான்.

''டாமி, என் டாமி! எங்கேயிருக்கே?'' என்று பதிலுக்குக் கத்தினாள் அவன் அம்மா.

''அம்மா! இதோ மாட்டின் வாயினுள்ளே,'' என்று அலறினான் டாம்.

டாமின் அம்மா என்ன செய்வதென்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டு மாட்டின் முன் நின்றாள்.

மாடு தன் வாயில் ஏதோ விநோத சத்தம் கேட்கிறதேயென்று நினைத்துப் பயந்து போய் டாமை வெளியில் துப்பியது. வெளியே வந்து விழுந்த டாமைத் தன் மேலாடையை விரித்துப் பிடித்துக் கொண்டாள் அம்மா. பத்திரமாக வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தாள்.

இதே மாதிரி விபத்துக்கு டாம் இன்னொரு முறையும் ஆளானான். ஆனால் அந்த விபத்தில் அவனுக்கு அதிர்ஷ்டம் அடித்தது.

ஒருநாள் டாம் தன் தந்தையோடு மாட்டு வண்டியில் போய்க் கொண்டிருந்தபோது தவறிப் போய்க் கடலில் விழுந்து விட்டான்.

ஒரு பெரிய மீன் டாமை விழுங்கி விட்டது. அந்த மீனைப் பிடித்துப் போய் கிங் ஆர்தரின் மாளிகையில் விருந்து சமைக்க வைத்தனர். மீனை வெட்டும்போது வெளியில் துள்ளி விழுந்த டாமிற்கு அப்பாடா என்று



உயிர் வந்தது.

கட்டை விரல் அளவேயிருந்த டாமைப் பார்த்ததும் எல்லோருக்கும் ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அவனைக் கிங் ஆர்தரிடம் எடுத்துச் சென்றனர். ராஜா அவனைப் பார்த்து மகிழ்ந்து தன்னுடைய சபையின் கோமாளியாக வைத்துக் கொண்டார்.

பல மந்திர தந்திரம் செய்து டாம் எல்லோரையும் மகிழ்வித்தான். எப்பொழுது பார்த்தாலும் ராஜாவோடேயே இருந்தான் வெளியில் போகும் போது மழை வந்தால் ராஜாவினுடைய பாக்கெட்டினுள்ளே படுத்து உறங்கி விடுவான். மழை நின்றதும் ராஜா அவனை எ்டுத்து வெளியில் விடுவார்.

ஒரு நாள் ராஜா டாமிடம், ''உன் பெற்றோர் எங்கே இருக்கிறார்கள்? அவர்களும் உன்னைப் போல் கட்டை விரலளவுதான் இருப்பார்களா, இல்லை சாதாரணமாக இருப்பார்களா?'' என்று கேட்டார்.

டாம், ''என் பெற்றோர் சாதாரண மனிதர்கள் போல்தான் இருப்பார்கள் உயரமாக. ஆனால் அவர்கள் பாவம், ரொம்ப ஏழ்மை நிலையிலிருக்கிறார்கள்,'' என்றான்.

அவன் கதையைக் கேட்ட ராஜா, ''உனக்கு உதவ ஆசைப்படுகிறேன் டாம்!'' என்று சொல்லி அவனைப் பெட்டக அறைக்கு அழைத்து சென்று, ''உனக்கு எவ்வளவு செல்வம் வேண்டுமோ எடுத்துக் கொண்டு போய் உன் பெற்றோருக்குக் கொடு,'' என்று சொல்லி டாமை இறக்கி விட்டார்.

டாமிற்குச் சந்தோஷம் தாங்கவில்லை. நிறையத் தங்கக் காசுகளை அள்ளி ஒரு பெரிய பையில் போட்டுக் கொண்டான்.

தூக்குவதறகுக் கொஞ்சம் சிரமமாக இருந்தாலும் டாம் பையைத் தூக்கிக் கொண்டான். ராஜா ஒரு பெரிய வெள்ளித் தகட்டையும் சேர்த்துக் கொடுத்தார். டாம் எல்லாவற்றையும் சுமந்து கொண்டு எந்தவிதமான அபாயத்தையும் சந்திக்காமல் இரண்டு நாள் — அதாவது நாற்பத்தெட்டு மணி நேரம் விடாமல் பயணம் செய்து, செல்வங்களையெல்லாம் பெற்றோரிடம் சேர்த்து அவர்களை மகிழ்ச்சியடையச் செய்தான்.

''இந்தச் செல்வத்தை வைத்துக் கொண்டு நாம் நிம்மதியாக வாழலாம்,'' என்று அம்மா எத்தனை எடுத்துச் சொல்லியும், கெஞ்சியும் டாம் அம்மாவோடு தங்காமல், ராஜாவின் அரண்மனைக்கே திரும்பி விட்டான்.

டாம் ஏற்கெனவே வெல்லப் பாகில் விழுந்ததாலும் மீனின் வயிற்றுக்குள் சிக்கிக் கொண்டதாலும் அவன் உடைகள் நாசமாகியிருந்தன. அதனால் ராஜா டாமிற்கு நல்ல உடைகளை அணிவித்துப் பார்க்க ஆசைப்பட்டார். புதுவிதமான ஆடையைத் தைக்க ஆணையிட்டார். அவனுக்கு 'வீரத் திலகம்' பட்டம் கொடுத்து மகிழ்ந்தார்.

அவன் புது உடை எப்படி இருந்தது?

பட்டாம்பூச்சி இறகினிலே மேலுடுப்பாம்
பதமடைந்த கோழித் தோலில் கால்
செருப்பாம்
தேவதைகள் சிறகெடுத்துக் கோத்து
விட்டார்
தையல் கலை நிபுணர்களே போர்த்து
விட்டார்
துணிமணிகள் விதவிதமாய்த்
தைத்திருப்பார்
துணைக்கு ஊசி நூலும் பக்கல்
வைத்திருப்பார்
எலிக் குதிரை ரதத்தை யோட்டிச்
செல்லுகிறான்
இந்த டாமே மக்கள் நெஞ்சை
வெல்லுகிறான்!

இந்தப் புதிய உடைகளோடு டாம் மிகவும் அழகாகக் காட்சி தந்தான். அவனுக்காக எலிகள் இழுத்துப் போகும் அழகான ரதம் செய்து தந்தார் மன்னர். எலி ரதத்தில் ஏறி டாம் பவனி வர ஆரம்பித்தான்.

அந்த வேடிக்கை பவனியைக் கண்டு ராஜா சந்தோஷத்தால் திக்குமுக்காடினார். டாமினுடைய ஆடை



அலங்காரமும் அவன் நடையும் அவரைப் பரவசப்படுத்தின. டாமிற்கு ஏற்றாற் போல் ஒரு நாற்காலி செய்யச் சொன்னார். அவன் வாழத் தங்கத்தாலான அரண்மனை ஓர் அடி உயரமுடையது. கதவுகள் ஓர் அங்குலமுடையதாயிருந்தன. அதில் டாம் வாழ்ந்தான். ஆறு சின்ன எலிகள் பூட்டிய கோச் வண்டியொன்றையும் அவனுக்குக் கொடுத்தார்.

எப்பொழுது பார்த்தாலும் டாமையே கவனித்துக் கொண்டிருக்கும் ராஜாவைப் பார்க்கப் பார்க்க ராணிக்கோ ஆத்திரம் தாங்கவில்லை. 'இத்தனூண்டு கட்டை விரல் அளவு பொடியனுக்கு இவ்வளவு மதிப்பா, மரியாதையா?' என்று கறுவிக் கொண்டிருந்தாள். அவனை எப்படியாவது ஒழித்து விட வேண்டுமென்று மனசுக்குள் திட்டம் தீட்டினாள்.



ஒரு நாள் டாமைத் தன்னுடன் அனுப்புமாறு ராஜாவிடம் கேட்டாள்.

ராஜாவும் தயங்கியபடியே டாமை அனுப்பினார். ராணியின் பொறாமைப் புத்தி நன்றாகத் தெரியும் டாமிற்கு. என்ன விபரீதமோ ராணி கோபமாக இருப்பாளோ என்று நினைத்து ஒரு நத்தையின் ஓட்டினுள் சென்று ஒளிந்து கொண்டான். கொஞ்ச நேரத்தில் தாங்க முடியாத பசி எடுத்தது.

கடைசியாக மெல்ல வெளியே வந்தவன், ஒரு பெரிய வண்ணத்துப் பூச்சியைத் தரையில் பார்த்தான். அதனருகே சென்று அதன் மேலே ஏறிக் கொண்டான்.

வண்ணத்துப் பூச்சியும் வேகமாகப் பறக்க ஆரம்பித்தது. மலருக்கு மலர் தாவியது, மரத்துக்கு மரம் பறந்தது. ஒரு வயலை விட்டு மற்றொன்றுக்கு மாறியது. கடைசியாக, ராஜாவின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தது. அங்கே ராஜாவும் மற்றச் சேனைகளும் டாமைப் பிடிக்கத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தனர். டாம் வண்ணத்துப் பூச்சியிலிருந்து அப்படியே ஒரு பெரிய தண்ணீர்ப் பானையில் விழுந்தான். விழுந்தவன் தண்ணீரில் மூழ்கியும் போனான்.

ராணிக்கு எரிச்சல் தாங்கவில்லை. தன்னைப் பார்க்கச் சொல்லி அழைப்பு விடுத்தால் டாம் ஊரைச் சுற்றி விட்டு வந்து விழுந்து கிடக்கிறானே என்று கோபப்பட்டாள். அவன் கழுத்தை வெட்ட வேண்டுமென்று தண்டனை கொடுத்தாள். அதுவரையில் அவனை ஓர் எலி வலையில் போட்டு அடைத்து வைத்தாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பூனை டாமை விடுவிடுக்க எலி வலையை வாயால் கடித்து அவனை வெளியே வரவழைத்தது.

ராஜாவும் டாமை அன்போடு

திரும்ப அழைத்துக் கொண்டார். டாமிற்கு ஏனோ வாழ்க்கை அவ்வளவு சந்தோஷமாக இல்லை.

ஒரு நாள் ஒரு பெரிய சிலந்தி டாமைக் குறிவைத்துக் கடிக்க வந்தது. தன்னுடைய கத்தியால் முடிந்த வரை சிலந்தியோடு போராடினான். ஆனால் அவனால் வெற்றி பெற முடியவில்லை. சிலந்தியின் விஷம் அவன் உடம்பில் பாய்ந்தது. அவன் நின்ற இடத்திலேயே அப்படியே செத்து விழுந்தான்.

சிலந்தி டாமின் ரத்தத்தையெல்லாம் குடித்தது. ராஜாவும் அவன் அரண்மனையில் வாழ்ந்த அனைவரும் இந்தக் காட்சியைப் பார்த்து மிகவும் வருந்தினார்கள். அருமை டாமை இழந்த துக்கத்தை அவர்களால் தாங்க முடியவில்லை.

ராஜ மரியாதையோடு அவனை அடக்கம் செய்தது மட்டுமின்றி, அழகிய பளிங்கிலான சமாதியும் அவனுக்காகக் கட்டினர்.

சமாதியின் மேல் கீழ்க்கண்ட பாடலைப் பொறித்து வைத்தனர்.

ஆர்தரென்ற அரசனுக்கு
அருமையான நண்பனாம்
பேரெடுத்து ஊர் சிரிக்கப்
பெரிய வித்தை செய்தவன்
எலிகள் பூட்டி இழுத்துச் செல்லும்
இரதமேறித் தெருவெல்லாம்
புலியின் வேகம் காட்டி ஓட்டிப்
புல்லரிக்க வைத்தவன்
மன்னன் மக்கள் அனைவருக்கும்
மகிழ்ச்சி வெள்ளம் பாய்ச்சினான்
என்ன கொடுமை எமனுருவில்
இராக்கதனாய்ச் சிலந்திதான்
எடுத்தணைத்து உறிஞ்சித் துப்பி
எறிந்த இடம் இங்குதான்!
படுத்திருக்கான் கட்டைவிரல்
பையனவன் டாமிதான்!
அழுதழுது புலம்பினாலும்
அவன் வரவா போகிறான்!
விழி துடைத்து அவன் பெருமை
விரித்துரைத்துப் பேசுவோம்!

விசித்திரச் செய்திகள்!




மிகப் பெரிய புத்தர் சிலை!

செம்பினால் ஆன மிகப் பெரிய புத்தர் சிலையைச் சீனாவில் உருவாக்கியிருக்கிறார்கள். 110 அடி உயரம், 275 டன் எடை. 3,000 சீனச் சிற்பிகள் இரவு பகலாகப் பாடுபட்டு இந்தச் சிலையை உருவாக்கியிருக்கிறார்கள். ஹாங்காங்கில் உள்ள லண்டாவ் தீவில் 1550 அடி உயரக் குன்றின் மீது இந்தச் சிலை வைக்கப்படும். சிறுசிறு பகுதிகளாகச் செய்திருக்கும் இந்தச் சிலையைக் குன்றின் மேல் வைத்து ஒன்றாக இணைத்து விடுவார்கள்!

ராட்சஸக் கரப்பான் பூச்சி!

அமெரிக்காவில், நியூயார்க் அருகே புரூக்ளின் நகரில் ஒரு வீட்டில் மிகப் பெரிய கரப்பான் பூச்சி ஒன்று பிடிபட்டது. அதைப் பிடித்த பீட்டர் ரோமன் என்பவருக்கு ரூ. 16,000 பரிசு அளிக்கப்பட்டது. இந்த ஆண்டில் பிடிபட்ட மிகப் பெரிய கரப்பான் பூச்சியாம் அது!




கலிங்க தேசத் தலைநகர் புண்டரீகபுரத்தில் அரசன் சம்பாதி...
அரசி! அதோ நம் மகளையும் அவள் தோழியையும் பார்!
ஆனந்தமாக விளையாடுகிறார்கள்!
இளவரசி மணப்பருவம் அடைந்து விட்டாள்...
தேவி மனம் கலங்காமல் கேள்! நம் இளவரசிக்கு ஒரு சாபம் இருக்கிறது... கல்யாணம் ஆன பத்தாம் நாள், அவள் கணவன் இறந்து விடுவான்!
புஷ்பகந்தி: கலிங்க நாட்டு இளவரசி!
கதை: ஆனந்தி-படம்: விநு
ஐயோ! அப்படியானால் புஷ்பகந்திக்குக் கல்யாணமே வேண்டாம்!
மாளவ தேச இளவரசன் மைத்ரேயன், நண்பன் இந்திர தத்தனோடு காட்டில்...
இன்று வேட்டையில் ஒன்றும் சரியாகச் சிக்கவில்லையே....


இளவரசே! நேரமாகி விட்டது... திரும்பலாம்...
அதோ! ஒரு பஞ்சவர்ணக் கிளி!
கிளியை அடித்து வரத் தான் வளர்த்த பருந்தை ஏவினான் மைத்ரேயன்.
கிளியைத் தொடர்ந்து பருந்தும், பருந்தைத் தொடர்ந்து நண்பர்களும் விரைந்தனர்...
அதோ!
புஷ்பகந்தியும் தோழியும் வனபோஜனத்துக்கு வந்திருந்தனர்.
எங்கே, என் பஞ்சவர்ணக் கிளி?
பொல்லாதது! ஓரிடத்தில் நில்லாது!
கிளி, தன் எஜமானி இளவரசி புஷ்பகந்தியைச் சரண் அடைந்து...
கீ! கீ! கீ!
ஐயோ! பருந்து!
ஆ! என் கிளியைக் காப்பாற்று!


இளவரசி செய்த ஆர்ப்
பாட்டத்தில் பருந்து
பறந்தோடி விட்டது....
செல்லக் கிளியே! ஏன்
தனியாகப் பறந்து போனாய்?
பருந்தைத் தொடர்ந்து வந்த நண்பர்கள்,
மறைந்திருந்து கவனிக்க, புஷ்பகந்தியின்
தோழி...
அது ஒரு துணையைத் தேடிப் போயிருக்கும்!
இளவரசி! நீங்கள் கூட மாலையிட
வேண்டிய நாள் வந்து விட்டதே!
மைத்ரேயன்
மறைவிடத்திலிருந்து
வெளிப்பட்டான்...
பயப்படாதீர்கள்!
பருந்தைச்
சங்கிலியால்
பிணைத்து
விட்டேன்...
நீங்கள்
யார்?
நான் மாளவ நாட்டு இளவரசன்,
மைத்ரேயன்... உங்களை
'இளவரசி' என்று உங்கள் தோழி
அழைக்கக் கேட்டேனே....
களைத்திருந்த இளவரசன்
இளைப்பாறினான்...
இது கலிங்க நாட்டு எல்லை...
வனபோஜனத்துக்கு வந்தோம்...
எங்களோடு உணவருந்துங்கள்...



உபசரிப்பை ஏற்று, சற்று நேரம் சென்று பிரியா விடை பெற்றார்கள்...
சென்று வருகிறோம்...
மீண்டும் சந்திப்போம்.
நண்பர்கள், மாளவ நாடு திரும்பும் போது...
இந்திரதத்தா! இளவரசி புஷ்ப கந்தி பற்றி என்ன நினைக்கிறாய்?
இளவரசே! உங்கள் உள்ளம் புரிகிறது; மன்னரிடம் பேசுகிறேன்!
இந்திரதத்தன், மாளவ அரசர் நந்தனிடம்...
வேட்டையாடப் போன சமயம் கலிங்க நாட்டு எல்லையை அடைந்தோம்...
அடடா! கலிங்கநாட்டு அரசன் சுபோதி நம் பகைவனாயிற்றே!
பகைவனையும் நண்பனாக்கிக் கொள்ள முடியுமானால்...
கலிங்க இளவரசியைச் சந்தித்தோம். நம் இளவரசருக்கு ஏற்றவள்தான்!
நல்லதுதான், ஆனால் நடக்கிற காரியமா?
அப்படியானால் நீயே சென்று பெண் கேட்டு வா!


இந்திரதத்தன் தூது சென்றான். கலிங்க நாட்டில் அரசன் ஸம்பாதி. . .
பகை நீங்க நேசக்கரம் நீட்ட வேண்டும் என்று எனக்கும் ஆசைதான் ஆனால் . . . . .
ஆனால் என்ன, அரசே?
இந்திரதத்தா! இளவரசி புஷ்பகந்திக்கு ஒரு சாபம் இருக்கிறது. கல்யாணமான பத்தாவது நாள் அவள் கணவன் இறந்து போவான்!
இந்திரதத்தன் உற்சாகமிழந்து ஊர் திரும்பினான்... அவன் செய்தியைக் கேட்ட நந்தன்...
இது என்ன கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய மாதிரி இருக்கிறதே....!
ஆனால் இளவரசன் மைத்ரேயன் உறுதியாக...
அப்பா! விதியை மதியால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. . . .
அரசர் அரண்மனைப் புரோகிதரைக் கலந்து ஆலோசித்தார். . .
அரசே! கவலைப் படாதீர்கள்... நம் இளவரசர் தீர்காயுளுடன் வாழ்வார்... ஒரு கதை சொல்கிறேன், கேளுங்கள்!




நேபாள தேசத்தில் பத்ரகன் என்ற அரசர்... ஒரு நாள் மலைக் கணவாய் வழியே அவர் போகும் போது...
கிக்ரிக் கீகீ! கிச் கிச்கீகீ!
அரசர் அமைச்சரிடம்...
உனக்குப் பறவைகள் பாஷை தெரியும் என்றாயே... இவை என்ன பேசுகின்றன?
மன்னவா! மலை இறங்கும் குடியானவன் பாம்பு கடித்து இறப்பான் என்று அவை பேசிக் கொள்கின்றன!
மன்னர் ஏளனமாக...
அப்படியானால் இங்கேயே இருப்போம்! நீ சொல்வது பலிக்கிறதா பார்த்து விடலாம்! ஹ..ஹ...ஹா...
சற்று நேரத்தில் நிஜமாகவே ஒரு குடியானவன் அந்தப் பக்கம் வர...
அடேய்! நீ சாகப் போகிறாய், ஜாக்கிரதை!... ..ஹ ஹஹா!
அப்பனே! புல்லுக் கட்டைக் கீழே போடு! அதை அவிழ்த்துக் காட்டு!


குடியானவன் உத்தரவுக்குக் கீழ்ப்படிய...
ஆ! பாம்பு!
ஐயோ!
அரசே! ஜாக்கிரதை!
மந்திரி, குடியானவனை அம்பால் தள்ளி காப்பாற்றினான்...
நாகம் பேசியது!
குடியானவன் நல்லவன். அவனைக் கடிக்க எனக்கு மனம் வரவில்லை. தன் உணவை ஓர் ஏழைக்கிழவனுக்குத் தந்து பட்டினிஇருக்கிறான்.
கால்நடைகளுக்கு ஆசையாகப் பசும்புல் தருகிறான்.
இந்தப் புண்ணியங்கள் அவனைக் காத்தன....!
மன்னன் மனம் திருந்தி, மகிழ்ந்து...
பசித்த ஜீவனுக்கு உணவிடுவது எவ்வளவு பெரிய புண்ணியம் என்று அறிந்து கொண்டேன்... ..நீ வாழ்க!
புரோகிதர் கதை கூறி முடித்தார்...
அன்னதானம் உயிர் காக்கும். நீங்களும் மகனின் நல்வாழ்வுக்கு தானம் பண்ணுங்கள். சாபநிவர்த்திக்குப் பூஜைகளும் யாகங்களும் நடத்துங்கள்!
மன்னர் நந்தன் அவ்வாறே செய்தார்....
அக்னியே ஸ்வாஹா...



... பல நாட்கள் சென்று, நன்கு யோசித்து, திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்தார்.
சர்வ மங்களங்களும் பெருகட்டும்!
வாழ்க! வாழ்க!
புஷ்பகந்தியும் மைத்ரேயனும் ஆனந்தமாக வாழ்ந்தார்கள்... நாட்கள் சென்றன...
உன் முகம் போல சந்திரன் அழகாக இருக்கிறது...
... இருவரும் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தபோது மைத்ரேயனின் குதிரை கனைக்கும் சத்தம் கேட்டு...
ஆ! மேகபூதியைப் பார்த்து எத்தனை நாள் ஆகிவிட்டது!
...லாயத்துக்கு விரைந்தனர்...
மேகபூதி! உன்னை நான் மறந்து விடவில்லை! கோபிக்காதே!
இதற்கு உங்களிடம் எத்தனை அன்பு!
புஷ்பகந்தி தடுப்பதற்கு முன் குதிரை மீது பாய்ந்து ஏறிய மைத்ரேயன்...
என்னடா உலாத்த வேண்டுமா? வா! ஒரு சுற்று சுற்றிவிட்டு வரலாம்!


மைத்ரேயனைச் சுமந்து கொண்டு மேகபூதி பறந்தது!
நான் அவரைத் தனியாக விட்டிருக்கக் கூடாது. ஆனால் யோசிப்பதற்குமுன் மின்னலாகப் பாய்ந்து சென்று விட்டாரே!
புஷ்பகந்தி அரண்மனைக் கோயிலுக்குச் சென்றாள்...
தேவி! நீதான் அவரைக் காப்பாற்ற வேண்டும்.
மைத்ரேயன் உற்சாகத்துடன் இருந்தான்...
குதிரை சவாரி செய்து எத்தனை நாட்கள் ஆகி விட்டன! திரும்பவே மனமில்லை, மேகபூதி!
...காட்டு வழியாகப் போனான்...
இந்த இடம் இவ்வளவு அமைதியாக இருக்கிறதே... பறவைகளின் குரல் கூடக் கேட்கவில்லை!
அப்போது ஒரு பிரும்மராக்ஷஸன் தோன்றி....
நானிருக்கும் இடத்துக்குப் புத்திசாலிப் பறவைகள் எப்படி வரும்! உன்னைப்போல் ஒரு முட்டாள்தான் வந்து சிக்குவான்! ஹா! ஹா! ஹா!


இன்று எனக்கு நல்ல விருந்து....
ஆ! இன்று பத்தாம் நாள்! என்னிடம் வாள் கூட இல்லை!
இளவரசன் பணிவாக...
ஐயா! என்னை விழுங்கு முன் ஒரு வரம் தரவேண்டும்...
என்ன?
எனக்கு விவாகம் ஆகிப் பத்து நாட்கள் தான் ஆகின்றன. என் மனைவியைப் பார்த்து ஆறுதல் கூறிவிட்டு உடனே வந்து விடுகிறேன்.
ஹா! ஹா! ஹா! நல்ல கதை! திரும்பி வருவாயா? நம்பச் சொல்கிறாயா!
ஐயா! நான் நன்கு படித்த இளவரசன். இந்த உடல் என்றேனும் ஒருநாள் அழியப் போகிறது என்பதை அறிந்தவன்...
...ஒரு பசுவே தன் வாக்கைக் காப்பாற்றியது என்றால், நான் ஏமாற்றுவேனா?
அது என்ன கதை?


நெடும ராஜனின் ஆவலைத் தூண்டி விட்டுக் கதை கூறினான் மைத்ரேயன்..
ஓர் அந்தணனின் சில பசுக்கள் தினமும் காட்டுக்குப் போய் மேய்ந்து விட்டு வரும்...
ஒரு நாள் பசித் திருந்த தாய்ப்புலி ஒன்று!, ஒரு பசுவை அடிக்கப் பதுங்கி யிருந்தது...
புலி பாய்ந்தது...
புலியே! என்னைக் கொன்று புசிப்பது உன் சுபாவம். அதில் தவறில்லை. ஆனால் ஒரே ஒரு வரம் கொடு!
என்ன?.. சீக்கிரம் சொல்!
எனக்கு கன்று பிறந்து பத்து நாட்களே ஆகின்றன. அதற்குப் பால் கொடுத்துப் பசி தீர்த்து விட்டு, சொல்லிக் கொண்டு ஓடி வந்து விடுகிறேன்!
ஹ ஹ ஹா! என்னை ஏமாளி என்று நினைத்தாயா? என் மூன்று குட்டிகளும் கடும் பசியோடுதான் எனக்காகக் காத்திருக்கின்றன!



தாய்ப் பசு கெஞ்சியது...
தயவு செய்! ஒரே ஒரு தடவை பால் கொடுத்து, கன்றை நக்கிக் கொடுத்து விட்டு வருகிறேன். அதனை என் சிநேகிதியிடம் ஒப்படைத்து விட்டுத் திரும்புவேன்.
பசுவின் தாயன்பு, தாய்ப் புலியின் மனத்தை உருக்க...
உன்னை எப்படி நம்புவது?
நான் திரும்பி வராவிட்டால் பசித்தவருக்கு உணவிடாமல் செல்வத்தை விரயம் செய்த பாவம் என்னை வந்து அடையட்டும்!
புலியிடம் அனுமதி பெற்றுக் கன்றினிடம் வந்தது பசு....
..நடந்ததைக் கூறி...
கண்ணே! நான் புலிக் குடும்பத்தின் பசி தீர்க்கப் போக வேண்டும். வாக்கு மீற மாட்டேன். நீ சமர்த்தாயிரு!
சற்று நேரத்தில் பசு, புலியிடம் திரும்பி வந்து....
அழுத குழந்தையைச் சமாதானப் படுத்தச் சற்று நேரமாகி விட்டது... உம், உன் பசியைத் தீர்த்துக் கொள்!
புலி அதிசயத்துடன் உள்ளம் நெகிழ்ந்தது....
உன்னைப் போன்ற ஒரு நேர்மையான பிராணியைப் பார்ப்பது அரிது. நீ திரும்ப உன் கன்றினிடமே போ!



என் உடலை உனக்குத் தானம் செய்து விட்டேன். என்னை அடித்துச் சாப்பிடு!
மாட்டேன், உன்னைக் கொல்ல மாட்டேன்!
இரு மிருகங்களின் தியாகமும் ஒன்றை ஒன்று மிஞ்ச. . . . .
உங்கள் தியாகமும் வாய்மையும் உலக மக்களுக்கு எடுத்துக் காட்டாக என்றென்றும் விளங்கட்டும்!
கதை கூறி முடித்த மைத்ரேயன்...
பசுவுக்கு இருந்த சத்திய உணர்வு எனக்கில்லாமல் போகுமா...?
சரி போய் வா... ஆனால் நான் கூறுவது போல் ஒரு சபதம் செய் . . . !
பிரும்ம ராக்ஷஸனின் நிபந்தனையை ஏற்று மைத்ரேயன் . . .
நான் திரும்பி வராமல் உன்னை ஏமாற்றுவேனானால், சாப்பிடத் தொடங்கும் நேரத்தில் 'பிக்ஷாந்தேஹி' என்று கேட்பவருக்குக் கொடுக்காமல் உண்டால் என்ன பாபமோ, அந்தப் பாபம் என்னைச் சூழட்டும் !
தலைநகர் திரும்பி, மனைவியிடம் நடந்ததைக் கூறிய மைத்ரேயன்...
உன்னைப் பிரிவது எனக்குக் கஷ்டம்தான். ஆனால் கொடுத்த வாக்கை நான் காப்பாற்றவேண்டும்...


புஷ்பகந்தியும் மைத்ரேயனுடன் பிடிவாதமாகப் புறப்பட்டாள்...
நீங்கள் வாக்குத் தவறக் கூடாதுதான்; நானும் பின்னோடு வருகிறேன்!
போகும் போதே புஷ்பகந்தியும் மைத்ரேயனும் பேசி திட்ட மிட்ட ஒரு முடிவுக்கு வந்தனர்.
நான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும். . .
காட்டின் ஒரு பகுதியில், ஆற்றங்கரை யோரமாக...
புஷ்பகந்தி! நீ இங்கேயே மறைந்திரு. பிரும்ம ராக்ஷஸனை இந்த இடத்துக்கு அழைத்து வருகிறேன்!
மைத்ரேயன், மேலும் முன்னேறி பிரும்மராக்ஷஸன் இருக்குமிடத்தை அடைய. .
வா! வா! வந்துவிட்டாயா?
அடாடா! நீ பசியோடு காத்திருக் கும்படியாகி விட்டதே! இதோ ஒரு நிமிஷத்தில் ஸ்நானம் செய்து விட்டு வந்து விடுகிறேன்.


குளிக்க ஆற்றில் இறங்கிய மைத்ரேயன், நீந்திய படியே புஷ்பகந்தி இருக்கும் இடத்தை அடைந்தான்...
நீந்தியபடியே நழுவிவிடப் பார்க்காதே: உன் பின்னோடு கரையில் நடந்து வருகிறேன்...
கரையேறினான் மைத்ரேயன்...
அப்பாடா! ஒருவழியாக வந்து மாட்டினாய்... ஒரே பசி!
அதே சமயம் புதர் மறைவிலிருந்து வெளிப்பட்ட புஷ்பகந்தி...
பிக்ஷாம் தேஹி!
பிரும்ம ராக்ஷஸன் திடுக்கிட்டு...
யார் நீ? என்ன வேண்டும்?
என் கணவரை எனக்குப் பிச்சையாகக் கொடுங்கள்!
முடியாது! முடியாது! எனக்குப் பயங்கரப் பசி!
சாப்பிடத் தொடங்கும் போது ஒருவர் பிச்சை கேட்டால் மறுக்கலாமா? பாபமில்லையா?


ஓகோ! என் வார்த்தைகளாலேயே என்னை மடக்குகிறாய்! உன் கணவனை நான் செய்யச் சொன்ன சபதம், எனக்கே பாதகமாயிற்று....
இந்தா, உன் கணவனைப் பெற்றுக் கொள்! இருவரும் சந்தோஷமாக நீண்ட காலம் வாழுங்கள்!
பிரும்ம ராக்ஷஸன் ஒரு தேவனாக மாறினான்...
ஒரு பெண்ணுக்கு பிக்ஷையிடும் வாய்ப்பு இன்று கிட்டியதால், பிரும்ம ராக்ஷஸனாக அலையும் சாபம் நீங்கியது!
அதென்ன கதை?
தேவனை அழைத்துப் போக விமானம் வந்தது....
பசித்து வந்த ஒரு முனிவரை நான் விரட்டி அடித்ததில் அவர் மாண்டு போனார். அவர் மனைவி என்னைச் சபித்து விட்டாள்! அவள் கூறிய சாபவிமோசனம் இன்று நிறைவேறியது...
கலிங்கமும் மாளவ தேசமும் நேச நாடுகளாயின...
மகாராஜா மைத்ரேயன், வாழ்க! மகாராணி புஷ்பகந்தி வாழ்க! வாழ்க!

11 வயதில் எம்.ஏ. (இந்தியில்)



கோடம்பாக்கம் கங்கா நகரில், எண். 2 இலக்கமிட்ட மாடியில், அழைப்பு மணியை அழுத்தினேன்.

கதவின் தாழ்ப்பாளைத் திறந்தான். சுமார் நாலடி உயரமுள்ள ஒரு சிறுவன். சுருட்டை முடி. துறுதுறுக்கும் கண்கள். அந்தக் காலச் சிறுவன் கமல் போல் சதுர முகம்.

''இங்கே ராதாகிருஷ்ணன் என்கிற...'' என்று ஆரம்பித்தேன்.

''நான்தான். வீட்டிலே ரஞ்சித்னு கூப்பிடு வாங்க.''

அசந்து போனேன். இந்தப் பொடியனா இந்தி மொழியில் ப்ரவீண் பரீட்சை பாஸ் பண்ணி விட்டான்!

''அடே! நீதான்டா அது? இந்தியில்...'' என்று ஆரம்பித்தேன்.

''ஆமாம். ப்ரவீண் பரீட்சை — அதுதான் கடைசிப் பரீட்சை — எழுதிப் பாஸ் பண்ணி விட்டேன். அடுத்த பிப்ரவரி (1990)யில் டிகிரி வாங்கிவிடுவேன்!''

''ஆமாம்... 'விசாரத்' பரீட்சை பி. ஏ. என்றால், 'ப்ரவீண்' எம். ஏ. என்று சொல்ல லாம்.'' என்றார் அருகில் அமர்ந்திருந்த திரு. வி. எஸ். நடராஜன்.

''இந்தச் சிறுவனிடம் எப்படி இவ்வளவு ஆர்வம்?''

ராதாகிருஷ்ணனே பேசினான்: ''நான் 'துர்கா நர்ஸரி' பள்ளியிலே படிக்கும் போதே, முதல் ஸ்டாண்டர்டின் போது முதல் பரீட்சையான 'ப்ராத்மிக்' எழுதி பாஸ் பண்ணியாச்சே! அப்போது எனக்கு ரேவதி மிஸ்... அவங்கதான் நல்லாச் சொல்லிக் கொடுத்தாங்க!'' அவன் குரலில் ஆசிரியை பற்றிப் பெருமை! ஐந்தாம் வயதில் 'ப்ராத்மிக்'.

''அப்புறம்?''

''வருஷா வருஷம் மத்யமா, ராஷ்ட்ர பாஷா, ப்ரவேஸிகா, விசாரத், ப்ரவீண் ஒவ்வொரு பரீட்சையாப் பாஸ் பண்ணிட் டேன்...'' ரொம்பச் சாதாரணமாகச் சொன் னான்!

''நான் இந்தப் பரீட்சையெல்லாம் பாஸ் பண்றதுக்குக் காரணமே வீட்டிலே இருக்கிற வங்க கொடுத்த கோச்சிங்தான்...'' என் றான்.

அவன் அடிக்கடி அம்மா என்று பாசத் துடன் சொல்லும் அம்மாவின் பெயர் ஜெய லட்சுமி.

''பரீட்சை சமயத்துலே வீட்டிலே நான், அம்மா, அப்பா மட்டும்தான். படிப்பு, படிப்புதான்.''

ஹாலில் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டே பேசினான் ராதாகிருஷ்ணன்.

''எப்பவாவது ஃபெயில் ஆயிருக் கியா?''

''ஆமாம். ஒரே ஒரு தடவை! 'ப்ரவே ஸிகா' பரீட்சை முதல் தடவை ஃபெயில். ஆனால் அடுத்த அட்டெம்ப்ட்லே பாஸ் பண்ணிட்டேனே...'' என்று சற்று வெட்கத் துடன் சொன்னான்.

பதினோரு வயதிலே 'ப்ரவீண்' பரீட்சை தேறிய முதல் சிறுவன் இவனாகத்தான் இருக்கும்.

தற்சமயம் பத்மா சேஷாத்திரி பள்ளியில் ஏழாவது படிக்கிறான். பள்ளியில் இரண் டாவது மொழி இந்தி. வெளுத்துக் கட்டு கிறான்.

மற்றப் பாடங்களிலும் நல்ல மார்க்:

நாலாவது வகுப்பு வரையில் முதல் ராங்க். இப்போது நான்காவது ராங்க்.

பாட்மின்டன், கால் பந்து விளையாடும் இவன், செஸ், காரம் விளையாடுவதிலும் சூரன்.

பரீட்சை சமயங்களில் மட்டும் விடியற் காலை படிப்பு உண்டு.

இவனைப் பார்க்கச் செவ்வாய், வியாழன் மாலை நேரங்களில் போனால் ஏமாற்றம் தான்.

என்ன காரணம்?

மிருதங்கம் கற்றுக் கொள்கிறானே!


கும்பகோணம் ராஜப்பையர்தான் குரு. நான்கு தாளம் வரை கற்றுக் கொண்டா யிற்று! சும்மாவா? ஏழாவது வயதிலிருந்து மிருதங்கப் பயிற்சி!

''அதில் ஏதாவது பரிசு?''

''ஓ! பாரதீய கலாசார் நடத்திய போட்டி யில் இரண்டாவது பரிசாக வெள்ளிப் பதக் கம் வாங்கியிருக்கேனே!'' குரலில் பெருமை பளிச்சிட்டது.

பேட்டி: 'சின்ன முருகன்.'

அட்டை வண்ணப்படம்: ராஜா பொன்சிங்



ஒரு மரத்துப்

3

அன்று மலர்மகள் உயர்நிலைப் பள்ளியே விழாக் கோலம் பூண்டிருந்தது.

சீருடையில் சிட்டுக் குருவிகள் போலச் சுற்றித் திரியும் மாணவிகள், அந்த இனிய நன்மாலைப் பொழுதிலே வண்ண வண்ண உடைகளுடன் பட்டாம் பூச்சிகள் பறந்து செல்வதைப் போல அகமும் முகமும் மகிழ்ச்சி பொங்க, அங்கும் இங்கும் உலவிக் கொண்டிருந்தார்கள்.

பள்ளியின் பெரிய திடல் ஓரமாக உயர்ந்திருந்த கலை மண்டபத்தின் மேடையிலே மேஜைகளும் நாற்காலிகளும் அழகாக அமைக்கப் பெற்றிருந்தன. மேடையின் முகப்பிலே 'நல்வரவு' தெரிந்தது. மண்டபத்தின் உள்ளே நீல வண்ணத் திரையிலே 'பாரதியார் விழா' என்ற வெள்ளை எழுத்துக்கள் பெரிதாகத் தெரிந்தன.



விழா நான்கு மணிக்குத் தொடங்க இருந்தது. மூன்றரை மணிக்குப் பள்ளியின் மின்சார மணி கம்பீரமாக ஒலித்தது. வகுப்புக்கு வெளியிலேயும் திடலிலேயும் கும்பல் கும்பலாக இருந்த மாணவிகள், மணி ஒலித்து ஓயுமுன்னே வகுப்புக்குள் ஓடிப் போய் விட்டார்கள்.

அடுத்த நிமிடத்திலிருந்தே அணி அணியாக மாணவியர் மண்டபத்தை நோக்கி வந்து சேர்ந்தார்கள். அப்போது மேடையிலே 'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா!' என்ற இசைத் தட்டு முழங்கிக் கொண்டிருந்தது.

பத்தே நிமிடங்களில் அத்தனை வகுப்புக்களும் மேடைக்கு எதிரே வரிசை வரிசையாக அமர்ந்து விட்டன. ஆசிரியைகளும் சுற்றிலும் அமைதியாக அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

தலைமை ஆசிரியையும் பள்ளி மாணவியர் தலைவியும் மற்றும் ஆசிரியைகள் இருவரும், சிறப்புச் சொற்பொழிவாளரை அன்போடு வரவேற்று மேடையில் அமர்த்தினர்.


விழா சரியாக நான்கு மணிக்குத் தொடங்கிவிட்டது.

தலைமை ஆசிரியை எல்லோரையும் வரவேற்றார். பெருவாரியாக வந்திருந்த பெற்றோர்களை அவர் இரு கரங்களையும் கூப்பி வணங்கி வரவேற்று மகிழ்ந்தார்.

சிறப்புச் சொற்பொழிவாளர் பேராசிரியை அங்கயற்கண்ணி அம்மையார் அமரகவி பாரதியாரின் பாடல்களில் சிலவற்றை எளிய மொழியில் தெளிவாக விளக்கிப் பத்தே நிமிடத்தில் தம் பேச்சை முடித்துக் கொண்டார்.

"அடுத்து நடக்கவிருக்கும் மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் அத்தனையையும் கண்டு களித்து விட்டுத்தான்

பறவைகள்



போவேன்,'' என்று அந்த அம்மையார் குறிப்பிட்டபோது, அங்கே எழுந்த கையொலி அடங்குவதற்குச் சில நிமிடங்கள் ஆயின.

கலை நிகழ்ச்சிகள், ஆடல் பாடல், பேச்சு, பேச்சில்லாத மௌன நடிப்பு என்று வளர்ந்து, கடைசியாக நடைபெற்றது ஒரு நாடகம்!

பத்தாம் வகுப்பு 'அ' பிரிவு மாணவிகள் சிலர் பங்கேற்ற அந்த நாடகத்தின் தலைப்பே சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருந்தது.

'யாவரும் ஓர் குலமன்றோ?'

பாரதியாரின் பாட்டுவரி ஒன்றினைத் தலைப்பாகக் கொண்டு அந்தப் பள்ளித் தமிழாசிரியை எழில்வதனி அம்மையார் அந்த நாடகத்தை எழுதியிருந்தார். அதில் நடிப்பதற்குப் பயிற்சியளித்தவரும் அவரே. அவர் எதிர்பார்த்ததற்கும் மேலாகவே சிறப்பாக நடித்திருந்தார்கள் மாணவிகள்.

பாரதியார் விழாவிலே பொருத்தமான ஒரு சமூக ஓரங்க நாடகத்தை வழங்கிய அவர்களை விழாவில் அனைவரும் பாராட்டினார்கள். அந்த நாடகத்தில் எஜமானியாக நடித்த மீனாவையும் வேலைக்காரியாக நடித்த பவித்ராவையும் பாட்டு டீச்சராக நடித்து இனிமையாகப் பாடவும் செய்த எஸ்தர் மேரியையும் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்கள்.

விழா ஆறரை மணியளவில் முடிந்தது. பவித்ராவின் தாய் உதயாவும், தந்தை முத்து மணியும் தங்கள் மகளை மிகவும் பாராட்டினார்கள்.

''பவித்ரா, தூள் கிளப்பிட்டேபோ! அசல் வேலைக்காரி மாதிரியே எவ்வளவு அருமையாகப் பேசினே, தெரியுமா? நான் அசந்து போயிட்டேன். யாருடா இந்தப் பொண்ணு... இப்படிப் பொளந்து கட்றாளேன்னு பார்த்தா.... கடைசியிலே எம் பொண்ணுதான்!'' என்றார் முத்துமணி

''அதையும் நான்தானே சொன்னேன். இல்லேன்னா ஒங்கப்பாருக்குப் புரிஞ்சிருக்காதே!'' என்று சிரித்தாள் உதயா.

''வேஷப் பொருத்தம் கனகச்சிதம் என்று சொன்னால், அந்தப் பேச்சுப் பொருத்தம் — அடடா, அதை விடப் பொருத்தம்! எப்படிம்மா கத்துக்கிட்டே, அந்தப் பேச்சை — எங்கே கத்துக்கிட்டே?'' என்று ஆச்சரியத்தில் ஆழ்ந்தவராகக் கேட்டார் பவித்ராவின் தந்தை.

''ஆனால்... உனக்கேம்மா இந்த வேஷம்? நீயே எஜமானியாப் போட்டிருக்கலாமே!'' என்றாள் தாய்.

''ஏன் உதயா, வேஷந்தானே! சும்மா எந்த வேஷமாயிருந்தாலும் என் பொண்ணு சும்மா ஜொலிப்பா. ஜமாய்ச்சிடுவா தெரியுமா? சும்மா...'' என்று முத்துமணி சும்மா சும்மா 'சும்மாவை'ச் சொல்லிக்கொண்டே இருந்தபோது, பவித்ராதான் அவர் வாயைப் பொத்தினாள்.

''இந்தச் சும்மா நீங்க எங்கே போனாலும் உங்கள் கூடவே சுத்திக்கிட்டிருக்கப்பா!'' என்றாள் பவித்ரா.

''அதும்மா... சும்மாதான்... பழக்கமாயிட்டது.'' என்று அப்போதும் அவர் ஒரு சும்மாவை இழுத்தார்.

''சும்மா பழக்கமாயிட்டதோ, சுமந்துகிட்டுப் பழிக்கமாயிட்டதோ? சும்மா பாருங்கோ. சீக்கிரம் வீட்டுக்குப் போய்க் குழந்தைக்குத் திருஷ்டி சுற்றிப் போடணும். புறப்படுங்கோ.''

பூவை அமுதன்



என்று பரபரத்தாள் உதயா.

''குழந்தையா.... அது யாரும்மா?'' என்று கேட்ட பவித்ராவின் கன்னத்தை உதயா செல்லமாகத் தட்டிய போது, அவள் பக்கத்திலே வந்து நின்றாள் மீனா..

மீனாவைப் பார்த்ததும், ''ஓ! நீதான் எஜமானியில்லே?'' என்று வினவினாள் உதயா.

''இல்லிங்கம்மா.... நான் பவித்ராவின் சிநேகிதி.... நடகத்திலேதான் எஜமானி! ஆனால் எங்களுக்கெல்லாம் எஜமானி இந்த அம்மாதான்,'' என்று பவித்ராவின் தோளில் தட்டி, ''கிளாஸ் பீபுள் லீடர்.... வகுப்புத் தலைவி பவித்ராதான்!'' என்றாள் மீனா.

உதயாவுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. தன் மகளைப் பாராட்டிய அவளைப் பாராட்ட வேண்டும் என்று நினைத்தாள் உதயா. ''நீ கூட நல்லா நடிச்சேம்மா.... அடடா, என்ன அதிகார தோரணை, அலட்சியமான பேச்சு!'' என்றாள் உதயா.

முத்துமணியும் ஒத்துப் பாடினார்: உண்மையிலேயே கரெக்டாகத்தான் ஜட்ஜ் பண்ணிப் பரிசு கொடுத்திருக்காங்க. எஜமானின்னா.... சென்ட் பர்சென்ட் எஜமானிதான்! எனக்கு மேடையிலே உன்னைப் பார்க்கிற மாதிரியேயிருந்தது உதயா. அப்படி ஒரு பார்வை... அப்படி ஒரு கண்டிப்பு!'' என்று அவர் அடுக்கிக் கொண்டே போனதை விரும்பாத உதயா, 'உம்ம்....' என்று ஒரு சின்ன முறைப்புக் காட்டியதும் முத்துமணி முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்.

கவனித்துக் கொண்டிருந்த பவித்ராவும் மீனாவும் தங்களுக்குள் கண்ணடித்துச் சிரித்துக் கொண்டார்கள்.

''நான் வருகிறேன்,'' என்று மீனா புறப்பட்டாள்.

உதயா அவள் முதுகில் செல்லமாகத் தட்டினாள், ''மீனா! ஒரு



நாளைக்குப் பவித்ராவோட எங்க வீட்டுக்கு நீ கண்டிப்பா வரணும்... நாளைக்கே வாயேன்!'' என்றாள்.

''அம்மா! உண்மையிலேயே பவித்ராதான் எனக்கு இப்படிப் பேசவும் நடிக்கவும் கற்றுக் கொடுத்தாள்,'' என்றாள் மீனா உதயாவின் கரங்களைப் பற்றிக் கொண்டு.

''அதுதானே பார்த்தேன்! இந்தக் காரெக்டரை நான் அடிக்கடி எங்கோ பார்த்திருக்கிறேனே என்று,'' என்று கூறிவிட்டுச் சற்று நகர்ந்து நின்று கொண்டார் முத்துமணி. ''பவித்ரா, அவள் அம்மாவை மீனாமேலே ஏத்தியிருக்கா,'' என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டார்.

அவர் பேச்சு, தன் காதில் விழாதது போலவே காட்டிக் கொண்டு, மீனாவைத் தன் பக்கமாக அணைத்தபடி சொன்னாள் உதயா. ''மீனா! நீ நிஜமாகவே ஒரு பெரிய இடத்துப் பெண்ணாகத்தான் இருக்கணும், இல்லேன்னா இப்படி ஒரு இயல்பான நடிப்பும் பேச்சும் பொருத்தமா வந்திருக்க முடியாது. ரியலி ஃபென்டாஸ்டிக்! உன்னை எனக்கு ரொம்ப

வும் பிடிக்குது.''

''அம்மா! மீனாவின் தோற்றம் கூட ஒருபெரியபணக்கார முதலாளியம்மா மாதிரியேயில்லேம்மா?'' என்றாள் பவித்ரா.

''ஆனால் ஆன்ட்டி, பவித்ராதான் உண்மையான வேலைக்காரி மாதிரி யில்லே,'' என்றாள் மீனா!

''ஏண்டி அப்படிச் சொல்றே?'' என்று கேட்டாள் பவித்ரா, பொய் யான கோபத்தோடு.

''இவ்வளவு சிவப்பான, புஷ்டி யான வேலைக்காரி நம்ம நாட்டிலே கிடையாதும்மா,'' என்றாள் மீனா வாய் நிறையச் சிரித்துக் கொண்டு.

''என் பொண்ணுக்கு எந்த வேஷ மும் பொருந்தும்மா,'' என்று உதயா சொல்லிக் கொண்டிருக்கும்போதே, நெருங்கி வந்த முத்துமணி, ''பவித்ரா உன் பொண்ணில்லையா?'' என்று சிரித்தார்.

உதயா சிரிப்பதா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்த போதே, ''அங்க்கிள்! ஆன்ட்டி! நான் புறப்படறேன். ஸீயூ பவித்ரா,'' என்று சொல்லி விட்டுக் குதித்துக் கொண்டு அங்கிருந்து ஓடிப் போனாள் மீனா.

பவித்ரா தன் பெற்றோரின் பின்னே, நடந்தாள். அப்போது, ''ஏய் பவித்ரா! கொஞ்சம் இரு,'' என்று குரல் கேட்டது.

அந்தக் குரலைக் கொடுத்தவர் தமிழாசிரியை எழில்வதனி அம் மையார். அம்மாவின் பிடியிலிருந்து உதறிக் கொண்டு ஆசிரியையிடம் ஓடி வந்தாள் பவித்ரா.

''என்னமா நடிச்சேடி! அபாரம். அபாரம்!'' என்று புகழ்ந்தார் ஆசி ரியை.

''மேடம்! இவர்கள் என் அப்பா... அம்மா,'' என்று அவர்களை அறி முகப் படுத்திவிட்டு, ''இவர்கள் எங் களுக்குத் தமிழ் போதிப்பவர்கள். பொதுவாக இவரை நாங்கள் தமிழ்க் கடல் என்று சொல்வோம்,'' என் றாள் பவித்ரா.

''அம்மா! நான் பெரிய கடலும் இல்லை, சின்னக் குளமும் இல்லை. ஒரு துளி. அவ்வளவுதான்,'' என்று கூறிக்கொண்டார் ஆசிரியை.

(ஜி) சித்திரச் செய்திகள்

நடந்தே உலகம் சுற்றுபவர்!


பஞ்சாபைச் சேர்ந்த 24 வயதுடைய விகாஸ்சிங் என்பவர் நடந்தே உலகம் சுற் றும் முயற்சியை 1987 — ஆம் ஆண்டு செப் டம்பர் 4 — ந்தேதி மேற்கொண்டார். இந்த முயற்சி உலக அமைதிக்காக. இதுவரை நேபாளம், பூடான், தாய்லாந்து, மலேசியா, கம்போடியா, வியட்நாம் ஆகிய நாடுக ளுக்குச் சென்றிருக்கிறார். இப்போது பாங் காக்கில் நடந்து கொண்டிருக்கிறார். 25 ஆண்டுகளில் 158 நாடுகளை நடந்தே சுற்றி வர நினைத்திருக்கிறார் அவர்!



''மறந்துடாதே! இப்போதுபோட்ட இந்த நாடகத்தையே நம் மாவட்ட உயர் நிலைப்பள்ளி நாடகப் போட் டியிலும் நடத்த வேண்டுமாம். தலை மை ஆசிரியை அப்பொழுதே என்னை அழைத்துச் சொல்லி விட் டார்கள். அந்த மகிழ்ச்சியை உன் னோடு பகிர்ந்து கொள்ளத்தான் உன்னை அழைத்தேன்,'' என்றார் ஆசிரியை.

அதைக் கேட்ட மகிழ்ச்சியோடு, ''மேடம், எஸ்தர் மேரி கூட நல்லாப் பாடினாள் இல்லே?'' என்று கேட் டாள் பவித்ரா.

''அவளும் நன்றாகப் பாடினாள். மீனாவும் நன்றாக நடித்தாள். உன் னைப் பற்றிச் சொல்லவே வேண் டாம். ஆனால் பாவம், எஸ்தர் இன்னும் அந்த விஷயத்தை மறக்க வில்லை. நினைத்து நினைத்துக் கண் ணீர் விடுகிறாள். எனக்கும் ஆச்சரிய மாகத்தான் இருக்கு. இவ்வளவு நல்ல மனசு உடையவள் எப்படி அப்படி நடந்து கொண்டாள்! சரி சரி, கொஞ்ச நாள் போனால் எல்லாம் சரியா யிடும்,'' என்று சொல்லி விட்டு ஆசி ரியை பிரிந்தார்.



காருடன் சமாதி!

அமெரிக்காவில், இண்டியானா மாநிலம் அரோரா நகரைச் சேர்ந்தவர் ரேமாண்ட் என்பவர். அவருடைய மனைவி 62 வயதான 'கக்' என்பவர் இறந்து விட்டார். கக் 10 ஆண்டுகளாக கெடிலாக் கார் ஒன்றைப் பயன்படுத்தி வந்தார். ரேமாண்ட், அந்தக் கார் கொள்ளுகிற மாதிரி மிகப் பெரிய சவப் பெட்டி ஒன்றைத் தயாரித்தார். மனைவியை அந்தக் காருக்குள் வைத்து சவப் பெட்டியை மூடினார். பிறகு 6 அடி ஆழம், 12" அடி அகலம், 27 அடி நீளம் உள்ள கல்லறை தோண்டப்பட்டது. அதில் ஒரு பெரிய பளு தூக்கி எந்திரத்தின் மூலம் சவப் பெட்டியைத் தூக்கி வைத்து அடக்கம் செய்தார்கள். மனைவியின் கடைசி ஆசையாம் அது. காருடன் சமாதி!

அவர்கள் தங்கள் காரை நெருங்கினார்கள். அப்போது எஸ்தர் மேரி, ''பவித்ரா!'' என்று அழைத்துக் கொண்டு வேகமாக வந்தாள்.

''ஏய் எஸ்தர், உன் பாட்டு எக்சலண்ட். பேசாமே நீ, பாட்டு டீச்சராகவே ஆயிடலாம்,'' என்று பாராட்டினாள் பவித்ரா.

''ஏண்டி, நானும் அப்படியே உன்னை மாதிரியே சொன்னால் உனக்கு எப்படியிருக்கும்?'' என்று அவள் கையைப் பிடித்து அழுத்திக் கொண்டு கேட்டாள் எஸ்தர்மேரி.

''எனக்கு எப்படியிருக்கும்?'' என்று தன்னையே கேட்டுக் கொண்டவள் சற்று நிதானித்து, ''ஓ! பேசாமே நான் வேலைக்காரியாகவே ஆயிடலாங்கிறயா?'' என்று கேட்டு உரக்கவே சிரித்தாள் பவித்ரா.

''சே! அசட்டுத்தனமா இது என்ன பேச்சு, இதுக்குச் சிரிப்பு வேறு,'' என்று சீறினாள் உதயா.

''ஏன் உதயா, இதுக்குப் போயி டென்ஷன் ஆயிடறே! சின்னப் புள்ளைங்க ஏதோ விளையாட்டுத்தனமாப் பேசிக்கிட்டா... அதிலே போய் நுணுகி நுணுகி அர்த்தம் பார்க்கிறதா? உன் சென்டிமென்ட்டெல்லாம் உன்னோடு இருக்கட்டும்,'' என்று முத்துமணி மனைவியை இரகசியமாகக் கடிந்து கொண்டதை எஸ்தர் மேரியும் கேட்டு விட்டாள்.

''ஸாரி ஆன்ட்டி! ஸாரி அங்க்கிள்! ஏதோ பேச்சுப் போக்கிலே...'' என்று ஆரம்பித்த எஸ்தரை, ''தட்ஸ் ஆல் ரைட்! வந்து... நீ நல்லாப் பாடினேம்மா. உனக்கு எஸ். ஜானகி மாதிரியான குரல் வளம் இருக்கு. இம்ப்ரூவ் பண்ணிக்கோ,'' என்று சொல்லித் தடுத்து அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தாள் உதயா.

அம்மாவுக்கு 'மூடு' போய் விட்டதைப் புரிந்து கொண்ட பவித்ரா, எஸ்தரைச் சற்றுத் தள்ளி அழைத்துச் சென்று விட்டாள். பேசிக்கொண்டேயிருந்தவள், திடீரென்று எஸ்தர் கண்களைத் துடைத்துக் கொள்வதைக் கவனித்தாள்.

''என்னப்பா, என்ன வந்தது உனக்கு?'' என்று அன்போடு வினவினாள்.

''டிராமா முடிஞ்சு வெளியே வந்ததுமே, திவ்யா ஓடி வந்தாள். 'எல்லாத்தையும் மறந்திட்டுப் பிரமாதமாப் பாடிட்டேடி. எனக்கென்னமோ பயமாத்தான் இருந்தது. அந்த விஷயத்தையே நினைச்சிக்கிட்டு எங்கே பாரதியார் பாட்டைக் கெடுத்திடுவியோன்னு பார்த்தேன்,' அப்படின்னு கேட்கிறாள் பவித்ரா! நான் தான் எப்படியோ புத்தி கெட்டுப் போச்சின்னு சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கிட்டேன் இல்லே... நான் மறந்தாலும் மற்றவங்க மறக்க மாட்டாங்க போலிருக்கே!'' என்று கேட்டபோது எஸ்தருக்குத் துக்கம் தொண்டையைப் பிடித்தது.

''சேச்சே! இதுக்கெல்லாம் நீ பெரிசா வருத்தப்படாதே. அவள் ஒரு அரை லூஸ். நீ அமைதியாகப் போ. நாளைக்குப் பார்ப்போம்,'' என்று அவளைத் தேற்றி அனுப்பி விட்டுக் காருக்குத் திரும்பினாள் பவித்ரா.

அந்த வெள்ளை மாருதி மெள்ளப் புறப்பட்டது. பவித்ராவின் உள்ளத்திலே பல எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் புறப்பட்டன.

(தொடரும்)



Photo : Shrihari





நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி...

"என்னங்க, ரெண்டு நாளா நான் கழுதையாக் கத்துறேன். நீங்க என்னடான்னா விடிஞ்சதும் விடியாததுமா அஞ்சு மணிக்கெல்லாம் வேலைக்கு எழுந்து ஓடிப் போறீங்க. இவ ஏன் இப்படிக் கத்தறாள்னு கொஞ்சமாவது நெனைச்சுப் பார்த்தீங்களா? நம்ம சரவணனோட மார்க் லிஸ்ட்டை வாங்கிப் பாருங்க. போன மாசத்தை விட இந்த மாசம் எல்லாப் பாடத்திலேயும் ரொம்ப மோசமா மார்க் வாங்கி இருக்கான். ஒவ்வொரு தடவையும் நான்தான் கத்தறேன். நீங்க... எதுவுமே கண்டுக்காமே அவன் ப்ராக்ரஸ் ரிப்போர்ட்டை நீட்டியதும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துடறீங்க. அந்தத் தைரியத்துலே நான் எது சொன்னாலும் அவன் காதுலே போட்டுக்கறதில்லை. பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் விளையாட ஓடறான். அவனைப் பார்த்து நல்லாப் படிச்சுக்கிட்டு இருந்த முத்துவும் அவன் பின்னாலே ஓடறான். என்னங்க, இப்படியே இந்தப் பசங்களை விட்டுட்டா முழுப் பரீட்சையிலே ரெண்டு பேருமே மட்டம் போட்டுடுவாங்க..'' என்று கொஞ்சம் சப்தமாகவே முழங்கினாள் மரகதம்.

''மரகதம், ஏன் இப்படிச் சத்தம் போடறே? ராத்திரி வேளையிலே கொஞ்சம் மெதுவாத்தான் பேசேன். குழந்தைகள் காதுலே விழப் போவுது.'' என்றார் மரகதத்தின் கணவர் ஆறுமுகம்.

''விழட்டுங்க. நல்லா விழட்டும்! நான் கத்தறதைக் கேட்டாவது அதுகளுக்குப் புத்தி வந்து நல்லாப் படிக்குதுங்களான்னு பார்ப்போம்...''

''கத்தறதுனாலேயோ, அடிக்கிறனாலேயோ பிரயோசனமில்லே மரகதம்! பிள்ளைகளிடத்திலே அன்பா, இதமா எடுத்துச் சொல்லணும். அப்பத்தான் அதுகளோட மனசிலே பதியும். படிப்பும் காவேரியாப் பெருகி வரும்...''

''மயிலே மயிலேன்னா இறகு போடாதுங்க. அடிச்சுப் புடிச்சுச் சொல்லிக் கொடுத்தாத்தான் அதுகளுக்கு மனசிலே ஒரு பயம் வந்து படிக்கும். நல்ல மார்க்கும் வாங்குங்க...''

''ஏன் மரகதம், நம்ம முத்துவும், செல்வியும் அவங்களாகவே நல்லா படிக்கலேயா? நாம் அவங்களை அடிச்சா சொல்லிக் கொடுக்கி

சிற்பி சோமு

றோம்?'' என்றார் கனிவோடு ஆறு முகம்.

''இதோ பாருங்க. நான் கண்டிக்கச் சொல்றது சரவணனைத்தான். கால் பரீட்சையில் அவன் பெயிலாகி இருக்கான். மார்க்கெல்லாம் அஞ்சும், பத்தும் வாங்கி இருக்கான். அரைப் பரீட்சையிலாவது நல்ல மார்க் எடுக்கணும்ன்னா இப்பவே ஒழுங்காப் படிச்சாத்தான் அவனாலே பாஸ் ஆக முடியும். காலையிலே அவன் எழுந்ததும் நாலு போடு போட்டு உட்கார வைச்சு நல்லா படிக்கச் சொல்லுங்க. என்ன புரிஞ்சுதா?''

''புரியுது மரகதம், புரியுது. நீ மேற்கொண்டு இரையாமல் தூங்கு,'' என்ற ஆறுமுகம், தூங்கிக் கொண்டிருந்த தன் பிள்ளைகளைப் பார்த்தார்.

மாலை வேளையில் விளையாடிய களைப்பில் முத்துவும், சரவணனும் நன்றாகக் கால்களை நீட்டியவாறு அசந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள். செல்வி மட்டும் பூனைக்குட்டி போல ஓர் ஓரமாகச் சுருண்டு ஒருக்களித்துத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

விடிந்ததும் இதமாகச் சரவணனிடம் எடுத்துச் சொல்லி அம்மாவின் கவலையைப் புரிய வைத்து நன்றாகப் படிக்கச் சொல்லணும் என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டே ஆறுமுகம் படுக்கையில் சாய்ந்து கண்ணயர்ந்தார்.



மறுநாள் வழக்கம் போல அதிகாலையிலேயே கண் விழித்த ஆறுமுகம் கண்ட காட்சி வியப்புக் குரியதாக இருந்தது...

ஒரு நாளும் இல்லாத திருநாளாகச் சரவணன் முன்னமேயே விழித்தெழுந்து முகம் கழுவி, விபூதி பூசி, திண்ணையில் புத்தகமும், கையுமாக அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான்.

இன்னொரு புறம் முத்துவும், செல்வியும் படித்துக் கொண்டிருந்த காட்சி. இது நிஜம்தானா, கனவா? தன்னைத்தானே ஒருமுறை கிள்ளிப் பார்த்துக் கொண்ட ஆறுமுகம், நன்றாகக் கண்களை கசக்கி விட்டுக் கொண்டு மீண்டும் பார்த்தார்.

உண்மைதான் என்பது புரிந்தது.

இந்த அதிசயத்தைச் சொல்ல மரகதத்தைத் தேடினார். கூடத்தில் அவளைக் காணாததால் அடுப்படிக்குச் சென்று பார்த்தார்.

குளித்து முழுகி விட்டு ஈரத் தலையைச் சுற்றிய துண்டுடன் சமையல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள் மரகதம்.

மிக விரைவாக அவள் அருகே சென்ற ஆறுமுகம், ''என்ன மரகதம், நம்ம குழந்தைகளைப் பார்த்தாயா?'' என்றார்.

''பார்த்தேங்க... என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை. அடிச்சு எழுப்பினால் கூட எழுந்திருக்காத குழந்தைகள் எப்படி அதுகளாக எழுந்து இவ்வளவு அதிகாலையில்... ஒருவேளை, நாம ராத்திரி பேசிக் கொண்டிருந்ததைக் குழந்தைகள் கேட்டுக் கொண்டு இருந்திருக்குமோ?'' என்று வியப்பு மேலிட்டவளாகக் கூறினாள் மரகதம்.

''எப்படியோ... மரகதம் நாம படும் கஷ்ட நஷ்டத்தைப் புரிந்து கொண்டு, மேற்கொண்டு குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை. அன்றாடம் தினக்கூலி வாங்கற கொத்தனார் வேலை பார்க்கிற என்னை மாதிரி ஏழைகளாலே ஐம்பது, நூறு செலவு செய்து வீட்டிலே வாத்தியார் வச்சுப் பாடம் சொல்லிக் கொடுக்க முடியுமா என்ன...?'' என்ற ஆறுமுகம் நீண்ட



தொரு பெருமூச்சு விட்டார்.

''நான் ராத்திரி உங்ககிட்டே கொஞ்சம் சத்தமாப் பேசினது எனக்கே கஷ்டமாகத்தான் இருந்தது. வேலை பார்த்துக் களைச்சுப் போய் வந்திருப்பீங்க. உங்ககிட்டே நான் அப்படிக் கத்தியிருக்கக் கூடாது. என்ன செய்வது? பிள்ளைகள் மேலுள்ள பாசத்திலே அப்படிப் பேசிட்டேன். என்னை மன்னிச்சுடுங்க,'' என்ற மரகதம் ஆறுமுகம் காலில் விழுந்து வணங்கினாள்.

''மரகதம், நீ சப்தமாப் பேசினது நல்லதாவே போச்சு. அதைக் குழந்தைகள் கேட்டு இருக்கும் போலே இருக்கு. அதான் அதுகளாகவே நல்லது கெட்டதை யோசித்து நமக்கு எந்தக் கவலையும் கொடுக்கக் கூடாதுன்னு படிப்பில் அக்கறை காட்டுதுங்க. மரகதம், எனக்கு இனிமே' வீட்டுக் கவலையே இல்லை. நான் நிம்மதியா என் வேலையைப் பார்ப்பேன்,'' என்றார் ஆறுமுகம்.

''ஆமாங்க. குழந்தைகள் மாதிரி நானும் இனிமே உங்களோடு எந்த விதச் சப்தமும் போட மாட்டேன்,'' என்று உறுதியளித்தாள் மரகதம்.

அவரது கண்களில் கண்ணீர் கசிந்தது. அது ஆனந்தக் கண்ணீர். நல்ல மனைவி, நல்ல பிள்ளைகளைப் பெற்று விட்டோம் என்ற மகிழ்வில் பிறந்தது அந்தக் கண்ணீர்.

“அக்கா அக்கா... அதோ பாரு. நம்ம அப்பா அம்மா எவ்வளவு சந்தோஷமா இருக்காங்கன்னு. நாம காலையிலே சீக்கிரமே எழுந்து


படிக்கிறதுக்கே இவ்வளவு மகிழ்ச்சியோடு இருக்காங்களே, இன்னும் நல்லா படிச்சுப் பாஸானா எவ்வளவு சந்தோஷமா இருப்பாங்க!'' என்றான் முத்து, முகத்தில் மகிழ்ச்சி பொங்க.

''உஷ்... கொஞ்சம் மெதுவாப் பேசுடா முத்து...''

''அக்கா! உங்களைப் பத்தியெல்லாம் அம்மா கவலைப்படலே. நான் பெயில் மார்க் வாங்கினதைப் பார்த்துத்தான் சத்தம் போட்டாங்க. இனிமே நான் விளையாடப் போகவே மாட்டேன். உன்னைப் போலவும், முத்து அண்ணாவைப் போலவும் நல்லா படிச்சு, நிறையா மார்க் வாங்கியாந்து அம்மாவிடம் காட்டப் போறேன். எனக்குத் தெரியாத பாடத்தையெல்லாம் நீ சொல்லிக் கொடுக்கா,'' என்றான் சரவணன் உற்சாகம் மிகுந்தவனாக.

''தம்பீ! இப்ப நீ எடுத்துக் கொண்ட உறுதிப்படியே நல்லாப் படிக்கணும். ஏன்னா நம்ம அப்பா சிறு பிள்ளையாய் இருந்தபோது உன்னைப் போல விளையாட்டு விளையாட்டுன்னு ஓடி ஓடிப் போவாராம். அதனாலேதான் அவருக்குப் படிப்பு வராமே போச்சாம். படிச்சிருந்தா நல்ல வேலைக்குப் போயிருப்பார். படிக்காததாலே இப்ப அவரு கொத்தனார் வேலை பார்க்கிறார். எவ்வளவு கஷ்டமான வேலை! எவ்வளவு உயரத்திலே இருந்தெல்லாம் பார்க்க வேண்டியிருக்கு.. கொஞ்சம் கால் தவறினாலும் அவ்வளவுதான். உயிருக்கே ஆபத்தா முடிஞ்சு போகும். அதனாலே அவருக்கு வீட்டுக் கவலையே இல்லாமே நாம நல்லா படிக்கணும். நல்ல பிள்ளைகள்ன்னு பேர் வாங்கணும்,'' என்றாள் செல்வி.

''அக்கா! நீ சொல்லுகிறபடியே கேட்டு நடந்து கொள்றோம். நல்லா படிக்கிறோம். மார்க்கெல்லாம் உன்னைப் போலவே நூற்றுக்கு நூறு வாங்கி வந்து அப்பா, அம்மாவிடம் காட்டி அவங்களைச் சந்தோஷப் படுத்துறோம்,'' என்று முத்துவும், சரவணனும் ஒன்றாகக் கூறினர்.



பிருந்தாவனம்



கோப்பைகள் பலவிதம்



ரஞ்சி டிராஃபி கோப்பை என்றதும் நினைவுக்குவருவதுகிரிக்கெட் விளையாட்டு. அதே போல் பேஸ் பாலுக்கு பிட்சர், குத்துச் சண்டைக்கு ரிங், ஹாக்கிக்கு ஸ்டிரைக்கிங் சர்க்கிள், வாலிபாலுக்கு பூஸ்டர், செஸ் விளையாட்டுக்கு கேம்பிட், டென்னிஸ் விளையாட்டுக்கு பேக்ஹாண்ட் டிரைவ் என்ற கோப்பைகள் உலகெங்கும் வழங்கப்படுகின்றன!

பிரதி உபகாரம்

சிலேடைச் செல்வர்' கி.வா.ஜ. அவர்கள் ஒருமுறை, ஒரு புதிய இதழ் ஒன்றின் வெளியீட்டு விழாவிற்கு வந்திருந்தார். கி.வா.ஜ. அந்த விழாவில் தலைமை தாங்கிப் புதிய இதழை வெளியிட்ட அவர்,

''இந்த விழாவில் வெளியிடப்படும் பத்திரிகை 'விழாப் பத்திரிகையாக' இருக்க வேண்டும். அதாவது விழாத பத்திரிகையாக இருக்க வேண்டும். அதோடு இப்பத்திரிகை நிர்வாகிகளுக்கு நீங்கள் சந்தாத் தொகை கொடுத்து உதவினால், உங்களுக்கு இவர்கள் பிரதி உபகாரம் செய்வார்கள். அதாவது, இந்த இதழின் பிரதியைக் கொடுத்து உதவுவார்கள்,'' என்று குறிப்பிட்டார்.

— கி. வா. ஜ. வின் சிலேடைகள் என்னும் நூலிலிருந்து.


— செ. பாஸ்கரன்.

மதியோ மதி



ஒருமுறை தத்துவ ஞானி பெர்ட்ராண்ட ரஸ்ஸல் வெளிநாட்டிற்குச் சுற்றுப்பயணம் முடித்துத் தாய் நாட்டிற்குத் திரும்பினார்.

விமான நிலையத்தில்சுங்கப்பரிசோதனை அதிகாரிகள் ரஸ்ஸலிடம், 'உங்களிடம் விலை மதிப்புள்ள பொருள்கள் என்னென்ன வைத்திருக்கிறீர்கள்? எடுத்துக் காட்டுங்கள்' என்று அதட்டும் குரலில் வினவினர். ரஸ்ஸல் கோபப்படாமல் புன்னகையுடன், ''என்னிடம் இருக்கிற விலைமதிப்புள்ள ஒரே பொருள் என் அறிவுதான். அதை நீங்கள் பறிமுதல் செய்ய முடியாது.'' என்றார்.



உலகிலேயே மிகப் பெரிய தேசப்படப் புத்தகம் அட்லஸ். ஜெர்மனியின் தலைநகர வாசக சாலையில் உள்ளது. இந்த அட்லஸ். 300 வருடங்களுக்கு முன் தயாரிக்கப்பட்ட இந்த அட்லஸில் 35 தேச வரைபடங்கள் உள்ளன. இதன் எடை 175 கிலோ.

— எஸ். விஜயா சீனிவாசன்.



இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பேசும் மொழிகள் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? சரிபார்க்க:

ஆந்திரப் பிரதேசம் — தெலுங்கு.
அஸ்ஸாம் — அஸ்ஸாமி.
பீகார் — ஹிந்தி.
கோவா — கொங்கணி.
குஜராத் — குஜராத்தி.
ஹரியானா — ஹிந்தி.
இமாசலப் பிரதேசம் — பஹாரி.
ஜம்மு — காஷ்மீர் — பல்டி, டாடி.
கர்நாடகா — கன்னடம்.
கேரளா — மலையாளம்.
மத்தியப்பிரதேசம் — மராத்தி.
மணிப்பூர் — மணிப்பூரி.
மேகாலயா — காஸி ஜந்தியா.
மிஸோரம் — மிஸோ.
நாகாலாந்து — நாகா.
ஒரிஸ்ஸா — ஒரியா.
பஞ்சாப் — பஞ்சாபி.
அருணாசலப் பிரதேசம் — இட்டாநகர் மொழி.
ராஜஸ்தான் — ராஜஸ்தானி.
சிக்கிம் — கோர்காலி.
தமிழ்நாடு — தமிழ்.
திரிபுரா — திரிபுரி.
உத்திரப்பிரதேசம் — ஹிந்தி.
மேற்கு வங்காளம் — பெங்காலி.

— கார்த்தி, ராஜன், சீர்காழி.

ஒருமுறை முல்லா தமது நண்பரை வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தார்.

அதன்படியே நண்பர் மறுநாள் முல்லாவின் வீட்டுக்குப் போயிருந்தார். அப்போது முல்லாவுக்காக வெகு நேரம் காத்திருந்த நண்பர் கோபத்துடன், 'அறிவுகெட்ட முட்டாள்' என்று கதவில் எழுதிவிட்டுச் சென்று விட்டார்.

அவர் சென்ற மறுநிமிடம் அங்கு வந்த முல்லா கதவில் எழுதியிருப்பதைப் பார்த்தார். அது அவரின் நண்பரது கையெழுத்து



என்று தெரிந்து விட்டது. 'அடடா! வரச் சொல்லிவிட்டு மறந்து போனேனே!' என வருந்தி நண்பரைத் தேடிச் சென்றார்.

அங்கு சென்ற அவர், ''நண்பரே, உங்களை வரச் சொல்லிவிட்டு மறந்து போய் விட்டேன். வீட்டிற்கு வந்ததும் கதவில் உங்கள் பெயரை எழுதிவிட்டுச் சென்றீர்களே! அதைப் பார்த்துத்தான் எனக்கு ஞாபகம் வந்தது.'' என்றாரே பார்க்க வேண்டும்!

நண்பனால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

— என். சிவகுமார்.



இங்கிலாந்து பிரதமராக இருந்த சர்ச்சில் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தமது அனுபவங்களை விவரித்துக் கொண்டிருந்தார். அப்போது உறுப்பினர் ஒருவர் குறுக்கிட்டு, ''அனுபவம் மூடர்களுக்குத்தான் பயன் அளிக்கும்,'' என்று கூறி அவரை மடக்கினார்.

அப்போது சர்ச்சில் நிதானமாக, ''நண்பரே! நானும் அதை ஒப்புக் கொள்கிறேன். எனது அனுபவத்திலிருந்து நீங்கள் பயன்

அடையக் கூடும் என்பதால்தான் அதை நான் விவரித்துக் கொண்டிருந்தேன்,'' என்றார். கேட்டவர் மௌனமானார்.

— பி. கோவிந்தசாமி.
ஊத்தங்கரை.



நேருவின் வாழ்வில் 28

ஜவஹர்லால் நேருவின் வாழ்வில் 28 என்ற எண் மிக முக்கியமானதாகும். நேரு பிறந்த போது அவர் தந்தையின் வயது 28. இந்திரா காந்தி பிறந்த போது நேருவுக்கு வயது 28. நேருவின் மனைவி கமலா இறந்த தினம் 28. நேருவின் உடல் தகனம் செய்யப்பட்ட நாள் மே 28. நேருவின் மனைவி கமலா இறந்த பின் அவர் வாழ்ந்த வருடங்கள் 28.

நன்றி: 'சிந்தனையிலிருந்து'
— என். சிவகுமார்.

குளியல் எப்போது எப்படி ஏன்?



('உணவு உண்டபின் குளிப்பதில் விஞ்ஞான ரீதியாக ஊறு கிடையாது' என்று சின்ன அண்ணன் சொன்னது சரியல்ல என்று சாடி — இந்தத் துணுக்கு வந்திருக்கிறது.)

1. குளிர்ந்த நீரில் குளி. உனக்குப் புத்துணர்ச்சியும், புது சக்தியும், சுறுசுறுப்பும் கிடைக்கும்.

2. குளிப்பதற்கு மிகச் சிறந்த நேரம் அதிகாலை சூரிய உதயத்திற்கு முன்புதான். ஏனென்றால் இரவு நேரத்தின் போது நீர் குளிர்ந்துள்ளது; பிராண வாயு நிறைந்துள்ளது.

3. யோகாசனங்கள் அல்லது தேகப் பயிற்சி செய்ததும், உடனே குளிக்காதே. உடல் குளிரட்டும். ஒரு மணி நேரமாவது காத்திரு.

4. உணவு உட்கொண்ட பிறகு எப்போதும் உடனே குளிக்காதே. அது உன் ஜீரண சக்தியைப் பாதிக்கும்.

ஆதாரம்: சுவாமி சிவானந்தாவின் 'ஹெல்த் அண்ட் ஹாப்பினஸ்' என்ற ஆங்கில நூலிலிருந்து.

தகவல்: எச். கிருஷ்ணமூர்த்தி.



அன்று சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் முதல்வர் ஏ. ஏ. ஹால் என்பவர் ஆங்கிலப் பாடம் நடத்தத் தொடங்கினார். ஆசிரியர் பயிற்சி பெறவிருந்த பட்டதாரி மாணாக்கர்கள் நிறைந்திருந்த வகுப்பு அது.

முதல்வர் ஹால் என்றாலே மாணவர்களுக்குப் பயம். ஏனென்றால் அவர் பிறவியில் ஆங்கிலேயர். மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசும் பொழுது, சரியானபடி பேச வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பாக இருப்பார். அதே சமயம் மாணவர்களுடன் அன்புடனும் பழகுவார்.

ஒருநாள் வழக்கம் போல ஆங்கில வகுப்பு தொடங்கியது. ஒவ்வொருவராகப் படிக்கச் சொன்னார். சுமார் பத்து மாணவர்கள் படித்தார்கள். ஒருவருக்கும் உச்சரிப்புச் சரியாக இல்லை எனக் கருதினார்.

''இந்த வகுப்பில் ஆங்கிலத்தைச் சரியானபடி உச்சரிக்க யாருமே இல்லையா?'' என வருத்தத்துடன் கேட்டார். அப்பொழுது ஒரு மாணவர் எழுந்தார். அந்த மாணவர் எந்த வித அச்சமோ, தயக்கமோ இன்றி மிகச் சரளமாக ஆங்கிலத்தில் எழுதியுள்ள பாடத்தைப் படித்தார். ஹாலின் முகம் மலர்ந்தது. அந்த மாணவரைப் பெரிதும் பாராட்டினார்.

மற்ற மாணவர்களைப் பார்த்து, ''நீங்களும் இவ்வளவு நேரம் படித்தீர்களே. இவ்

வளவு சரியாக இந்த மாணவனைப் போல் உங்களால் படிக்க முடிந்ததா? இது உங்களுக்கெல்லாம் வெட்கமாக இல்லையா?'' எனக் கடிந்துரைத்தார் கல்லூரி முதல்வர்.

இதைக் கேட்ட மற்ற மாணவர்கள் மிகவும் மனவேதனைப்பட்டனர். அதைக் கண்டு அந்த மாணவருக்கு வேதனை. சட்டென்று எழுந்து நின்றார் அவர். கல்லூரி முதல்வரிடம் பணிவாக, ''ஐயா, தாங்கள் எங்களில் சிலரின் ஆங்கில உச்சரிப்புச் சரியாக இல்லை என்று வருந்தினீர்கள். ஆங்கிலம் எங்களுடைய தாய்மொழி இல்லை. நாங்கள் சிறு வருவத்திலிருந்தே தங்களைப் போன்ற ஆங்கிலப் பெருமக்களின் பயிற்சியே இல்லாமல் இருந்தவர்கள். எங்களுக்கு ஆங்கிலம் பேசிப் பழகும் வாய்ப்பே ஏற்படவில்லை. அதனால் சரியாக உச்சரிக்க முடியவில்லை. தாங்கள் இதை உணராமல் மற்றவர்களைக் கடுமையாகத் திட்டினால் அவர்கள் மனமகிழ்ச்சியும், ஊக்கமும் குறைந்து விடுமே. இது தங்களைப் போன்ற பெரியவருக்குத் தெரியாதா?'' எனப் பணிவுடன் கேட்டார்.

ஹால் திகைத்தார். மற்ற மாணவர்கள் பயந்தனர்.

மேலும் அந்த மாணவர், ''ஐயா, தாங்கள் இப்பொழுது நான் சொல்வதைக் கேட்டுச் சினம் கொள்ளக் கூடாது. தாங்கள் மேக்னிஃபிசெண்ட், ஃபார்மிடபிள், எக்ஸிரபிள் என்ற மூன்று வார்த்தைகளையும் தவறாக உச்சரித்தீர்கள்,'' எனப் பயமில்லாமல் எடுத்துச் சொன்னார்.

கல்லூரி முதல்வர் மறுமுறை அந்த வார்த்தைகளை உச்சரித்துக் காட்டினார். மாணவர் மறுத்தார். ''ஐயா, இந்த வார்த்தைகளை, தங்கள் தாய்நாட்டில் வெளியான ஆங்கில அகராதியில் நான் உச்சரித்த முறைப்படிதான் போட்டிருக்கிறது.'' என்றார்.

உடனே கல்லூரி முதல்வர் கோபம் அடையாமல் அகராதிகளைக் கொண்டு வரச் சொல்லி, தாம் கூறிய வார்த்தைகளின் உச்சரிப்பைப் பார்த்தார். மாணவர் சொன்னதுதான் சரியாக இருந்தது. உடனே, கல்லூரி முதல்வர் தம் உச்சரிப்பு சரியாக இல்லை என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டதுடன் அந்தமாணவரையும்பாராட்டினார்.

அந்த மாணவர் யார் தெரியுமா? பிற்காலத்தில் மகாகனம் சீனிவாச சாஸ்திரி எனப் பலரும் பாராட்டும் பேறு பெற்றவர்.

— வி. பத்மா, சென்னை — 4.



சிங்கத்தின் முன் காந்திஜி

நம் தேசத் தந்தை மகாத்மா காந்தியின் நண்பர் அவரிடம், ''காட்டில் உங்கள் பெற்றோருடன் சென்று கொண்டிருக்கிறீர்கள். அப்போது ஒரு சிங்கம் உங்களை நோக்கி வருகிறது. அந்தச் சமயம் உங்கள் அப்பா, அம்மா இவர்களில் யாரைக் காப்பாற்றுவீர்கள்?'' என்று கேட்டார்.

அதற்குக் காந்தி, ''சிங்கத்திடம் வலியச் சென்று நான் மாட்டிக் கொள்வேன். இப்படிச் செய்தால் இருவரையும் காப்பாற்றிவிட முடியுமமே!'' என்றார்.

— சாரதா, பரங்கிப்பேட்டை.

சின்னப் பையனாக இருந்த போது லால்பகதூர் சாஸ்திரியின் மனத்தில் ஆழப் பதிந்த நிகழ்ச்சி ஒன்று உண்டு. அதுபற்றிக் கூறி நெகிழ்ந்து போவார் சாஸ்திரி.

ஆறு வயது. மற்ற நண்பர்கள் மாதிரி விஷமம் இல்லை. ஒருநாள் நண்பர்களோடு ஒரு மாந்தோப்பில் நுழைந்து விட்டார். அவர்கள் மரங்களில் ஏறினார்கள். கிளைகளை உலுக்கினார்கள். தங்கள் இஷ்டத்துக்கு மாங்காய்களைப் பறித்துத் தின்றார்கள்.



அப்பா இல்லாத பிள்ளை

பாவம் லால்! அழகான 'பூ' ஒன்றின் மீது மனம் லயித்து நின்றார். அச்சமயம் தோட்டக்காரன் குரல் கேட்டு மற்றவர்கள் ஓட, லால் மாட்டிக் கொண்டார். காவற்காரர் கடுமையாகப் பார்த்தார். லாலின் கண்களில் நீர் நிறைந்தது.

''ஐயா, நான் ஏழை. அப்பாவும் இல்லை. ஐயா மன்னித்து விடுங்கள்.'' லால் கெஞ்சினார்.

''சரிதான். ஏழை வேறு. அப்பா இல்லாத பிள்ளை, நல்ல பெயர் எடுக்க வேண்டாமோ? அப்பா இருந்தால் கண்டிப்பார். அவர் இல்லாவிட்டால் வாழ்க்கையில் கவனமாக நல்ல பெயர் எடுக்க வேண்டும், தெரியுமா?'' காவற்காரர் கண்டிப்புடன் வழங்கிய புத்திமதி ஆறு வயதுச் சிறுவன் லாலின் மனத்தில் ஆழப் பதிந்தது. லால் பகதூர் சாஸ்திரியைப் பண்புடன் நடக்க இச்சிறு நிகழ்ச்சி வித்திட்டது.

— சரோஜா ரங்கராஜன்.

பல்லிளிச்சான் கணவாய்ப் பக்கமாக..

கொ.மா.கோதண்டம்



அந்த மலைநதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதாகத்தானே நினைக்கிறீர்கள்? பத்து மைல் தூரத்திலிருந்தாலும் அப்படித்தானே பளிச்சென்று தெரிகிறது? அது தான் இல்லை.

அந்தப் பகுதி மண்திட்டு இல்லாமலும் மரங்கள் இல்லாமலும் மொட்டையாக இருப்பதால் நாலு தூறல் விழுந்தாலும் போதும், சிறிது தண்ணீரே வந்தாலும் சுற்று வட்டார ஊர்களுக்குப் பால் வெள்ளையாக, பெரு வெள்ளம் வருவதாகப் பளிச்சென்று தெரியும்.

அதனால் ஊர்க்காரர்கள் அதற்குப் பல்லிளிச்சான் கணவாய் என்று பெயர் வைத்துள்ளனர். அடிவாரத்தில் வனமும், நதியில் மணல் பகுதியும் இருப்பதால் விடுமுறை நாட்களில் குளித்துப் பொழுது போக்கவும், வனபோஜனம் செய்து மகிழவும் அங்கே பலர் வருவார்கள்.

இப்போது அங்கே பலர் குளித்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அல்லவா! அதில் கும்மாளமிட்டபடி விளையாடிக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள்தான் அமுதனும் இங்கோவும். பள்ளி விடுமுறையாதலால் மதிய உணவுடன் அங்கே வந்திருக்கிறார்கள்.

அமுதன் இயற்கை அழகைப் படம் எடுக்கக் கேமரா கொண்டுவந்திருந்தான். இளங்கோ தூரத்துக் காட்சிகளைப் பார்க்கவே பைனாகுலர் கொண்டுவந்திருந்தான். இடுப்பளவு தண்ணீர் தெளிவாகப் பாய்வதால் கீழே உள்ள மணலில் ஊசி விழுந்தாலும் எடுத்து விடலாம். அப்படிப் பளிச்சென்று தெரிகிறது.

ஒருவருக்கொருவர் குளிக்கும் போதும், பின்னால் காட்டுப் பகுதி தெரிவது போல நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

"டேய், சாப்பிட்டுக் கொஞ்ச நேரம் ஓய்வெடுத்து விட்டு வந்து மறுபடியும் குளிப்போம் வாடா," அமுதன் அழைத்ததும், "சரிடா," என்று இளங்கோவும் எழுந்தான்.

இருவரும் தலை துவட்டியபடி இயற்கையழகைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"அமுதா, அதோ பாரு ஒரு பையன் போய்க்கொண்டிருக்கிறான். யாரு தெரியுமா?"

"ஆமா நீலன் மாதிரித் தெரியுதில்லே?"

"ஆமா! அவனே தான். யேய் நீலா!"

கறுப்பு நிறமும், கட்டையான உருவமும் கொண்ட ஆதிவாசிச் சிறுவன் திரும்பிப் பார்த்து இங்கே ஓடி வந்தான்.

கோவணம் மட்டுமே அணிந்திருந்த அவன் அய்யனார் கோவில் பகுதியைச் சேர்ந்தவன்.

''கும்புடுதேன் சாமி,'' முகமெல்லாம் பல்லாகச் சிரித்தவாறு அருகில் வந்து வணங்கி நின்றான் நீலன்.

''என்ன இந்தப் பக்கம்?''

''செண்பகத் தோப்புல எங்க சனம் இருக்காங்கல்ல? ஒரு தகவலு சொல்லப் போயிகிட்டு இருக்கேஞ் சாமி. நீங்க குளிக்க வந்தேகளா சாமி!''

''ஆமா, ஒனக்கு என்ன ரொம்ப அவசரமாப் போகணுமா?''

''அப்படியில்ல் சாமி. ராவுக்குள்ள போய்த் திரும்பனும்.''

''அப்ப சரி. போயி தேக்க இலை பறிச்சுட்டு வா. மூணுபேரும் சாப்புடுவோம். அப்புறம் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டுந்துட்டுப் போகலாம்.''

''எதுக்கு சாமி, எ ன க் கு வேணாம்.''

''சொன்னா கேட்கமாட்டே? ஒன்னை போட்டோ எல்லாம் எடுக்கப்போறோம்.''

''சரி சாமி,'' என்றவாறே நீலன் ஓடிச்சென்று தேக்கு மரத்தில் ஏறிச் சில இலைகளைப் பறித்து நீரில் கழுவி எடுத்து வந்தான்.

மூவரும் தேக்கு இலைகளில் உணவைப் பகிர்ந்து கொண்டு சாப்பிட்டு முடித்தனர்.

''நீலா இங்கே என்ன மிருகங்க இருக்கும்?''

''யானை, புலி, கரடி, மான், மிளா, செந்நாயி எல்லாம் இங்கன இருக்குஞ் சாமி.''

''ஒனக்கு நேரமிருந்தா எங்களைக் கூட்டிப் போயி எதையாவது காட்டேன்.''

''தொலவெட்டுப் போகணுமே சாமி. புலிகள்ளாம் ராவுலதான் நடமாடும். பகல்ல புதருக்குள்ள தூங்கிடும்.''

''பகல்ல எது வருமோ, அதைக் காட்டு போதும். தூரமாயிருந்தாலும் பரவாயில்லை. ஆறு மணிக்குள்ளே திரும்பினாபோதும். காட்டு மிருகங்களை அது வாழ்ற எடத்துல இயற்கையாய்ப் பாக்கறப்போ மனசுல எவ்வளவு பயமிருந்தாலும் ரொம்ப ஆனந்தமாகவும் இருக்கில்லே? அதோட நாங்களும் நாலு பயங்களோட சொல்லிப் பெருமைப்படலாம் பாரு.''

நீலன் சிறிது நேரம் யோசித்தான். இருவரும் கெஞ்சவும், ''சரி சாமி. ஒரு கல்லு தொலவுல மிளாமேடுன்னு ஒரு எடம் இருக்கு. அங்க ஒரு பெரிய கல்லாலமரம் இருக்கு. அதுல ஒரு




மாடம் இருக்கு. பாரஸ்ட் ஆபீசருங்க வனங்களைப் பாக்கவும், மிருகங்களைப் பாக்கவும் மரத்துமேல பலகைகளால் பெரிசா கட்டி வச்சிருக்காங்க. அங்க போயி ஏறிப்பாத்தா ஏதாச்சும் மிருகங்களப் பாக்கலாம்.''

''சரி சரி, உடனே கிளம்பு.'' அழுதன் அவசரப்படுத்தவும் மூவரும் ஆற்றங்கரையின் அடுத்த சரிவில் இறங்கி ஒற்றையடிப்பாதை வழியாக

மலைமேல் ஏறி நடந்தனர். நீலன் முதலில் வழிகாட்டியவாறு நடந்தான்.

மஞ்சுத் திரள்கள் நொண்டி ஆடுவதைப் போல வந்து போய்க் கொண்டிருந்தன. திரைப்படத்தில் வான லோகக் காட்சி போலப் புகை சூழ்ந்து பின் மறைந்தது. அவர்கள் மிளாமேட்டை அடைந்தனர்.

''சாமி, சத்தம் போடமெ வாங்க.



புலி காலயில இந்தப் பக்கம் போயிருக்கு சாமி.''

''புலியா!'' அவர்கள் இருவரும் பயந்து போய்க் கத்தினர்.

''புலி மனுசங்கள ஒண்ணும் செய்யாது. பயப்படாமே வாங்க சாமி. நான் இருக்கேன் இல்லே?''

அவன் தனது அரைஞாண் கயிற்றில் தொங்கிய பேனா கத்தியை எடுத்தான். ஒரு மரத்தின் பட்டையை வட்டமாகக் கிழித்து அதில் மூக்கு, வாய், கண்களைப்போல சீவி முகமூடி தயாரித்து இருபக்கமும் நாரால் இணைத்துத் தனது பின் தலையில் வைத்து நாரைக் காதுகளில் மாட்டினான்.

அவனது பின்பக்கம் மனித முகம் போல தெரிந்தது.

''என்னப்பா இது, அழகா மனித முகம் மாதிரியே செஞ்சிருக்கே... எதுக்கு இப்படி மாட்டிக்கிட்டு?''

நீலன் இவர்களிடம் பேசிக் கொண்டே மேலும் இரண்டு முகமூடிகளைத் தயார் செய்தான்.

''சாமி, புலிக சாதாரணமா மனுசங்களைக் கொல்லாது, பயந்து ஓடி ஒளியும். ஆனா ரொம்பக் கெழட்டுப் புலி, அடிபட்ட புலி, காலு ஒடிஞ்ச புலி இதுகளால ஓடி வேட்டையாட முடியாது. அதால சில சமயங்கள்ல மனுசங்களைக் கொல்ற புலியா மாறிடும். அது எப்பவும் மனுசங்கள முன்னால இருந்து பாஞ்சு கொல்லாம பின்னால கூடிப்பாயும். அதுக்காக நாமெ இப்படியும் பின்னால பக்கமும் மொகம் இருக்கு, இது என்னமோ, ஏதோன்னு நெனச்சிப் பயந்து ஓடிப் போயிரும். அதால நீங்களும் இத மாட்டிங்கொங்க சாமி!''

நீலனுடைய அறிவைக் கண்டு இருவரும் ஆச்சரியப்பட்டு விட்டு, தலைக்குப் பின்னால் முகமூடிகளை அணிந்து கொண்டு நடந்தனர். பார்ப்பதற்கு மூவரும் பின்பக்கமாக நடப்பது போல இருந்தது அது.

நீலன் மறுபடியும் கீழே குனிந்து பார்த்தான். ஏதோ தடங்கள் தெரிந்தன. தடங்களின் பள்ளங்களில் கை விரல்களை விட்டும், ஒரு தடத்திற்கும் அடுத்த தடத்திற்கும் கை முழக்கினாலும் அளந்து பார்த்து விட்டு, ''சாமி, இப்படிக்கூடப் போன புலி பெண் புலி தான். நாலரையடி நீளமிருக்கும் அந்தப் புலி,'' என்றான்.

''எப்படி இவ்வளவு சரியாச் சொல்றே?''

''சாமி, பாதங்கள் அழுத்துனதை வச்சி ஆணா, பொண்ணான்னு பாத்துடலாம். பாத இடவெளி வச்சி எவ்வளவு நீளம்ன்னு சொல்லிடலாம். தடங்களுக்கு மேல இருக்கிற மண்ணு,

செத்தைகளை வெச்சிப் போன நேரத்தைச் சொல்லிடலாம்.''

ஏதோ ஒரு பல்கலைக் கழக ஆய்வாளனைப் பார்ப்பது போல நீலனை அவர்கள் இருவரும் பார்த்தனர்.

''சரி நீலா. நாம இப்படியே திரும்பிப் போயிடலாமா?'' என்றான் அமுதன்.

''சாமி, புலின்னதும் பயப்படறீங்க. இவ்வளவு தூரம் வந்தாச்சு. அதோ இருக்கு ஆலமரம். ஒருமணி நேரத்துல நாம அதுல இருந்து பாத்துட்டுத் திரும்பிடலாம். புலியே இப்ப வந்தாலும் இந்தச் சின்னக் கத்தியால அதக் கிழிச்சிக் கொன்னு போடுவேன். நீங்க பயப்புடாமே வாங்க.''

அவர்கள் தயங்கியவாறே சென்றனர். அந்தக் கல்லால மரவேர்கள் கபிலைக்கயிறு போலவும், தேர்வடம் போலவும், மலைப்பாம்புகளைப் போலவும் தாறுமாறாகப் படர்ந்து அப்பாறையை மறைத்திருந்தது.

மரத்தின் மேலே மையத்தில் கிளைகள் பிரியும் இடத்தில் பலகைகளாலான வீடு போலத் தெரிந்தது. நீலன் அந்த வேர்களில் ஒன்றைப் பிடித்துக் கொண்டும் ஒன்றில் கால் வைத்தும் மேலே ஏறினான்.

அவர்களும் அதே போல் ஏறினார்கள். நீலன் ஒரு கிளையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நூலேணியை எடுத்துக் கீழே விட்டான். ஏணி பாறைக்கு மேல் தொங்கியது.

அந்தச் சத்தத்தைக் கேட்டு உச்சிக் கிளைகளிலிருந்த மந்திக் கூட்டம் 'குக்குக்' என்று கூச்சலிட்டவாறே கிளைக்குக் கிளை தாவி ஓடின.

இரண்டு பக்கம் கயிறுகளும் இடையிடையே கம்புகளுமான அந்த ஏணி வழியாக அவர்கள் ஏறினார்கள். மேல் கம்பைப் பிடித்துக் கீழ்கம்பில் கால் வைத்தால், அது ஒரு பக்கம் விலகிப் போவது போல இருந்தது. அமுதனுக்கும், இளங்கோவுக்கும் அதில் ஏறுவது பயமாகவே இருந்தது. மேலே மாடத்திற்கு வந்து விட்டனர்.

அந்த அறை நல்ல முறையில் அமைக்கப்பட்டது. சுற்றிலும் நிறைய ஜன்னல்கள் இருந்தன. அதன் வழியாக அந்த வனம் முழுவதும் பார்க்கலாம். அது ஓர் அற்புதமான காட்சியாகத் தெரிந்தது. கொண்டு வந்திருந்த கடலை மிட்டாய் பாக்கெட்டுகளை உடைத்து மூவரும் தின்றனர்.

''சாமி, நான் பெண்புலி சத்தம் காட்டட்டா?''

''எதுக்குப்பா?''

''அதத் தேடி ஆண் புலி இங்க வரும். நாம பாக்கலாம்.''

''வேண்டாம் நீலா. எனக்குப் பயம்மா இருக்கு.'' என்றான் அமுதன்.

''அப்புறம் வேற எப்படியெல்லாம் சத்தம் போடுவ சொல்லு?''

''மானு, குரங்கு, கரடி மாதிரியெல்லாம் சத்தம் போட்டு அதை வரவழைச்சிக் காட்டலாம்.'' பாரஸ்ட் ஆபீசருங்க என்னைக் கூட்டிவருவாங்க. நான் இப்படியெல்லாம் மிருகங்க மாதிரி சத்தம் கொடுப்பேன். அதுக வரும். பார்த்துச் சந்தோசப் படுவாங்க.''

கீழே ஏதோ சத்தம் கேட்டது. அவர்கள் பார்த்தனர். ஒரு மிளாக் கூட்டம் பாதையில் சென்று கொண்டிருந்தது. முரட்டு மான்களைப் போல அவை இருந்தன. முதலில் சென்ற மிளாவுக்குப் பெரிய கொம்புகள் அழகான இலைகள் போன்று தோற்றமளித்தன.

''சாமி, சத்தம் போடாமப் பாருங்க.'' மெல்லக் கிசுகிசுத்தான். ''சாமி, இது போன பாதையில்

நண்பன் 1: எனக்கு எதைப் பார்த்தாலும், இரண்டிரண்டா தெரியுது!

நண்பன் 2 (ஒரு ஐம்பது ரூபாயை நீட்டி): இந்தா நான் உனக்குத் தர வேண்டிய நூறு ரூபாய்...!

— எஸ். குருமூர்த்தி.





ஒரு கரும் பாறை தெரியுதில்லே? அதுக்கு வடக்கே கூர்மையாப் பாருங்க.'' நீலன் சொன்னதும் பைனாகுலரை வாங்கிப் பார்த்தனர்.

அங்கே புலி ஒன்று தரையோடு தரையாகப் படுத்திருந்தது. அருகில் இரண்டு குட்டிகள் ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டவாறே விளையாடிக் கொண்டிருந்தன. மிளாக்கள் வருவதை மோப்பத்தால் கண்டுவிட்ட புலி, குட்டிகளைப் பார்த்து ஏதோ சத்தமிட்டது. அவை உடனே ஓடிப் பாறைமறைவில் ஒளிந்து கொண்டன.

மிளாக்கள் பாறையருகே வந்ததும் புலி திடீரென்று பாய்ந்தது. மிளாக்கள் மிரண்டு ஓட்டமெடுத்தன. ஒரு மிளாவின் பின் கழுத்தைப் புலி கவ்விப் பிடித்ததும் தன் கால்களால் புலியை உதைக்க முயன்றது. புலி மிளாவின் கால்கள் தன்மேல் பட்டுவிடாமல் இருக்க உடலை ஒதுக்கிக் கொடுத்தது. மிளா கீழே விழுந்து பாதி உயிர் போன நிலையில் துடிதுடித்துக் கொண்டிருந்தது. புலி சத்தம் கொடுத்ததும் குட்டிகள் ஓடி வந்தன. மிளாவின் வயிற்றில் ஒரு குட்டி அடித்ததும், புலி குட்டியைக் காலால் ஓர் அடி அடித்தது. அது உருண்டு எழுந்து கழுத்தைப் பிடித்துக் கடித்து மிளாவின் உயிரைப் போக்கிற்று.

புலி சிறிது நேரம் பார்த்து விட்டு இறந்து போன மிருகத்தின் ஆசன வாயைக் கிழித்து அதன் மலக்குடல்களை வாயால் கவ்வி எடுத்துத் தூரத்தில் போட்டு வந்தது. மூன்றுமாக அதன் மாமிசத்தைச் சாப்பிடத் தொடங்கின. அந்த இடம் முழுவதும் ரத்தக் காடாக இருந்தது.

''சாமி, புலிக் குட்டிகளுக்கு வேட்டையாடற பழக்கத்தைக் கத்துக் கொடுக்குது. எதிரியை மொதல்ல பின் கழுத்தைப் பிடிக்கணும்னு ஒரு குட்டியை அடித்துத் தள்ளினது. அப்புறம் புலி ரொம்பச் சுத்தமான மிருகம். கழிவுகளையெல்லாம் எடுத்து அங்கிட்டுப் போட்டுட்டுத் தான் மாமிசத்தைச் சாப்பிடும். சிறுத்தை அப்படியில்லை. எல்லாத்தையும் சாப்பிடும்.

''சரி, புலியிருக்கே? நாம எப்படி எறங்கிப் போறது?''

''சாமி, புலி ரொம்பத் தூரத்திலே இருக்கு. நாம வந்த வழியாத்தானே போகப் போறோம்? ஒங்களைப் பல்லிளிச்சான் கணவாய் அடியில பாதுகாப்பாச் சேர்க்கிறது என் பொறுப்பு. எறங்குங்க,'' என்றதும் மூவரும் இறங்கினார்கள்.

நீலன் நூலேணியை முன்பிருந்தது போல வைத்துவிட்டு வந்தான்.

இந்த மான்குட்டி, தன் தாயிடம்
பத்திரமாகப் போய்ச் சேர வேண்டும்.
சரியான வழிகாட்டுங்கள்.

ஆழி ——



மூவரும் நடந்து அவர்கள் குறித்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர். புதர் மறைவில் வைத்த சைக்கிள்கள் பாதுகாப்பாக இருப்பதைக் கண்டு திருப்தியடைந்தனர். ஆளுக்கு ஐந்து ரூபாயை எடுத்து நீலனிடம் பத்து ரூபாயாகக் கொடுக்க எண்ணி, ''இந்தாப்பா நீலா, இதை வச்சிக்கோ. எங்களுக்கு ரொம்ப உதவி செஞ்சே. நன்றிப்பா,'' என்றனர்.

''சரி சாமி. எனக்குப் பணமெல்லாம் வேண்டாம்...''

''எதுக்குப்பா, தப்பா நெனைக்காம வாங்கிக்கோ.''

''நான் தப்பா நெனைக்கல சாமி. எல்லாரும் என்னை வாடா, போடான்னு சொல்லி மிருகத்தைப் போல அலட்சியப்படுத்தி, அடிமை போல வேலை வாங்குவாங்க. ஆனா நீங்க பேரைச் சொல்லிக் கூப்பிட்டு, அன்பாப் பழகி, பக்கத்துல வச்சி சாப்பாடு போட்டு என்னையும் மனுசனாட்டம் நெனைச்சது ரொம்பச் சந்தோசமா இருக்குங்க. பணம் வாங்கிட்டேன்னா கூலி மாதிரியாயிடும். எல்லாம் மறந்து போயிடும். அதுக்காகப் பணம் வேண்டாம் சாமி.''

ஒரு காட்டுச் சிறுவன் அவன் தெரிந்துள்ள விஷயங்களால் ஓர் அறிஞனைப் போலவும், நடந்து கொள்ளும் விதத்தில் ஒரு முனிவனைப் போலவும், பேச்சில் தத்துவ ஞானியைப் போலவும் இருக்கும் காட்சியை எண்ணி இருவரும் ஆச்சரியப் பட்டனர். அதே சமயத்தில் அந்த இனத்தவர் தாங்குவதற்குச் சரியான வீடுகள் இல்லாத நிலைமையையும், வயிறாறச் சாப்பிட முடியாமல் அவர்கள் அல்லாடுவதையும் எண்ணி வருத்தப்பட்டனர்.

இருவரும் நீலனைக் கைகுலுக்கி, முதுகில் தட்டிக் கொடுத்து ஆனந்தக் கண்ணீர் விட்டனர்.

நீலனும் கண்களில் நீர் மல்க, ''போயிட்டு வாரேஞ்சாமி,'' என்று கூறிவிட்டு ஒற்றையடிப் பாதையில் சென்று மறைந்தான்.

இருவரும் கைகளை ஆட்டிப் பிரியா விடை கொடுத்தனர்.

அவமான அடியால் வெகுமானம் பெற்ற பாரதி

சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பு —

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென்னிளசை என்று பாராட்டப் படும் எட்டயபுரம் அரண்மனை, புலவர்களுக்குப் புலமை பூக்கும் தமிழ்ச் சோலையாகவும், தமிழ் வளர்க்கும் சங்கமாகவும் திகழ்ந்தது. அதன் தலைவர் இரெட்டப்ப ரெட்டியார் வள்ளலாகத் திகழ்ந்தார்.

இரெட்டப்ப பூபதியின் சபையில் அடிக்கடி புலவர்கள் கூடித் தத்தம் புலமையைப் பாட்டாகவும், பேச்சாகவும், விவாதமாகவும் வெளிப்படுத்திப் பரிசும் பாராட்டும் பெற்று மகிழ்வார்கள். சமஸ்தானத்தையும் புகழ்வார்கள்.

அத்தகைய புலவர்கள் சபயிலே, வயதிலே மூத்தவரும் நிறையப் படித்தவருமாக விளங்கினார் காந்திமதி நாதப் பிள்ளை என்ற பெரும் புலவர்.

ஆனால் காந்திமதி நாதப் பிள்ளைக்கு வித்யா கர்வம் மிகவும் அதிகமாக இருந்தது.

தம்மைப் போலத் தமிழ்ப் புலமையிலும், கவி பாடுவதிலும், சிறந்தவர் வேறு யாருமே இல்லை, இருக்கவும் கூடாது என்ற நினைப்பும், முனைப்பும் உடையவர் அவர்.

அதனால், யாரேனும் தம்மை விடப்புலமையிலும் கவிபாடுவதிலும் திறமையுடையவராகத் திகழ்வார்கள் எனத் தெரிந்தால் போதும். அவர்களை எப்படியாவது வாதத்துக்கோ, போட்டிக்கோ இழுத்துத் தோல்வி அடையும்படி செய்து, அவமானத்தால் தலைதூக்க முடியாதபடி செய்து விடுவார்.

அப்படிப் பிறரைத் தோல்வியுறச் செய்து மட்டந்தட்டுவதிலேயே அளவிலா மகிழ்ச்சி அடைவார். மற்றப் புலவர்களையும் அஞ்சி அடங்கச் செய்வார் காந்திமதி நாதப்பிள்ளை.

எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்களிடையே பன்னிரண்டு வயது நிரம்பாத சுப்பிரமணியம் என்னும் பாரதி விரைந்து கவி பாடுவதிலும், விவாதிப்பதிலும் தனிப்பெரும் ஆற்றல் பெற்று விளங்கினார். சிறிது காலத்திலேயே சமஸ்தானத் தலைமைப் புலவராகவே கூட விளங்கும் தகுதி பெற்று விடுவார் என்று சிலர் பாராட்டினர். பலரோ பயந்து வெறுப்புற்றனர்.

அதனை அறிந்தார் காந்திமதி நாதப் பிள்ளை.

எப்படியாவது பாரதியாரின் கவிப் புலமையை மட்டந்தட்டி, மண்ணைக் கவ்வ வைக்க வேண்டும் என்று பொறாமை கொண்டார். அதற்கான சமயத்தையும் எதிர்பார்த்திருந்தார். அந்தச் சமயமும் வந்தது.

ஒரு நாள், எட்டயபுரம் அரண்மனையிலே புலவர்கள் சபை கூடியது

ஜமீன்தார் இரெட்டப்ப பூபதி தலைமை வகித்தார்.

அன்று புலவர் போட்டிக்கு ஏற்பாடாகி இருந்தது.

புலவர் காந்திமதி நாதப்பிள்ளை எழுந்து, "இன்று வெண்பாப் பாடும் போட்டி நடக்க உள்ளது. வெண்பாவின் கடைசியான ஈற்றடியை மட்டும் கொடுப்போம். அதை ஐந்து மணித் துளிக்குள் கருத்தும் பொருத்தமும் அழகுற அமையும்படி பாடி முடிக்க வேண்டும். அவ்வாறு பாடி முடித்தவர் உன்னதப் பரிசும் பாராட்டும் பெறுவர். அதனால் இன்றைய போட்டியில் முதன் முதலிலே கலந்து கொள்ளும்படி பாரதியை அழைக்கிறேன்," என்றார்.

அதைக் கேட்டதும் மற்றவர்கள் கலங்கினார்கள். ஆனால் பாரதியோ, அஞ்சாத சிங்கமென எழுந்து நின்று,



''ஈற்றடியைச் சொல்லும்,'' என்றார்.

பாரதியை எப்படியும் அவமானம் அடையும்படி செய்ய வேண்டும்; செய்ய முடியும் என்றே திட்டமிட்டுத் தயார் செய்து கொண்டு வந்திருந்தார் அந்த ஈற்றடியை.

அதனால் ஆணவத்துடனும் அலட்சியத்துடனும் அந்தச் சபையை நோக்கியபடியே, ''பாரதி சின்னப் பயல்! இதுதான் ஈற்றடி இந்த ஈற்றடி நன்கு அமையும்படி, இப்பொழுதே வெண்பாப் பாடுக,'' என்றார் நமுட்டுச் சிரிப்புடன்.

காந்திமதி நாதரும், மற்றையப் புலவரும், 'பாரதி சின்னப் பயல்' என்ற ஈற்றடி கொண்ட வெண்பாவைப் பாரதி பாடவே மாட்டார், பாடவும் முடியாது. பாட முடியாவிட்டால் பாரதிக்குத் தோல்வி, அவமானமாகி விடும். அப்படியே பாடி முடித்தாலும், அது 'பாரதி சின்னப் பயல்' என்று அவர் வாயினாலேயே, அவரை இகழ்ந்து பாடி அவமதித்துக் கொள்ளும்படியாகவே ஆகிவிடும்,' என்று நினைத்தார்.

'வெண்பாவைப் பாடி முடித்தாலும், முடிக்காமல் போய்விட்டாலும், அவமானம்தான் ஏற்படும். அதனால் பாரதியின் சீரும் சிறப்பும், கவிப்பெருக்கும் இன்று அடியோடு மண்ணைக் கவ்வும்படி செய்து விட்டேன்,' என்று தலை கனத்து மமதையால் களித்தார் காந்திமதி நாதப் பிள்ளை.

ஆனால் காளி அருளும், கண்ணன் அருளும் ஒரு சேரப் பெற்ற நம் மகாகவியோ, மின்னல் வேகத்தில் இடி இடித்தாற் போல வெண்பாவைப் பாடி முடித்தார்.

அவர் வெண்பாவைப் பாடி முடித்ததுமே அவையோர் யாவருமே ''மகாகவி பாரதி வாழ்க! பாட்டுக்கொரு புலவன் பாரதி வாழ்க!'' என்று விண்ணதிர, மண்ணதிர வாழ்த்தினர். இன்பக் கூத்தாடினர். தம்மை மறந்த பரவசத்தால்.

ஆனால் காந்திமதி நாதப் பிள்ளையோ, மலையை முட்டிய மத யானை தந்தங்கள் ஒடிந்து, தருக்கடங்கி நாணி நின்றது போல அவமானத்தால் தலைகுனிந்தே நின்றார். தலை நிமிர முடியாதபடி.

அன்று மட்டும் அல்லாமல், இன்றும், ஏன் என்றுமே தலை நிமிர முடியாதபடி, தலை குனிந்து நிற்கும் படியாகவே வெண்பாவைப் பாடி விட்டார் — இல்லை வெண்பாவாலேயே சாடிவிட்டார் மகாகவி பாரதியார்.

அப்படி அவர் என்னதான் பாடினார்?

திருநெல்வேலி மாவட்டத்து எட்டயபுரம் சமஸ்தானத்தில் இருப்பவர்கள் பூமண்டலமே போற்றி மதிக்கும் படியாகப் புலவர்களைப் பரிசும், பாராட்டும் தந்து கௌரவிக்கும் கண்ணியமான பண்புடையவர்கள், அத்தகைய பண்புடைய புலவர்கள் சபையிலே, புலவர்களைப் போற்ற விரும்பாமல், அவமானப்படச் செய்யும் அற்பமதி படைத்த காந்திமதி நாதனைப் பார் அதி சின்னப் பயல் என்று பொருள் அமையும்படி, அற்புதமாகப் பாடிய அருமையுடையது.

எந்நாளும் வாழ்ந்து ஏற்றமுறும் செந்தமிழ்ச் சிரஞ்சீவிக் கவிதை இதோ!

சீருலவு நெல்லை இளசையிலே
கற்றவரைப்
பாரறியப் போற்றி செயும்
பண்புடையார் — சீரவையில்
காரதுபோல் நெஞ்சிருண்ட காந்திமதி
நாதனைப்
பாரதி சின்னப் பயல்!

கவிஞர் தமிழ்முடி



* டி. முருகேசன், புதுக்கோட்டை.


? கே: உண்மைக்குத் தோல்வி ஏற்படும் போது என்ன செய்வது?

ப: எதுவும் செய்ய வேண்டாம். அந்தத் தோல்வி தற்காலிகமானது என்று நம்பு. ஏனென்றால் உண்மை — அதாவது சத்தியம் மகத்தான தருமம். 'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடியும் வெல்லும்,' என்று பாரதி சொல்லுகிறான். காந்திஜியின் சத்திய சோதனைக்கு மேலேயா உனக்குச் சோர்வு ஏற்பட்டு விடப் போகிறது? இருந்தும் அவர் அந்தச் சத்தியத்தில் — உண்மையில் ஊன்றி நின்றதால்தானே மகாத்மா ஆனார்! நீ அந்த அளவுக்கு மகாத்மா ஆக வேண்டாம். உண்மை வெல்லும் என்று நம்புகிற சாதாரண ஆத்மாவாகவாவது இரு.

* ச. சையது முஸ்தபா, திருச்சி — 17.

கே: ஒரு பிரசவத்தில் இரண்டு குழந்தைகள் பிறந்தால், அந்த இரண்டு குழந்தைகளுக்கும் கைரேகை ஒரே மாதிரியாக இருக்குமா?

ப: உலகத்து இயற்கை அதிசயங்களில் உவமை சொல்ல முடியாத ஓர் அதிசயம் உண்டு என்றால் அது இந்தக் கைரேகை சமாச்சாரம்தான். ஆம். இந்த உலகில் உள்ள கோடானு கோடி மனித ஜீவன்களில்



ஒருத்தருடைய கைரேகையைப் போல் மற்றொருவருடையது இருக்காது. இந்த ஓர் அடிப்படைதான் குற்றவாளிகளின் கைரேகைப் பதிவிற்கும் அவர்களைக் கண்டு பிடிப்பதற்கும் ஆதாரமாய் இருக்கின்றன. ஆனால் ஒரே அச்சில் வார்த்த மாதிரி இரட்டைக் குழந்தைகள் பிறப்பதுண்டு. இவை ஒற்றை ஆண் சினைக் கரு முட்டை **(UNIOVULAR)** யிலிருந்து உருவாகின்றன. இப்படிப் பிறப்பவை ஒரே இனமாக — ஆண் அல்லது பெண்ணாகத்தான் இருக்கும். ரொம்ப அபூர்வம். ஒட்டிக் கொண்டிருக்கும் இரட்டை ஆண் சினைக் கரு முட்டை **(BINOVULAR)** யிலிருந்து உருப்பெறும் இரட்டைக் குழந்தைகளுக்கு முக ஒற்றுமையும் இருக்காது; ஒரே இனமாகத்தான் இருக்கும் என்றும் சொல்வதற்கில்லை. அண்ணன் தங்கையாகவோ, அக்கா தம்பியாகவோ இருக்கலாம். பெயர் வைப்பது சிரமமாய் இருக்கும். ராமன், லக்ஷ்மி என்றால் நன்றாகவா இருக்கிறது?

* கே. எல். குமணன், கல்லிடைக்குறிச்சி.


? கே: முதலில் பெரியம்மை தாக்கியவர்களுக்கு மீண்டும் பெரியம்மை நோய் தாக்காது என்கிறார்களே, உண்மைதானா?

ப: நமக்கு அம்மைத் தடுப்பு ஊசி போடுகிறார்களே அது என்ன என்று தெரிந்திருந்தால் இந்தக் கேள்விக்கே இடம் இருக்காது. அம்மை நோய்க் கிருமிகள்தான் அந்த மருந்தில் இருக்கிறது! 'முள்ளை முள்ளாலதான் எடுக்கணும்,' என்பார்களே அந்தத் தத்துவம். அப்படி உடலுக்குள் தங்கியிருக்கும் அம்மை நோய்க் கிருமி உள்ளே நுழையப் பார்க்கும் அம்மைக் கிருமிகளுக்கு எதிர்ப்புச் சக்தியாய் ஆகின்றன. அதனால்தான் பெரியம்மை நோய் வந்தவர்கள் உடலில் மிச்சமிருக்கும் அம்மை நோய்க் கிருமிகள் மேற்கொண்டு தாக்க வரும் சுய ஜாதிக் கிருமிகளை அண்ட விடுவதில்லை. பயப்படாதே. இதனால் ஆபத்து ஏதும் இல்லை.

* எஸ். ஜானவி, மணம்பூண்டி.

? கே. பேட்மிண்டன், டென்னிஸ் ஆடும் போது 'LOVE ALL' என்று கூறுகிறார்களே, ஏன்? இதற்கு ஏதாவது காரணம் உண்டா?

ப: பேட்மிண்டன், டென்னிஸ் ஆடும் போது துவக்கத்தில் இருதரப்புக்கும்



பாயிண்ட் O என்பதைக் குறிக்கச் சொல்லும் வார்த்தை இந்த LOVE ALL சர்வீஸ் போடுகிறவர் பாயிண்ட் எடுத்ததும் 15—0 என்பதை 15— LOVE என்று எண்ண ஆரம்பிப்பார். அப்போ LOVE என்றால் 0 என்று அர்த்தமா? இந்த டென்னிஸ் விளையாட்டைக் கண்டுபிடிச்சவர் பெரிய வேதாந்தியாய் இருந்திருப்பார் போலிருக்கிறது. LOVE என்பது மாயை அதாவது O என்று சொல்லி விட்டார்!



* ச. சையது முஸ்தபா, திருச்சி — 17.

? கே: கவியரசு கண்ணதாசனின் பாடல்களில் தங்களை மிகவும் கவர்ந்த பாடல் எது?



ப: கண்ணதாசனின் இலக்கியத்தரமான பாடல்கள் பலவற்றை ரசித்துப் படித்திருக்கிறேன். இருந்தும் செவிவழி புகுந்து சிந்தையில் இனிப்பது அவரது சினிமாப் பாடல் வரிகள்தான்.

'கையளவு இதயத்திலே
கடலளவு ஆசை வைத்தாய்...'

என்ற அந்த வரிகளைக் கேட்டாலும் நினைத்தாலும் எனக்கு ஒரு சிலிர்ப்பு ஏற்படும். பின்னாளில் கண்ணதாசன் ஒரு திரைப் பாடகர் என்ற எண்ணம் மறையும் போது அவரது திரைப் பாடல்களும் இலக்கியமாய் நிலைபெற இருக்கின்றன.

* கே. எஸ். குமணன், கல்லிடைக்குறிச்சி:

? கே: அறியாமைக்கும், முட்டாள்தனத்துக்கும் என்ன வித்தியாசம்?

ப: அறியாமை கறை படிந்த கண்ணாடி என்றால், முட்டாள்தனம். ரசம் போன கண்ணாடி. கறை படிந்த கண்ணாடியைச் சும்மா துடைத்து விட்டால் போதும், உருவம் பார்க்கலாம் — அறியாமையில் இருப்பவனிடம் எடுத்துச் சொன்னால் போதும்; புரிந்து கொள்வான். ரசம் போன கண்ணாடி சும்மா துடைத்து விட்டால் உருக் காட்டுமா என்ன? அதுபோல் முட்டாள்தனம் என்றாலே அறிவுக்கு அப்பாற்பட்டது என்று அர்த்தம். அதனிடம் என்னதான் எடுத்துச் சொன்னாலும் எட்டுமா என்ன? அப்பேர்ப்பட்டதுகளிடம் ஆத்திரப்பட்டுப் பயனில்லை. அனுதாபப் பட்டு விட்டு விட்டால், அட்லீஸ்ட் நாமாவது நிம்மதியாய் இருக்கலாம்!

* அ. நவ்சாத், மொரப்பூர்.

? கே: வெய்யில் காலத்தில் சிறுநீரின் நிறம் மஞ்சளாகக் காணப்படுகிறதே, ஏன்?


ப: நாம் பருகும் நீர், அது என்னதான் நல்ல தண்ணீராக இருந்தாலும் உப்பு நீராய் வெளியேறுகிறது. வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் பலவிதமான கோளாறுகளெல்லாம் ஏற்படும். இந்த நீர் பெரும்பாலும் சிறுநீராய்த்தான் வெளியேறுகிறது. ஆனால் வெய்யில் காலத்தில் வியர்வை வடிவத்தில் இந்தக் கழிவுநீர் ஒரு பங்கு வெளியேறி விடுகிறது. மிச்சமுள்ள நீர் சுண்டிப் போவதால் உப்பு இறுகி, அதற்கு ஒரு நிறத்தைக் கொடுத்து விடுகிறது. தவிர, உடற்கோளாறு காரணமாகவும் சிறுநீர் நிறம் மாறுவதுண்டு. யுனானி மருத்துவ முறையில் இந்தச் சிறுநீர் பரிசோதனையை மிக முக்கியமான ஒன்றாக வைத்திருக்கிறார்கள். ஆத்திரத்தை அடக்கினாலும் மூத்திரத்தை அடக்கக் கூடாது என்று ஒரு பழமொழி உண்டு. சும்மா எதுகை நோக்கி வந்த பழமொழி அல்ல இது. ரொம்ப அர்த்தமுள்ளது. அதனால் அப்படி ஏதும் இதுவரை அடக்கி வைத்திருந்தால், போய் விட்டு வந்து அப்புறம் படி.

ராமு: வயித்துக்குள்ளே பஸ் ஓடற மாதிரி சத்தம் கேட்குதுடா...!

சோமு: அது பஸ் சத்தம்னு எப்படிக் கண்டுபிடிச்சே?

ராமு: 'ரைட்'ன்னா சத்தம் கேட்குது. 'ஸ்டாப்'ன்னா நின்னுடுது!

— ஜி. ராஜசேகர்.



வீட்டில் வளருது கண்ணீர்!

காலை நேரம்.

வாசலில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு சாய்ந்து இருக்கிறேன். கையில் பத்திரிகை.

'குதிரையின் வால், மாட்டின் கால்கள், கழுதையின் காதுகள், மனித முகம், யானையின் துதிக்கை ஆகியவற்றுடன் ஒரு குழந்தை பிறந்த செய்தியை ஆர்வத்துடன் நான் படித்துக் கொண்டிருந்த போது, பக்கத்து வீட்டில் ஏதோ களேபரம். கூச்சல் கேட்டது. யாரோ அழுதார்கள். எவரோ கடிந்து கொண்டார்.

தலையைப் பக்கத்து வீட்டுப் பக்கமாகத் திருப்பினேன்.

''உனக்குச் சமாசாரம் தெரியுமா?" இது சுருட்டி.

சுருட்டி என்பது பூனை. என் வீட்டில் வளர்கிறது. சலவை செய்தாற் போன்ற வெண்மை நிறத்தில் திட்டுத் திட்டான கறுப்பு உடல். சுருண்டு படுத்தால் கால்ப் பந்து என்று எண்ணச் செய்யும் பூனை.

என்னிடம் சுருட்டிக்குப் பூனைக்குட்டி விசுவாசம் உண்டு. நின்றால் என் கால்களோடு உரசும். உட்கார்ந்தால் மடி மீது படுக்கும். படுத்தால் பக்கத்தில் வந்து சுருண்டு ஒட்டிக் கொள்ளும். ருத்ராட்சத்தைக் காட்டினால், ஓடி விடும்.

சுருட்டி பேசாது. பூனை பேசுகிறது என்று யாராவது சொன்னால், நம்பாதீர்கள். அப்படிச் செய்தி படித்தீர்களானால், அது பொய். பேசுவதற்கான வகையில் பூனையில் நாக்கு அமையவில்லை என்பது காரணம்.

சுருட்டியும் பேசாது. ஆனால் சிந்திக்கும். மூளை உள்ளது எல்லாம் சிந்திக்கும். அது என்ன நினைக்கிறது என்பது எனக்கு மட்டும் புரியும். 'மியாவ்' என்று அனைத்துப் பூனைகளையும் போலத்தான் சுருட்டியும் கத்துகிறது. ஆனால் சுருட்டியைப் போல அவை அத்தனை அழகாகச் சிந்திக்கின்றனவா என்பது எனக்குத் தெரியாது. சுருட்டி சிந்திக்கிறது. அதன் சிந்தனை எனக்குப் புரிகிறது.

பத்திரிகை படித்துக் கொண்டிருப்பேன். அல்லது டிரான்சிஸ்ட்டரைப் பிரித்துப் போட்டு, எப்படி மீண்டும் இணைப்பது என்பது தெரியாமல் விழித்துக் கொண்டிருப்பேன். அப்போது சுருட்டி வந்து நிற்கும். 'மியாவ்' என்று நீண்ட குரல் கொடுக்கும்.

''என்ன?''

''பால் வேணும்.''

''இப்பத்தானே குடித்தாய்?''

''வேணும்.'' நகங்களால் தரையைப் பிறாண்டும்.

சரி என்று எழுந்து சென்று அதனுடைய தட்டில் பாலை ஊற்றி விட்டு

திருவாழத்தான்

வருவேன்.

ஆனால் சுருட்டி உடனே தட்டில் வாய் வைத்து விடாது. "தட்டைக் கழுவ வில்லை, பார்," என்பதாக ஒரு பார்வை பார்க்கும்.

"பரவாயில்லை. அடுத்த தடவை பால் ஊற்றுவதற்கு முன்னால் தட்டைக் கழுவி வைக்கிறேன். இப்ப குடி."

"சாப்பிடுனு சொல்."

"சாப்பிடு, சாப்பிடு."


இப்படியான பூனை சுருட்டி.

"வாசலில் கூவிக் கொண்டு போகிறானே, உன் காதுகளில் விழவில்

மீன் விற்பவன் முன்னால் போய் அவனை வழி மறித்தது. நின்றான். சிறியது. பயந்தான். திரும்பிப் பார்த்தான். நான் கையை அசைத்து அழைத்தேன். வந்தான். அவனைத் தொடர்ந்து பூனைக் குட்டி போல சாதுவாகச் சுருட்டி வந்தது.

இப்படி ஒரு பூனையைப் பார்த்திருக்கிறீர்களோ? என் நேரத்தில் பாதியைத் தன் நேரமாகக் கருதும் பூனை இது.

அந்தக் காலை நேரத்தில் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்



லையா?" ஒரு காலை நேரத்தில் சுருட்டி என்னிடம் வந்து நின்றது.

"என்ன வென்று கூவிக் கொண்டு போகிறான்?"

"போய்ப்பார். வா என்னுடன்."

சென்றேன். "மீனோ மீனு," என்று ஒருவன் கூடையுடன் கூவிக் கொண்டு சென்றான்.

"ஏன் நிற்கிறாய்? கூப்பிடு."

"நான் சைவம். மீன் சாப்பிட மாட்டேன். எப்படிக் கூப்பிடுவேன்?"

"அப்ப நில். நான் கூட்டிக் கொண்டுவரேன்." சுருட்டி சென்றது.

பார்த்தபடி நின்றேன்.

தேனா? அப்போது தான் பக்கத்து வீட்டில் களேபரம் என்பது தெரிந்தது.

"உனக்குச் சமாசாரம் தெரியுமா?" சுருட்டியின் சிந்தனை, ரேடியோ அலைகளாக என் மூளையில் பதிய, அது என்ன சொல்கிறது என்பதை நான் புரிந்து கொள்கிறேன்.

"தெரியாது," என்றேன்.

"நேற்று இரவு அந்த வீட்டில் திருட்டு நடந்தது."

"உனக்கு எப்படித் தெரியும்?"

"நான்தான் திருட்டுத்தனமாகப் பக்கத்து வீட்டில் பால் குடிக்க நேற்று

இரவு போனேனே!''

''திருட வேறு செய்கிறாயா?'' பக்கத்தில் தேடினேன். தடி, குச்சி, கம்பு ஏதாவது கிடைத்தால், இந்தத் திருட்டுப் பூனையைத் தீர்த்துக் கட்டலாம் என்பது என் எண்ணம்.

''சும்மா அலட்டாதே! அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாய். உன் உறக்கத்தைக் கெடுப்பானேன் என்று பக்கத்து வீட்டில் பால் சாப்பிடச் சென்றேன்.

''சரி, சமாசாரத்தைச் சொல்.''

''பக்கத்து வீட்டுக்குப் பால் அருந்தப் போனேனா? அங்கே உள்ள ஒரு அறையிலே இரும்பு பீரோ இருக்கு. அந்த பீரோவைத் திறக்க ரெண்டு பேர் முயற்சி பண்ணிக் கொண்டிருந்தாங்க.''

''அந்த வீட்டுக் காரர்களை உறக்கத்திலிருந்து எழுப்பி விடுவது தானே?''

''எப்படி? என்னை உதைத்து அனுப்பி விட்டுப் படுப்பாங்க. இல்லே, அந்த ரெண்டு திருடர்களும் இவர்களில் ஒருவரைக் கொலை பண்ணி விட்டுப் போவாங்க. எதுக்கு வம்பு? நான் பாலை அருந்தி விட்டுப் பேசாமல் வந்து விட்டேன்.''

''அந்தத் திருடங்க பீரோவைத் திறந்து, கிடைத்தவற்றைச் சுருட்டிக் கொண்டு போய் விட்டார்களாக்கும்?''

''என் பெயரை இழுக்காதே! நான் அப்படி ஒன்றும் நீ நினைப்பது போல முட்டாள் அல்ல. அவங்க பீரோவைத் திறந்து நகை, பணம், துணி எல்லாவற்றையும் எடுத்து மூட்டை கட்டிக்கிட்டாங்க. மூட்டை கட்டிக்கிட்டாங்களா? மூட்டையைத் தூக்கிக்கிட்டுப் போனாங்க. போனாங்களா? அவங்க பின்னாலேயே நான் சென்றேன். சென்றேனா? அவங்க திரும்பித் திரும்பிப் பார்த்தாங்க. பார்த்தாங்களா? நான் வீதி ஓரமாக அவங்க பார்வையில் படாமல் நடந்தேன். நடந்தேனா? உம்னு சொல்லு. அப்பத்தான் எனக்கு மேலே மேலே சிந்தனை வரும்.''

''உம்.''

''நடந்தேனா? அவங்க நேராகப் போய் ஒரு வீட்டுக்குள்ளே நுழைஞ்சாங்க, நுழைஞ்சாங்களா?''

''உம்.''

''அது அவங்க வீடு. நுழைந்ததும் வாசல் கதவைச் சாத்திக்கிட்டாங்க. சாத்திக்கிட்டாங்களா?''

''உம்.''

''நான் திரும்பி வந்திட்டேன்.''

''வந்திட்டியா?''

''வந்திட்டேன். வந்திட்டேனா?''


''போதும். இப்ப அந்த வீட்டை அடையாளம் காட்டுவாயா?''

''காட்டுவேன். காட்டுவேனா?''

''காட்டமாட்டாயா?''

''காட்டுவேன், காட்டுவேன்!''

பக்கத்து வீட்டுக்குப் போலீசார்





வந்தனர். அவர்களில் இன்ஸ்பெக்டரும் இருந்தார்.

சுருட்டியைத் தூக்கிக் கொண்டு நான் சென்றேன். இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல சாதுவாக அது என் கைகளில் இருந்தது.

போலீசார் கை ரேகைகளைப் பதிவு செய்தார்கள். வால் வெட்டப்பட்ட கறுப்பான நாய் ஒன்று மோப்பம் பார்த்தது.

இன்ஸ்பெக்ட்டரிடம் சென்றேன். ''இந்தப் பூனைக்குத் திருடர்களின் வீடு தெரியும்,'' என்றேன்.

''பூனைக்கா?''

''ஆமாம்.''

''விளையாடுகிறீர்களா?''

''இல்லை.''

''இந்தப் பூனை திருடர்களின் வீட்டைக் காட்டுமா?''

''காட்டும்.''

''காட்டாவிட்டால், பூனையை என் நாயிடம் கொடுத்து விடுவேன்.''

''பாவம், உங்கள் நாய்!''

''வாங்க, போகலாம்.'' இன்ஸ்பெக்ட்டர் நடந்தார்.

சுருட்டி என் கைகளிலிருந்து துள்ளித் தரையில் குதித்தது. ஓடிச் சென்று இன்ஸ்பெக்டர் முன்னால் ஒய்யாரமாக நடந்தது.

போலீசார் தொடர்ந்தனர். ஒரு கூட்டம் பின்னே சென்றது.

சுருட்டி முன்னே தலை உயர்த்தி நடக்க, போலீசார் தொடர, மக்கள் கூட்டம் பின்னே செல்ல, தெருக்களிலும் சாலைகளிலும் செல்பவர்கள் நின்று வேடிக்கை பார்த்தனர். சைக்கிள்களும் ஸ்கூட்டர்களும் மோட்டார் சைக்கிள்களும் வண்டிகளும் ரிக்ஷாக்களும் கார்களும் பஸ்களும் லாரிகளும் நின்றன.

ஒரு வீட்டின் முன்னே சுருட்டி நின்றது. இடப் பக்கம் திரும்பியது. நேராக நடந்து, படி ஏறி அந்த வீட்டின் வாயிற் கதவை அது முன் கால்களால் பிறாண்டியது.

இன்ஸ்பெக்ட்டர் முன்னே சென்று, தன் கையில் இருந்த தடியால் கதவைத் தட்டினார்.

கதவு லேசாகத் திறந்தது. வீட்டினுள்ளிருந்து திறந்த இடைவெளி வழியே ஒருவன் எட்டிப் பார்த்தான். போலீஸ்காரர்களைக் கண்டதும் அவன் கதவைச் சாத்த முயன்றான்.

இன்ஸ்பெக்டர் கதவை எட்டி ஓர் உதை உதைத்தார். அகலத் திறந்து சுவரோடு மோதியது கதவு. அந்தப் பக்கம் இருந்தவன் மல்லாந்து விழுந்தான். வீட்டினுள் நுழைந்தது போலீஸ்.


திருட்டுப் போனவை அனைத்தும் கிடைத்தன.

திருடர்கள் கைது செய்யப்பட்டனர்.

பக்கத்து வீட்டுக்காரர் சுருட்டி பால் சாப்பிட என்று சின்ன வெள்ளித் தட்டு பரிசளித்தார்.

அந்த ஆண்டு போலீஸ் விழாவின் போது, இந்தப் பூனைக்குச் சிவப்பு ரிப்பனில் கட்டிய தங்க மெடலைக் கழுத்தில் அணிவித்தார்கள். பாராட்டிப் பேசினார்கள். கைதட்டினார்கள்.

சுருட்டி சிந்தித்துச் சிந்தித்துச் சொல்ல, நான் அதைக் கையில் வைத்துக் கொண்டு நன்றி கூறினேன்.


டேய் கடையில் போய் ஒம்பது காசுக்குக் கடுகு வாங்கி வாங்கடா!
சரிம்மா!
மறந்துடாம இருக்கணுமே!
கோபாலா!
ஏன் சார்?
எங்கே போறே?
கடைக்கு போறேன்!
என்ன வாங்க?
கடுகு வாங்க!
மாலா

குழந்தைகள் தின விழா

குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், நேரு நூற்றாண்டு நிறைவு விழாவும் குழந்தைகள் தின விழாவும் சென்ற நவம்பர் மாதம் மயிலை சீனிவாச சாஸ்திரியார் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றன.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி மு. மு. இஸ்மாயில் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, ஏ.வி.எம். அறக்கட்டளை, கோவை எல்லப்பா ரங்கம்மாள் அறக்கட்டளை, கோவை கவிஞர் செல்லகணபதி வழங்கும் செல்லப்பன் நினைவு பரிசு ஆகியவற்றின் சார்பில் .நடந்த குழந்தை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

அப்பொழுது அவர் சொன்னார்:

''தாய்ப் பாலானது பிறந்த இரண்டு வருடம் வரை குழந்தைகளுக்குத் தரப்பட வேண்டுமென்று கி. பி. 672 இல் எழுதப்பட்ட திருக்குர்ரானில் குறிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்தே தாய்ப்பாலின் மகத்துவத்தை உணரலாம். குழந்தைகளைத் தாய்ப்பால் கொடுத்து வளர்த்தால் அவர்களுக்கு நோய் வருவதற்கான அறிகுறியே இல்லை. நோயும் வராது. அதுபோல குழந்தைகளுக்குச் சிறு வயது முதலே நல்ல நெறிகொண்ட இலக்கியங்களையும் போதனைகளையும் அளித்து வந்தால் குழந்தைகளுக்குத் தீய சொல் சொல்லவோ, தீய செயலைச் செய்யவோ தோன்றாது. தெரியவும் தெரியாது. குழந்தை எழுத்தாளர்கள் குழந்தைகளுக்காக எப்போதும் நல்ல கதைகளையே எழுத வேண்டும்.''

அடுத்துப் பேசிய நூலக இயக்குநர் பழனிவேல் அவர்கள், ''குழந்தைகளுக்காக எவ்வளவோ புத்தகங்கள் வெளிவருகின்றன. எவ்வளவோ புதுப்புது எழுத்தாளர்கள் உருவாகிறார்கள். அவர்கள் அனைவரும் பல வகையான நூல்களைப் படைக்க வேண்டும். எல்லா நூலகங்களிலும் குழந்தைகளுக்காகத் தனிப்பிரிவு ஏற்படுத்த வேண்டிய முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன,'' என்றார்.

சிறப்புரையாற்றிய 'இந்தியா டுடே' தமிழ் இதழாசிரியர் மாலன் அவர்கள் பேசினார்.

''குழந்தைக் கவிஞருடைய சிரித்த முகம் எனக்கு நிரம்பப் பிடிக்கும். கோபமே வராமலிருக்கிறதே இவருக்கு. இவரைப் போல் யாராவது இருக்க முடியுமா? இது போன்ற சந்தேகம் பலமுறை எழும். நான் இளமையின் முறுக்கிலிருந்த போது அழ. வள்ளியப்பாவிடம் எப்போதும் காரசாரமாகத்தான் பேசுவேன். ஆனால், எப்படிப்பட்ட கேள்விகள் கேட்டாலும் சாந்தமாகச் சிரித்துக் கொண்டே பதில் சொல்வார். இந்த நற்பண்பு என்னை வியப்பிலாழ்த்தும்.

குழந்தைக் கவிஞரைப் போல்



• மு. மு. இஸ்மாயில்

அழ. வள்ளியப்பா

• மாலன் •

ஒரு நிகழ்ச்சியைச் சிறுவர் மனத்தில் புரியும்படி எடுத்துச் சொல்பவர் எவரும் இருக்க முடியாது. நானும் என் மகனும் அகில இந்திய வானொலி பொன் விழா நிகழ்ச்சிக்காகப் போயிருந்தோம். அங்கு அவரும் வந்திருந்தார். என் மகன் என்னிடம், 'பேகன் ஏன் மயிலுக்குப் போர்வையைப் போர்த்தினான்? பாரி ஏன் முல்லைக் கொடிக்குத் தன் தேரைக் கொடுத்தான்? ஒரு மரத்தை வெட்டி அந்த இடத்தில் பதித்து இருக்கக் கூடாதா?' என்று கேட்டான். எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

அருகிலிருந்த குழந்தைக் கவிஞர் அவனிடம், 'நீ மற்றவர்களுடன் சேர்ந்து கிரிக்கெட் விளையாடுகிறாய். பந்து வந்து உன் தலையில் படுகிறது. நெற்றியில் ரத்தத்துடன் வீட்டிற்குச் செல்கிறாய். உடனே, அங்கே உங்க அம்மா கையும் ஓடாமல், காலும் ஓடாமல், உடனடியாகத் தான் கட்டியிருக்கும் புடைவைத் தலைப்பைக் கிழித்து — 2000 ரூபாய் பட்டுப் புடவையாக இருந்தாலும் சரி, உனக்குக் கட்டுப் போடுகிறார்கள். அது போலத்தான் இதுவும். புரிந்ததா?' என்றார். என் பையனுக்குப் புரிந்தது. எனவேதான் சொல்கிறேன் சிறுவர்களுக்குப் புரிகிற மாதிரி எளிய உதாரணங்களை வைத்துப் பேசுகிறவர் எவருமே இல்லையென்று!

குழந்தைக் கவிஞர் இறந்து விட்டார் என்ற செய்தியைத் தொலைக் காட்சியில் பார்த்ததும், கேட்டதும் எனக்குப் பெரிய அதிர்ச்சி. இனி குழந்தை எழுத்தாளர் சங்கம் எப்படி நீடிக்கும் என்ற கேள்விதான் என் மனத்தில் எழுந்தது. ஆனால் இன்று, இந்தக் கூட்டம் அந்தச் சந்தேகத்தைச் சுத்தமாக அழித்து விட்டது!''

அன்று 53 குழந்தை நூல்கள் வெளியிடப்பட்டன.

குழந்தை எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் ஒருவர் விடாமல் அனைவருக்கும் நன்றி கூறி கூட்டத்தை எட்டு மணியளவில் இனிது முடித்தார்.

— மாயன்

விசித்திரச் செய்திகள்



புதுமையான தண்டனை!

அமெரிக்காவில் பிளிசாண்டன் நகர கோர்ட் நீதிபதி ஓர் ஆசாமிக்குப் புதுமையான தண்டனையை விதித்தார். அந்த ஆசாமி வேறு ஒருவருடைய காரை வைத்துக் கொண்டு திருப்பித்தர மறுத்து விட்டார் என்பதற்காக, 'எனக்குச் சொந்தம் இல்லாத ஒன்றை நான் இனிமேல் எடுக்க மாட்டேன்,' என்று ஆங்கிலத்தில் 10,000 தடவைகள் எழுதிக் காட்ட வேண்டும் என்றும் அதுவரை சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்புக் கூறினார் நீதிபதி!

ஒரு லட்சம் மண்டையோடுகள்!

கேரளத்தில் ஒரு லட்சம் மண்டையோடுகளைக் கொண்ட ஒரு தோட்டத்தை உருவாக்க பி. வி. ராமச்சந்திரன் பிள்ளை என்பவர் முயற்சி செய்கிறார். இந்த ஒரு லட்சம் மண்டையோடுகளும், களிமண்ணால் செய்யப்படுகின்றன. எதற்கு இதெல்லாம்? வாழ்க்கையில் நிம்மதி இல்லாதவர்களும், மன அமைதி தேவைப்படுகிறவர்களும் இந்த மண்டையோட்டுத் தோட்டத்தில் ஒரு முறை உலவிவிட்டு வந்தால், எல்லாக் கவலைகளும் பறந்துவிடும் என்கிறார் அவர். அவர் ஒரு மனநோய் மருத்துவ ஆராய்ச்சியாளர். இதுவரை 500 மண்டையோடுகளை அமைத்திருக்கிறார்!

— ஆழி.



டாக்டர் பக்கம் ....

பேனிலிருந்து தலையைப் பேணிக்காக்க..



டாக்டர். கு. கணேசன்

ராஜப்ரியா மாயவரத்தில் இருக்கிறாள். என் நண்பரின் பேத்தி. வயது பன்னிரண்டு ஆங்கிலப் பள்ளியொன்றில் ஆறாம் வகுப்பில் படிக்கிறாள். மிகவும் புத்திசாலிப்பெண்.

சென்ற மாதம் எங்கள் ஊரில் நடந்த மணிமேகலை மன்ற விழாவில் கலந்து கொள்வதற்காகத் தன் தாத்தாவின் துணையோடு ராஜப்ரியா ராஜபாளையம் வந்திருந்தாள். அச்சமயம் அவள் என் வீட்டிற்கு வருகை தந்தாள்.

அன்று மதியம் நாங்கள் அனைவரும் சாப்பிட்டு முடித்த பிறகு, ராஜப்ரியா என்னைக் கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்து விட்டாள். நானும்பொறுமையாகப் பதில்சொன்னேன்.

அப்போது எங்களுக்குள் நடந்த உரையாடலையே இப்போது நீங்கள் படிக்கப் போகிறீர்கள்:

ராஜப்ரியா: மாமா, நீங்கள் 'கோகுல'த்தில் எழுதிவரும் டாக்டர் பக்கக் கட்டுரைகளை ஒன்று விடாமல் நான் படித்து வருகிறேன். அவை எல்லாமே எனக்கு மிகவும் பயனுள்ளவைகளாக இருந்தன. ஆனால் என் போன்ற பெண்களிடத்தில் சகஜமாகக் காணப்படும் பேன் தொந்தரவைப் பற்றி நீங்கள் இதுவரை எழுதவில்லை. எனவே, அதைப் பற்றி இப்போதுநான்தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன், மாமா.

நான்: அப்படியா! மிக்க மகிழ்ச்சி, ராஜப்ரியா! பெண்களுக்கும் பெண் குழந்தைகளுக்கும் சகஜமாக வரக்கூடிய பேன் தொல்லையைப் பற்றி நீ அறிந்து கொள்ள ஆசைப்படுவது நியாயம்தான். உன் ஆவலைப் பூர்த்தி செய்வதற்காக, பேன் பற்றிய பல செய்திகளை உனக்கு இப்போது சொல்லப் போகிறேன், கேட்கிறாயா?

ராஜப்ரியா: ஓ! நான் கேட்கத் தயார்தான், மாமா!

நான்: பேன் என்பது ஒருவகை ஒட்டுண்ணி. 'லைஸ்' (LICE) என்று அதனை ஆங்கிலத்தில் அழைப்பார்கள். பேன் பார்ப்பதற்குக் கறுப்பாக இருக்கும். ஒரு பேனின் மொத்த அளவே ஒரு குண்டூசியின் தலையளவு தான் இருக்குமென்றால், அது அளவில் எத்தனை சிறியது என்பதை நீ புரிந்து கொள்.

ராஜப்ரியா: பேன்கள் தலையில் மட்டும்தான் இருக்குமா மாமா?

நான்: இல்லை, ராஜப்ரியா. பேன்கள் தலையில் மட்டுமின்றி மார்பு, ஜென்மேந்திரியப் பகுதி ஆகிய இரு இடங்களிலும் இருக்கும். தலைப் பேன் பெண்களுக்கும் மற்றவகைப் பேன்கள் ஆண்களுக்கும் வருவது இயல்பு.

ராஜப்ரியா: பேன்கள் முட்டை

யிடும் என்று சொன்னீர்களே! அவை எங்கே முட்டையிடுகின்றன?

நான்: பேன்கள் நம் தலைமுடியின் அடிப்பாகத்தில் முட்டையிடும். அப்படி முட்டையிட்ட எட்டாவது நாளில் 'ஈறுகளை' வெளிப்படுத்தும். இந்த ஈறுகள் அடுத்த எட்டு நாட்களில் முழுப் பேனாக மாறும். பின்பு அவை நம் தலையில் உள்ள அழுக்கையும், தலைச் சருமத்திலிருந்து இரத்தத்தையும் உறிஞ்சி உயிர் வாழும்!

ராஜப்ரியா: ஒருவருக்குப் பேன் உள்ளது என்பதை எப்படி மாமா அறிந்து கொள்வது?

நான்: ஒருவருக்குப் பேன் வந்துவிட்டது என்று பறை சாற்றக் கூடிய முதல் அறிகுறி தலையில் அரிப்பு உண்டாவது தான். அதிலும் ஆரம்பத்தில் இரவு நேரங்களில் அரிப்பு அதிகமாக இருக்கும். நாட்கள் செல்லச் செல்ல இரவு, பகல் இரு நேரங்களிலும் அரிப்பு உண்டாகும். இச்சமயத்தில் நம் தலையில் பேன்களும் ஈறுகளும் ஓடுவதைக் கண்ணால் பார்க்கலாம்!

ராஜப்ரியா: பேன்களினால் நமக்கு என்ன மாதிரித் தொந்தரவுகள் வரும், மாமா?

நான்: பேன் தொந்தரவால் முதலில் நமக்குத் தூக்கம் கெடும். அடிக்கடி தலையைச் சொறிய நேர்வதால், தலைச்சருமத்தில் சிறுசிறு கீறல்கள் உண்டாகும். நம் விரல் நகங்களில் அழுக்குச் சேர்ந்திருந்தால், அவை சொறியும் போது சருமக் கீறல்களில் சேர்ந்து சீழ் பிடிக்கும். இதனால் பின்புறத் தலையில் நெறி கட்டும். பின்பு காய்ச்சல் வரும். பெரும்பாலும் மேற்சொன்ன தொந்தரவுகள் அனைத்தும் குழந்தைகளுக்கே அதிகமாக வரும்.



ராஜப்ரியா: ஏன் மாமா, இந்தப் பேன் தொந்தரவு எல்லோருக்குமே வருமா?

நான்: இல்லை, ராஜப்ரியா! அசுத்தம் நிறைந்தவர்களிடத்திலும், நெருக்கடியான இடங்களில் வசிப்பவர்களிடத்திலும் சுகாதாரமறியாத குழந்தைகளிடத்திலும் பேன் தொந்தரவு அதிகமாக வருகிறது.

ராஜப்ரியா: ஆண்களை விடப் பெண்களிடத்தில்தானே மாமா பேன் தொந்தரவு அதிகமாகக் காணப்படுகிறது? அதற்கு ஏதேனும் பிரத்தியேகக் காரணம் உள்ளதா, மாமா?

நான்: உண்டு, ராஜப்ரியா! ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் இயற்கையிலேயே முடி அதிகமாகவும் நீளமாகவும் உள்ளது. இதனால் அதனைச் சுத்தமாகப் பராமரிப்தில் சிக்கல் உண்டாகிறது. இதன் காரணமாகவே பெண்களுக்குத் தலைப் பேன் அதிக அளவில் தொற்றிக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது!

ராஜப்ரியா: வீட்டில் ஒருவருக்குப் பேன் வந்து விட்டால் வீட்டார் அனைவருக்குமே பேன் தொற்றி விடுகிறதே... அது ஏன் மாமா?

நான்: வீட்டில் மட்டுமல்ல; பள்ளி, கல்லூரி விடுதி அறைகளில், கோயில், மடம் போன்ற பொது இடங்களில் பல பேர் ஒரே அறையில் அருகருகில் படுத்து உறங்கும் போது ஒருவர் தலையிலிருந்து மற்றொருவருக்குப் பேன் தொற்றிக் கொள்ளும். இது போலவே பேன் உள்ளவர் உபயோகித்த சீப்பையும் துண்டையும் மற்றவர்கள் உபயோகித்தாலும் பேன் தொற்றிக் கொள்ள வாய்ப்பு உண்டு.



துறவுக்கு ஐந்து காரணங்கள்

அறிவாளியான மந்திரி ஒருவர் வேலை வேண்டாமென்று விலகித் துறவறத்தில் ஈடுபட்டார். அமைச்சர் பதவியையே உதறித் தள்ளிய மந்திரி என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று அறிய விரும்பிய அரசரிடம், ''அவர் இறை தியானத்தில் ஈடுபட்டுள்ளார்'' என்று அரசவைப் பிரதானிகள் அறிவித்தார்கள்.

துறவு கொண்டிருந்த மந்திரியைத் தேடிச் சென்று, ''பதவியைத் துறந்து பக்தியில் ஈடுபட்டதன் காரணம் என்ன?'' என்று கேட்டார் மன்னர்.

அவர் கூறிய பதிலாவது:

''அதற்கு ஐந்து காரணங்கள் உண்டு. முதலாவது நீங்கள் உட்கார்ந்திருக்கும் போது உங்கள் முன்னிலையில் நான் நிற்க வேண்டியிருந்தது. வணக்கத்திலும்கூட, உட்கார்ந்து வணங்க ஏவியுள்ள இறைவனை இன்று நான் வழிபடுகிறேன். இரண்டாவது — நீங்கள் உண்டு களிக்கும்போது நான் உணர்வற்று நின்றிருந்தேன். இப்பொழுது தனக்கு உணவுத் தேவை ஏதுமின்றி உணவளிக்கும் இறைவனை அறிந்து கொண்டேன். மூன்றாவது — நீங்கள் உறங்கும் போது, நான் காவல் காத்து நின்றேன். இன்றோ நான் தூங்கும் போது இறைவன் எனக்குப் பாதுகாவலனாக இருக்கிறான். நான்காவது—என் அரசன் இறந்துவிட்டால் எனக்கு என்ன கேடு சூழுமோ என அஞ்சி வாழ்ந்து வந்தேன். இன்றோ, இறப்பே இல்லாத இறைவனை அடைந்திருக்கிறேன். ஐந்தாவது நான் தவறிழைத்து விட்டால் நீங்கள் மன்னிக்க மாட்டீர்களோ என்ற அச்சம் எனக்கிருந்தது. ஆனால் இன்றோ நாளொன்றுக்கு நூறு தவறுகள் செய்தாலும், அருள் கூர்ந்து என்னை மன்னித்து ஆதரிக்கும் இறைவன் துணையிருக்கிறான் என்ற துணிவு இருக்கிறது.

— ஆர். ஆமீனா பீவி, நீடூர்.

ராஜப்ரியா: சரி மாமா, பேன் தொந்தரவிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லுங்கள் சீக்கிரம்....

நான்: சொல்கிறேன், நாம் அனைவரும் முதலில் உடலைச் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணிக் காக்க வேண்டும்.

தினமும் காலையில் குளிக்கும் போது சோப்பு நுரையில் தலை முடியைக் கழுவ வேண்டும். தரம் வாய்ந்த ஷாம்பூ தேய்த்துக் குளிப்பதும் நல்லது.

தலையில் பேன் வந்துவிட்ட அறிகுறி தென்பட்ட உடனேயே 'செல்சன்' (SELSUN) என்ற பேன் கொல்லி மருந்தைக் கடைகளில் வாங்கித் தலையில் தேய்த்து, சுமார் 15 நிமிடங்கள் ஊற வைத்து, அதன்பின்னர் வெந்நீரில் குளிக்க வேண்டும். ஒரு வாரம் கழித்து மீண்டும் ஒரு முறை இதே மாதிரி செல்சனை உபயோகித்துத் தலை குளித்தால் தலைப் பேன் ஒழியும்.

செல்சனைப் போலவே மருந்துக் கடைகளில் பலவகை பேன் கொல்லி மருந்துகள் கிடைக்கின்றன. மருந்துவர் ஆலோசனையின் பேரில் அவற்றை உபயோகிக்கலாம்.

இவை தவிர, வீட்டிலேயே தயாரித்து உபயோகிக்கக் கூடிய மிக எளிய முறை ஒன்று உள்ளது. அதாவது மண்ணெண்ணையையும், ஆலிவ் எண்ணெய்யையும் சம அளவில் கலந்து, சுமார் 15 மி.லி. எடுத்து தலையில் தேய்த்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் இரண்டு மணி நேரம் கழித்து வெந்நீரில் குளித்தால் தலைப்பேன் ஒழியும். மண்ணெண்ணெய் வாசனை நீங்க மணம் கமழும் சோப்பால் தலைக்குக் குளிக்கலாம்.

மேற்சொன்ன முறைகள் அனைத்தையும் வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் ஒரே சமயத்தில் நடைமுறைப் படுத்தினால்தான் பேன்கள் முழுமையாக ஒழியும்! மீண்டும் பேன் தொல்லை இருக்காது.

தலைப் பேனும் சீழ் பிடித்த புண்களும் அதிகமாக உள்ள குழந்தைகளுக்கு, உடனடி நிவாரணம் கிடைப்பதற்காகத் தலைமுடியை மழித்து விடுவதில் தவறில்லை. தலைச் சுத்தம் தலைப் பேனை அழிக்கும் என்பதை அனைவருமே உணர்ந்து நடந்தால், தலைப் பேன் நம் தலைக்கு வர அஞ்சும்.

ராஜப்ரியா: நன்றி மாமா! தலைப் பேனுக்கு இனி நான் கவலைப்படத் தேவையில்லை! நீங்கள் சொன்ன சுகாதார முறைகளைக் கடைப்பிடித்து பேனை ஒழித்து விடலாம் என்ற நம்பிக்கை எனக்கு வந்துவிட்டது.


நான்: மகிழ்ச்சி, ராஜப்ரியா! டிபன் சாப்பிடும் நேரம் நெருங்கி விட்டது. வா, போகலாம்!

சந்திரனும் மனிதனும்

ஆழி



■ பூமியிலிருந்து சந்திரனை நோக்கிச் செல்லும்போது, நமக்குக் கீழே இருப்பதாகத் தோன்றிய பூமி திடீரென்று மேலே தோன்றும். இது எப்படி? பிரபஞ்சம் முழுவதுக்கும் மேல், கீழ் என்பது கிடையாது!



சந்திரனிலும் இரவு-பகல் உண்டு. ஆனால், அதன் ஒரு பகல் என்பது பூமியில் இரண்டு வாரங்களுக்குச் சமம்; அதேபோல் ஓர் இரவு என்பது பூமியில் இரண்டு வாரங்களுக்குச் சமம்!

சந்திரனில் பட்டப் பகலிலும், நல்ல சூரிய வெளிச்சத்தில் வானம் கறுப்பாகவே இருக்கும்! பல நூற்றுக் கணக்கான நட்சத்திரங்கள் நன்கு தெரியும்; ஆனால், அங்கு வாயு மண்டலம் இல்லாததால் நட்சத்திரங்கள் மினுமினுக்க மாட்டா.




■ நமக்கு எப்போதும் சந்திரனின் ஒரே பக்கம்தான் தெரிந்துகொண்டிருக்கிறது. மறுபக்கம் தெரிவதில்லை.

பூமியிலிருந்து சந்திரன் 3,84,400 கி.மீ. தூரத்தில் இருக்கிறது.

பூமியின் புறப்பரப்பில் 1/16 பங்குதான் சந்திரனின் புறப்பரப்பு.

பூமியின் அடர்த்தியில் சந்திரன் 1/81 பங்குதான்.


சந்திரனில் செடி கொடி, உயிரினம், காற்று, தண்ணீர் எதுவும் கிடையாது; பாலைவனம்தான்!



நமக்குப் பௌர்ணமியாக இருக்கும் போது, சந்திரனில் அமாவாசையாக (அமாவாசைப் பூமியாக) இருக்கும்.



சந்திரனில் தண்ணீர் இல்லை. இருந்தால் எப்படி இருக்கும்? பகலில் கொதிக்கும்; இரவில் உறைந்துவிடும்!




சந்திரனில் ஈர்ப்பு விசை மிகக்குறைவு. அதனால் 60 கி. எடையுள்ள மனிதன் 10 கி. ஆக இருப்பான். பூமியில் 50 கி. எடையைத் தூக்குகிறவன் சந்திரனில் 300 கி. எடையைத் தூக்கலாம்!



1961, ஏப்ரல் 12-இல் தான் ரஷ்யாவைச் சேர்ந்த 'யூரிககாரின்' முதன் முதலாக விண்வெளியில் பூமியைச் சுற்றி வந்தார்.




1963; ஜூன் 16-இல் முதன் முதலாக விண்வெளியில் சுற்றிவந்த பெண்மணி ரஷ்யாவைச் சேர்ந்த 'வாலண்டினா தெரஷ்கோவா'.



1969, ஜூலை 20-இல் சந்திரனில் காலடி எடுத்து வைத்த முதல் மனிதர் அமெரிக்கரான 'நீல் ஆம்ஸ்ட்ராங்'.



வெடி மருந்தைப் பயன்படுத்தி மேலே போகும் வாணத்தைக் கண்டு பிடித்தவர்கள் சீனர்கள். சீனாவில் 15-ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே முதன் முதலாகச் சந்திரனுக்குப் போகும் 'ராக்கெட்' உருவாக்கப் பட்டது என்று கூறுகிறார்கள். 'வான்ஹு' என்ற சீன அரசாங்க அதிகாரி ஒருவர் மூங்கிலினாலான பல்லக்கு ஒன்றில் அமர்ந்து கொண்டு, அடியிலிருந்த 47 வாணங்களில் தீ வைக்கச் செய்தாராம். ஒரேசமயத்தில் 47 வாணங்களும் பற்றிக் கொண்டுப் பல்லக்கு மேலே கிளம்பியதாம். ஆனால் சந்திரனை நோக்கிக் கிளம்பிப் போன பல்லக்கு என்ன வாயிற்று என்பது தெரியாது!



விண்வெளி விஞ்ஞானி பிரத்தியேகமான உடை அணியாவிட்டால் என்ன வாகும்? காற்றில்லாத விண் வெளியில் செல்லும் போது, இரத்த நாளங்கள் வெடித்து இரத்தம் கசியும்; விழிகள் பிதுங்கிக் கொண்டு வந்து விடும்!



பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—



நீங்களே செய்யும் எலெக்ட்ரானிக் கிட்!

ஒரே 'சிப்' மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகள்!

''சிப்-சாப்'' நீங்களே செய்யும் எஜுகேஷனல் கிட் நூற்றுக்கும் மேற்பட்ட பகட்டான பரிசோதனைகள் கொண்டது. வித்தையை விளையாட்டாய் கற்பிக்கவென்றே திட்டமிடப்பட்டது!

உங்கள் குழந்தை நாளைய உலகில் வெற்றியடைய வழிசெய்யுங்கள்!

எலெக்ட்ரானிக் யுகத்தின் சவால்களை சமாளிக்கத் தகுதியான சாதனம் ''சிப்-சாப்''!

அம்சங்கள்: பாட்டரியால் இயங்கக் கூடியது - பாதுகாப்பானது * எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது * ஸால்டரிங் இல்லை – கனெக்ஷனுக்கு ''பேட்டெண்டுடன்'' கூடிய விசை * கையாள எளிது.

பரிசோதனைகள்: * மியூஸிகல் ஆர்கன்* ஷூட்டிங் விளையாட்டு * ஃபயர் அலார்ம்* ஒயர்லெஸ் பீப்பர் * ஸிக்னல் டிரான்ஸ்மிட்டர்* லைட் ஆபரேட் அலார்ம் இன்னும் பலப் பல.

ரூ. 350/- மட்டும் - வரிகள், அனுப்பும் செலவு தனி.

''எலக்ட்ரானிக்ஸ் எல்லோருக்கும்''

எஜூடெக்

187, முதல் மாடி, வீரபிள்ளை தெரு,
பெங்களூர் – 560 001, இந்தியா,
போன்: 578801.

எனக்குத் தேவை ''சிப்-சாப்'', கிட் ஒன்றுக்கு ரூ. 400/- வரியும், அனுப்பும் செலவும் சேர்த்து. தயவு செய்து ....கிட்/கிட்கள் அனுப்பவும். இத்துடன் 'கிராஸ்' செய்யப்பட்ட டி.டி./போஸ்டல் ஆர்டர் (ஒரு கிட் ரூ. 50/- என்ற கணக்கில்) முன்பணமாக அனுப்புகிறேன். மீதித்தொகையை வி.பி.பி. வந்து சேர்ந்தவுடன் அனுப்புவதாக உறுதியளிக்கிறேன்.

பெயர் ....

விலாசம் ....

பள்ளி ☐ கல்லூரி ☐

Climb ads/Chip-Chap/890]

REGISTERED NO. TN-MS (5) 281
Registered as a Newspaper in Sri Lanka

